(ALL RIGHTS RESERVED.)
இந்தப் பத்ரிகைக்குரிய விஷயங்களை அனுமதியின்றி ஒருவரும் ப்ரசுரிக்கக்கூடாது.

பிழைக்கும் வழி

PRACTICAL LIFE.

ஜி., ஏ. வைத்யராமன், பி.ஏ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B.A., EDITOR.

புஸ்தகம் 6. Vol. 6. — ஆநந்த வருஷம் வைகாசி மாஸம் —MAY 1914. — ஸஞ்சிகை 5. No. 5.

பொருளடக்கம்.

வ்யாஸங்கள்—	பக்கம்.
குடமிளகாய் ஸாகுபடி —பு. து. ரத்னம் பிள்ளை	226
மாட்டு உரம்	228
கால்நடை வளர்த்தல்	231
த்ராக்ஷைக் கொடி பயிர்செய்தல்	233
ஒட்டுக் கட்டுதலில் ஒரு நவீன முறை	234
இரண்டு நயமான உழவுக் கருவிகள்	235
கரும்புப் பயிரும் பூஸாரமும்	236
ஆடிட்டும் இன்ஸ்பெக்ஷனும்	237
வெண்கலப் பாத்ரம் செய்யும் தொழில்	241
நவக்ரஹங்கள் —எம். ஸி. எஸ். அனந்தபத்மநாப ராவ்	245
இனி பிறக்கப்போகிறவர்களுக்கு உயிலெழுதி வைத்தல்	249
இந்தியாவில் ஸுகாதாரம்	253
விதைகள் முளைக்கும் விதம்	257
கீழ்நாடுகளிலும் மேல்நாடுகளிலும் ஸ்த்ரீகளின் நிலைமை	261
ரெவரெண்ட் டாக்டர் மில்லர், ஸி. ஐ. இ.	265
ஒரு வாலிபன் வாதம்	267
விவஸாயப் பகுதி	226
கோவாபரேஷன் பகுதி	237
வ்யாபாரப் பகுதி	241
வித்யாவிஷயப் பகுதி	245
வ்யவஹாரப் பகுதி	249
ஸுகாதாரப் பகுதி	253
பையன்கள் பகுதி	257
ஸ்த்ரீகள் பகுதி	261
ஜீவிய சரித்ரம்	265
சிறு கதைகள்	267
பகுதிக்குறிப்புகள்	269
மாஸ வர்த்தமானம்	273
காலஸ்திதி	279
பஞ்சாங்கம்	280

CONTENTS.

Articles—	PAGES.
The Cultivation of Capsicum Grossum —P. D. Ratnam Pillai	226
Cattle Manure	228
Cattle Breeding	231
Grape Cultivation	233
A New Method of Grafting	234
Two Cheap Agricultural Implements	235
Sugar-Cane and the Soil	236
Audit and Inspection	237
Bell-Metal Industry	241
Planets —M. C. S. Anantha Padmanaba Row	245
Bequests in Favour of Unborn Persons	249
Sanitation in India	253
How Seeds Grow	257
Women in the East and the West	261
The Rev. Dr. Miller, C.I.E.	265
A Lad's Reasoning	267
The Agricultural World	226
The Co-operative World	237
The Commercial World	241
The Educational World	245
The Legal World	249
The Sanitary World	253
The Boys' World	257
The Ladies' World	261
Biography	265
Short Stories	267
Departmental Notes	269
Diary of the Month	273
Season Report	279
Calendar	280

G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetti Street, Georgetown, Madras.
ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3 & 4, ஸங்குராம செட்டி தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்.

Books at Concession Rates to Subscribers of "The Practical Life"

The Life and Teachings of Buddha.—By the Anagarika Dharmapala. Price As. 12. To Subscribers, As. 8.

Essentials of Hinduism.—A Symposium by representative Hindus. Price As. 8. To Subscribers, As. 6.

King George's Speeches on Indian Affairs.—*Part I. A complete collection of all the speeches* made by His Majesty during his tour in India as Prince of Wales.

Part II. Full text of all the speeches delivered by His Majesty during the Coronation Durbar Tour. Price Re. 1. To Subscribers, As. 12.

My Indian Reminiscences.—By Dr. Paul Deussen, Professor of the University of Kiel, translated by A. King. Price Re. 1-4. To Subscribers, Re. 1.

The Improvement of Indian Agriculture: Some Lessons from America. By Cathelyne Singh. Price Re. 1. To Subscribers, As 12.

Aspects of the Vedanta.—By various writers. The book also contains the opinions of Max Muller, Dr. Goldstucker, Schopenhauer, Victor Cousin, and Dr. P. Deussen on the Vedanta. Second Edition, As. 12. To Subscribers, As. 8.

Dadabhai Naoroji's Speeches and Writings.—An up-to-date exhaustive and comprehensive collection of his speeches and writings. With a portrait. Price. Rs. 2. To Subscribers, Re. 1-8.

Glimpses of the Orient To-day.—By Saint Nihal Singh. *In this book, Mr. Singh describes the tran*sition that has taken place in Asia during the last few decades, traces the causes of the awakening and offers a prophecy as to its ultimate effect. Price Re. 1. To Subscribers, As. 12.

The Indians of South Africa.—Helots within the Empire ! How they are treated. By H. S. L. Polak. This book is the first extended and authoritative description of the Indian Colonists of South Africa, the treatment accorded to them by their European fellow-colonists, and their many grievances. Price Re. 1. To Subscribers, As. 12.

Essays on Indian Art, Industry and Education.—By E. B. Havell, late Principal of the School of Arts, Calcutta. The subjects dealt with are "The Taj and its Designers," "The Revival of Indian Handicraft," "Art and Education in India," "Art and University Reform," "*Indian Administration and Swadeshi*," "The Uses of Art." Price Re. 1-4. To Subscribers, Re. 1.

All about Delhi.—With 80 illustrations. Price Re. 1-8. To Subscribers, Re. 1-4.

Essays on Indian Economics.—By the late Mahadev Govind Ranade. Price Rs. 2. To Subscribers, Re. 1-8.

The Depressed Classes.—A symposium by *His Highness the Gaekwar of Baroda*, Mrs. Annie Besant, The Hon'ble Mr. Gokhale, Sir Valentine Chirol, Rt. Rev. The Lord Bishop of Madras, The Hon'ble Sir *Narayan Chandavarkar, The Hon'ble Mr. V. Krishnaswami* Aiyar, The Anagarika Dharmapala and others. Price Re. 1. To Subscribers, As. 12.

Light on Life.—A Selection of Five Spiritual Discourses by Baba Premananda Bharati. Price As. 8. To Subscribers, As. 6.

The Indian National Congress.—An account of its origin and growth. Full text of all the Presidential Addresses. Re-print of all the Congress Resolutions. Extracts from all the Welcome Addresses. *Notable Utterances on the Movement. Portraits of all* the Congress Presidents. Cloth Bound. Over 1,100 pages. Crown 8vo. Rs. 3. To Subscribers, Rs 2.

A Fragment on Education.—By J. Nelson Fraser, M.A., *(Oxon.)*, Principal, Secondary Training College, Bombay. Price Re. 1. To Subscribers, As. 12.

Morley's Indian Speeches.—An enlarged and up-to-date collection. Price Re. 1. To Subscribers, As. 12.

Gokhale's Speeches.—An exhaustive and comprehensive collection of his speeches, with a biographical sketch and a portrait Over 1,000 pages. Crown 8vo. Price Rs. 3. To Subscribers, Rs. 2-8.

Swami Vivekananda.—An exhaustive and comprehensive collection of his speeches and writings. *Crown 8vo. 800 pages, with four portraits.* Third Edition, revised and enlarged. Price Rs. 2. To Subscribers, Re. 1-8.

Sri Sankaracharya's Select Works.—The Text in Sanskrit, Devanagiri type, and an English Translation. By S. Venkataramanan, B.A. Containing *more than 700 verses in all and including all his important* works. Bound in Cloth. Price Re. 1-8. To Subscribers, Re 1.

The Swadeshi Movement.—A Symposium by Representative Indians and Anglo-Indians. Re. 1. To Subscribers, As. 12.

Sri Ramanujacharya.—His Life and Times. By S. Krishnaswami Aiyangar, M.A. His Philosophy. By T. Rajagopalachariar, M.A., B.L. Price As. 12. To Subscribers, As. 8.

Sri Madhwa and Madhwaism.—A Short Historic Sketch. By C. N. Krishnaswami Aiyar, M.A. Price As 12 To Subscribers, As. 8.

The Vaishnavite Reformers of India.—Critical Sketches of their Lives and Writings. By T. Rajagopalachariar, M.A., B.L. Price Re. 1. To Subscribers, As. 12.

Shakespeare's Chart of Life: Being *Studies of King Lear, Macbeth, Hamlet, and Othello. By* Rev. William Miller, LL.D., C.I.E. Rs. 4. To Subscribers, Rs. 3.

Essays in National Idealism.—By Ananda K. Coomaraswamy, D. Sc. Popular Edition with 6 illustrations. Re. 1. To Subscribers, As. 12.

Industrial India.—By Glyn Barlow, M.A. Second Edition. Price. Re. 1. To Subscribers, As. 12.

Lift Irrigation.—By A. Chatterton. Second Edition. Price Rs. 2. To Subscribers, Re. 1-8.

☞ *The subscription for the "Practical Life" is Rs. 4. per annum post free. Subscription may commence from any month. Any one who wishes to buy books at the reduced rates must remit one year's subscription in advance. Those in arrears cannot have concession rates.*

G. A NATESAN & CO., BOOKSELLERS, 4, SUNKURAMA CHETTY STREET, MADRAS.

MADRAS : Printed by Thompson and Co., at the "Minerva" Steam Press and Published by G. A. VAIDYARAMAN AND Co., Sunkurama Chetty Street, George Town, Madras.

Rev. Dr. MILLER.
ரெவரெண்ட் டாக்டர் மில்லர்.

பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

PRACTICAL LIFE

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B.A., EDITOR.

புஸ்தகம் 6. Vol. 6. | ஆநந்த வருஷ வைகாசிமீ, MAY 1914. | ஸஞ்சிகை 5. No. 5.

Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, economics, story, biography, citizenship, and popular, scientific and technical education.

'Practical Life' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

	Inland. Rs.	A.	P.		Foreign. Rs.	A.	P.
Per annum ...	4	0	0	... ...	6	0	0
Single copy ...	0	6	0	... ...	0	8	0
Sample copy ...	0	4	0	... ...	0	6	0

RATES OF ADVERTISEMENT.

1 Page ...	5	0	0	per month.
½ do ...	2	8	0	do
¼ do ...	1	4	0	do
1/10 do ..	1	0	0	do

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

Notice to Contributors:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

பிழைக்கும் வழி.

முக்யமாய் விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில், பொருளாதாரம், கதை, ஜீவ்ய சரித்ரம், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான ஒரு மாஸாந்தத் தமிழ்ப்பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள், மாணாக்கர்கள், இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'பிழைக்கும் வழி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

	உள் நாடு.				அந்ய நாடு.		
வருஷம் 1 க்கு ...	4	0	0	...	6	0	0
தனிப்ரதி ...	0	6	0	..	0	8	0
மாதிரி காபி ...	0	4	0	...	0	6	0

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

1 பக்கத்திற்கு	மாஸம் ஒன்றுக்கு	5	0	0
½ பக்கத்திற்கு	,, ,,	2	8	0
¼ பக்கத்திற்கு	,, ,,	1	4	0
1/10 பக்கத்திற்கு	,, ,,	1	0	0

வ்யாஸம்எழுதுகிறவர்கள்கவனிக்கவேண்டியவை

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3, & 4, சங்குராம செட்டித் தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்.

The Agricultural World.

விவஸாயப் பகுதி.

THE CULTIVATION OF CAPSICUM GROSSUM

By
P. D. RATNAM PILLAI.

குடமிளகாய் ஸாகுபடி.

குடம்+மிளகாய் = குடமிளகாய். இது செப்புக் குடம்போலிருப்பதால் இந்தப் பெயர் பெற்று வழங்குகிறது. இது நெடுநாளாய் நமதுநாட்டில் வழங்கிவரும்பயிர்களில் ஒன்று. ஸாதாரண மிளகாயைப்போல் அவ்வளவுகாரமுடையதல்ல. இது அரைத்தோ அல்லது தூள் செய்தோ கறி முதலியவைகள் செய்கிறதற்குப் பிரயோஜனப்படாது. ஆனால் மோர் மிளகாய் போடுவதற்கும், ஸாம்பாரில் முழுமிளகாயாகக் கீறிப்போடுவதற்கும் உபயோகப்படுகிறது. ஜனங்கள் இதை அதிகமாக விரும்புகிறார்கள். இது இந்தியா முழுவதுக்கும் அனுப்பப்பட்டு அந்தந்த நாட்டு ஜனங்களால் உபயோகப்படுத்தப்பட்டுவருகிறது. ஆகையால் இதுவும் ஓர் வ்யாபாரப் பயிரென்று சொல்லலாம்.

மண்:—இது தஞ்சாவூர் செமபூரான் மண்ணுக்கே உரித்தானது. மணல் சார்ந்த மண் ப்ரயோஜனமில்லை. களிப்புள்ள கெட்டியான மண்ணும் உதவாது. வேறிடங்களில் இது பயிராகிறதில்லை. பயிரானாலும் நல்ல பலன் கொடுப்பதில்லை. காய் ஸாதாரண மிளகாய் போலிருக்கும்.

விதை விடுதல்:— விதை விடுவதற்காக வேண்டிய இடத்தைத் தெரிந்தெடுத்து, அதை நன்றாய் ஒன்றரை அடி ஆழத்திற்குக் கொத்தி வாங்கி, புல், பூண்டு, அருகம் வேர் முதலியவைகளெல்லா வற்றையும் நன்றாய்க் களைந்து எடுத்து, மூன்று நான்கு நாள் ஆறப்போட்டு பின்பு சாணி எரு, சாம்பல் முதலிய எருக்களை அதிகமாகப்போட்டு நன்றாய் மறுபடியும் கொத்திவாங்கி ஆறவிடவேண்டும். பின்பு ஒருதரம் கொத்தி 3 அடி அகலம் 4 அடி நீளமாக பாத்திகள் கட்டவேண்டும். ஒவ்வொரு பாத்திக்கும் ஸுமார் பட்டணம படி 12 படி எரு போடவேண்டும். பிறகு பாத்திகளை ஸமன்படுத்தி பாத்தியைக் காலால் நெருங்கப் பாதம் பாதமாகவிருக்கும்படி மிதித்தல் வேண்டும். பிறகு விதையை எடுத்து எங்கும் ஸமனாகவிருக்கும்படி விதைக்கவேண்டும் பிறகும் முன்போலவே மிதித்து, சுற்றுப் பக்கங்களிலுள்ள மண்ணை கையினால் தூள் செய்துகொண்டு, அந்த விதைகள் மறையும்படி தூவ வேண்டும். பிறகு அதனமேல் வைககோல் தெளித்துத் தண்ணீர் விடவேண்டும். தண்ணீரைக் குடத்தினால் வாயில கையை வைத்து மறைத்துக்கொண்டு மண்ணைப் பறிக்காத விதம் விடவேண்டும். சிலர், பூச்செடிகளுக்கு ஜலம் வார்க்கும் தகரத்தால் ஜலம் விடுவதுண்டு. இப்படிச் செய்வதால் ஜலம் மண்ணைப் பறிக்காமலிருக்கும். ஏழுநாள் கழித்தபிறகு முளை கிளம்பி வெளியே வரும். ஏழுநாளும் தினம காலையிலாவது அல்லது ஸாயந்திரத்திலாவது தண்ணீர் விடவேண்டும. முளை கண்டபிறகு மூட்டப்போட்ட வைக்கோலை முளை முறியாதபடி எடுக்கவேண்டும். நன்றாய் வைக்கோல் சிறிதும் இல்லாதபடி எடுத்த பிற்பாடு புல் பூண்டுகள் முளைத்திருந்தால் அவைகளையும் நீக்கிவிடவேண்டும் பிறகு 5 நாள் வரைக்கும் தினம அதிக ஜாக்ரதையாக முளை முறியாத விதம் தண்ணீர் விடவேண்டும். பிறகு இரண்டு நாளுக்கொரு முறையாகவும், ஒரு

வாரம் கழித்தபிறகு மூன்று நாளுக்கு ஒரு முறையாகவும் தண்ணீர் விட்டுக்கொண்டு வர வேண்டும். இவ்விதம் ஒரு மாஸம் கழிந்தபிறகு நாற்று நடும்படியான பக்வத்திற்குவரும். 30 நாளைக்குமேல் 45 நாளைக்குள் நாற்று நட வேண்டும். அதற்கு மேற்படின் நாற்றுகளு வேரூன்றி நடுவதற்கு அவ்வளவு ப்ரயோஜனப் படாது. ஆகையால் நாற்றுக்களை சிறிதாயிருக் கும்போது நடுவதே மிகவும் நல்லது. நாற்றுப் பாத்திகளில்முளைக்கும் புற்பூண்டுகளை அப் போதைக்கப்போது நீக்கவேண்டும்.

பூமி செப்பனிடுதல்:—மேற்கூறியவாறுள்ள பூமியாகத் தெரிந்து எடுத்துக்கொண்டு அதை நன்றாக குறுக்கும் நெடுக்குமாக நாலு சால்கள் உழுது, அதிலுள்ள புற்பூண்டுகளைச் செவ்வையாகக் களைந்துவிட்டு பூமியை யாறப் போடவேண்டியது. ஒருவாரம் ஆனவுடன் முன்களைந்த புற்பூண்டுகளெல்லாம் காய்ந்து எரிந்து சாம்பலாகும்படியான பக்வமாக இருக்கும். அவைகளைக் கொளுத்திச் சாம்பலாக்கி இந்நிலத்திற்கே உரமாகும்படிச் செய்யவேண்டியது. பிறகு ஒரு ஏகருக்கு 30 வண்டி விதம் எருப்போடவேண்டும். மாட்டெரு, ஆட்டெரு, சாம்பல், குப்பைகள் முதலியவைகளை அந்நிலத்தில் கொண்டுபோய்ப்போடவேண்டும். பின்பு இந்த எருவை நில முழுவதும் ஸமமாக நிரவி விட்டு இரண்டுசால் உழவேண்டும். பிறகு மண்வெட்டிகொண்டு ஒரு அடி ஆழத்திற்குக் குறையாமல் ஒன்றரையடி ஆழத்திற்குமேற் படாமல் நன்றாய்க் கொத்திவாங்கவேண்டும். பின்பு பூமியை ஸமன்படுத்தி 5 அடி அகலம் வைத்து நிலங்கொண்டவரையில் சரவுகள் (பாத்திகள்) போடவேண்டும். பிறகும் ஒரு முறை கொத்தி நிரவி, இரண்டடிக்கு ஒரு குழி விதம் மண் வெட்டியினால் ஒழுங்காய்ப்போட்டுக்கொண்டு போகவேண்டும். மிளகாய்க் கன்றுவைக்கும் தினத்தன்றுகாலையில் கன்றுகளைப் பிடுங்கி நிழலில் தண்ணீரில் வைத்திருக்கவேண்டும். மாலையே கன்றுகள் வைக்க உசித்தான வேளை. குழிகளையும்கன்றுவைக்கும் போதே போடவேண்டும். பிறகு குழிகளில் குடத்தினால் தண்ணீர் மொண்டு குடத்தின் வாயில் கையை வைத்துக்கொண்டு குழிக்கு பட்டணம்படி அரைப்படி ஜலம் விதம் ஜலம் ஊற்றிக்கொண்டு போகவேண்டும். தண்ணீர் ஊற்றிக்கொண்டு போகப்போக கன்றுகளை வைத்துக்கொண்டே போகவேண்டும். தண்ணீர் பாய்ச்சுவதற்காக இரண்டு சரவுகளுக்கு நடுவில் வாய்க்கால் தோண்டவேண்டும். இந்த வாய்க்கால் ஓரங்களில் உள்ள குழிகளில் ஒன்றைவிட்டு ஒரு குழிகளில் கத்திரி நாற்றுகள் விடவேண்டும். இவ்விதம் நிலமுழுவதும் கன்றுகளை நடவேண்டும்.

கன்றுகளுக்குத் தண்ணீர் விடல்:—கன்றுகள் வைத்த பத்துநாள் வரையில் தினம் காலையில் தண்ணீர் மொண்டு ஊற்றிவரவேண்டும். பிறகு ஒன்று விட்டு ஒரு நாளாக ஸுமார் பத்துநாள் ஜலம் ஊற்றிவரவேண்டும். இதற்குள் கன்றுகளெல்லாம் நன்றாய் வளர்ந்தும் புல்பூண்டுகள் முளைத்தும் இருக்கும்.

களைகோத்தலும் தண்ணீர் பாய்ச்சலும்:—களைக்கொட்டுகொண்டு கன்றுகளின் வேர் அறாமல் களைகொத்திப் புல்பூண்டுகளை நீக்கிவிட்டு, இரண்டு நாள் காயப்போட்டு பிறகு 4 அடி அகலம்வைத்துச் சிறு பாத்தியாகக்கட்ட வேண்டும். களைகொத்தினதை நிரவி வாய்க்கால் தோண்டித் தண்ணீர் இறைத்துப்பாய்ச்ச வேண்டும். பிறகு 4 நாளைக்கொருமுறை தண்ணீர் பாய்ச்சி வரவேண்டும். கரை வைத்த ஒரு மாஸத்திற்குள் பூத்துக்காய்க்க ஆரம்பிக்கும். தண்ணீர்பாய்ச்ச ஆரம்பித்த நாள் முதல் ஒரு மாஸம் ஆனபிற்பாடு மறுபடியும் ஒரு முறைக் கொத்திவிடவேண்டும். பாத்தியொன்றுக்குப் பட்டணம் படி இரண்டு படி விதம்

நன்றாய் மடித்த எருக்களை மணல்போல் தூள் செய்து போட்டுத்தான் களைக்கொத்தவேண்டும். களைகொத்தின பிற்பாடு இரண்டு நாள் காயப்போட்டு பிறகு முன்போல் கிரவித் தண்ணீர் பாய்ச்சவேண்டும். இதற்குப் பிறகு 5 அல்லது 6 நாளைக்கொரு முறை விதம் தண்ணீர் பாய்ச்சிவரவேண்டும். மழை பெய்தகாலத்தில் குறைவாயும் வெயில் கடுமையாக இருக்கும் காலத்தில் அதிகமாயும் தண்ணீர் பாய்ச்சிவரவேண்டும். அதாவது செடிவாடாமல் இருக்கும்படி தண்ணீர் பாய்ச்சி வரவேண்டியது தான் முக்யம்.

மாஸூல்:—கன்றுகள் வைத்த ஒரு மாஸத்திற்குள் பூ பூத்துப் பிஞ்சு இறங்கும். சில செடிகளுக்கு இரண்டு மாஸமும் செல்லும். பிஞ்சு இறங்கின நாள் முதல் 20 நாளைக்குள் மிளகாய் நன்றாய் முற்றி பறிக்கும்படியான பக்வத்திற்கு வந்துவிடும். பிறகு, மிளகாயைப் பறிக்கலாம். மாஸூல் காலம் மார்கழி முதல் சித்திரை வைகாசி மாதங்கள் வரையுமாகும். நல்ல செடியில் ஸுமார் 100க்கு மேல் 200 வரை காய்களிருக்கும். ஸாதாரண செடியில் 50 மிளகாய்க்குக் குறையாது.

பெரிய மிளகாய் 100 விலை அணு 4. சற்று சிறியது 100 விலை ரூ. 0—2—6.

மாஸூலின் கால அளவு:—காய்க்க ஆரம்பித்த நாள் முதல் 6மீ வரையில் காய்த்துக் கொண்டிருக்கும். 5 நாளுக்கு ஒருமுறை மிளகாய் பறிக்கலாம். எட்டு நாளைக்கு ஒரு முறை பறித்தாலும் கெடுதலில்லை. மாஸூல் பறிக்க ஆரம்பித்த நாள் முதல் 30 தடவை மிளகாய் பறிக்கலாம்.

விதை எடுத்தல்:—நாலு ஐந்து பாத்தியில் உள்ள செடிகளின் மிளகாயைப் பறிக்காமல் நிறுத்திவைத்து பழுக்கும்படி விடவேண்டியது. நன்றாய்ப் பழுத்தபிறகு மிளகாயைப் பறித்து வெயிலில் நன்றாய்க் காயவைத்து எடுத்து வைத்தல் வேண்டும். பிறகு நாற்று விடுங் காலத்தில் மிளகாய் விதையை உதிர்த்துவிடவேண்டும்.

விதை க்ரயம்:—மிளகாய் விதை பட்டணம்படி ரூ 2 முதல் 10 ரூபா வரையில் விற்கும். இதனால் மிளகாய் காலத்தில் பறிக்கத் தவறிப்போய் பழுத்தமிளகாய்களை இவ்விதம் செய்து நல்ல லாபத்தைப் பெறலாம்.

காய்ந்த மிளகாய்ச் செடிகளை சிலர் அடுப்பெரிக்க உபயோகப்படுத்துகிறார்கள். சிலர் நிலத்திலேயே கொளுத்தி எருவாகட்டும் என்று எண்ணி மறு வருஷம் வரையில் நிலத்திலேயே வைத்து உழுங்காலத்தில் புல் பூண்டுகளுடன் கொளுத்தி எருவாக்குகிறார்கள்.

பு. து. ரத்னம் பிள்ளை.

CATTLE MANURE.

மாட்டு உரம்.

மாட்டு உரம் என்றால் என்ன?

இந்தக் கேள்விக்கு பதிலானது ஆடுமாடுகளை பரிபாலனம் செய்யும் விதத்தைப் பொருத்ததாக இருக்கிறது. ச்லாக்யமான மாட்டுரம் எதுவென்றால் ஆடுமாடுகளின் சாணமும் சிறுநீரும் கூடி அந்த மூத்ரத்தை க்ரகிக்க போதுமான கழிகூளமும் ஒன்று சேர்ந்து மெதுவாக மக்கிய எருத்தான் ச்லாக்கியமான மாட்டெருவாகும். ஜீவனமாய் உட்கொள்ளப்பட்டு, மாடு அசை போடுவதாலும் அதன் வயிற்றில் உற்பத்தியாகிற ஜீரணம் செய்விக்கும் ஒருவித ரஸத்தினாலும் நன்றாய் சதைக்கப்பட்டு, ஆனால் மாட்டினால ஜீரணம் செய்ய முடியாமல் வெளியிடப்படுகிற வஸ்து மாட்டின் சாணத்தில அடங்கி இருக்கிறது. ஆனால் எருத்தன்மையுள்ள ஜீவனப்பொருளில் பெரும்பாகம் மாட்டினால் ஜீரணம் செய்யப்பட்டு அதன் தேகத்தை திடப்படுத்துவதற்காகவும், அழிந்துபோன அணுக்களை புதுப்பிப்பதற்காகவும் உபயோகப்படுகிறது. என்றாலும்

மாடுகளுக்கு தீனிபோடும்பொழுது அவைகளுக்கு தேகத்தை திடப்படுத்துவதற்காக வேண்டிய உணவைவிட ஜாஸ்தி ஆகாரந்தான் கொடுத்துவரவேண்டும். இப்படி ஜாஸ்தியாக கொடுக்கப்பட்ட ஆகாரந்தான் எருவின் தன்மையை அதிகரிக்கிறது. இதுகாரணம் பற்றியே நன்றாய் போஷிக்கப்படும் மாட்டு எரு, இளைத்துப் பலமற்றிருக்கும் மாட்டின் எருவைவிட மேன்மையானது. மாட்டின் மூத்ரமானது மிகவும் ச்லாக்கியமான எருவாகும். மாட்டினால் கழிக்கப்பட்ட சரீர அணுக்கள் அவ்வளவும் சிறுநீரில் அடங்கி இருக்கிறது. பயிர்களுக்கு வேண்டிய முக்யமான உணவுப்பொருள் இதில் ஜாஸ்தியாக அடங்கி இருப்பதால் இது உயர்ந்த எருவாகும். கொட்டில் தரைக்கு சிறுநீரை க்ரகிக்கக்கூடிய காய்ந்த மண்ணை உபயோகித்தாலும் உபயோகிக்கலாம், அல்லது மாடுகள் தின்னாமல் தள்ளிய கூளத்தை உபயோகித்தாலும் உபயோகிக்கலாம். அப்படி உபயோகிக்கும் கூளமானது மூத்ரத்தை உறிஞ்சும் சக்தியுடன், தாதுப்பொருள் அடங்கி இருப்பதால், அது மக்கியவுடன் ஈரத்தை பாதுகாக்கும சக்தியுள்ளதாகிறது. ஆகையால் இப்படிச் சேர்க்கப்பட்ட எருவை நிலங்களுக்குப் போடுவதினால், பூமி சீக்ரம் காய்ந்துவிடாமல் அதிலுள்ள ஈரத்தைக் காத்துக்கொள்ள ஹேதுவாயிருக்கிறது. நிற்க, கொட்டில் தரைக்கு சாய்ந்தபூண்டு, காய்ந்த இலை அல்லது மாட்டுத் தீவனத்திற்கு உபயோகப்படாத வேறு பொருள்களையும் போடலாம். மேலே சொன்னவைகளால் மாட்டு எருவிற்கு உள்ள ச்லாக்யமான குணம் ஒருவாறு புலப்படுகிறது: அது பயிருக்குவேண்டிய உணவைக் கொடுப்பதுடன் நிலத்திலுள்ள ஈரத்தையும் உலர்ந்துவிடாமல் பாதுகாக்கிறது. மேலும் இதிலடங்கியுள்ள தாதுப்பொருள் நிலத்துடன் சேரச்சேர நிலத்தின் கைப்பையும் அதிகரிக்கிறது. அதாவது நிலம் ஈரமாயிருக்கும்பொழுது ஸுலபமாக அலர்ந்து போவதுடன் காய்ந்தவுடன் பூமி கெட்டிப்பட்டு அடைதட்டாமலுமிருக்கச்செய்கிறது. தென்னாட்டு தரிசல் பூமிகளில் கம்பு ஸாகுபடி செய்யும் நிலங்களுக்கு ஜாஸ்தியாக எருவிடுவது வழக்கம். அப்படி எருப்போடப்பட்ட பூமி எருவிடப்படாத கரிசல் நிலங்களைவிட மிகவும் ம்ருதுவாகவும் எளிதாய் புழுதியாகக்கூடியதாகவும் இருக்கிறது. தோட்டக்கால் நிலங்களில் போதுமான எரு போடப்பட்டிருக்கிறதா இல்லையா என்பதை அந்த நிலத்தில் நடந்து பார்த்து ஸுலபமாய்ச் சொல்லிவிடலாம். நிலத்தின் கைப்பை அதிகரிப்பது மிகவும் முக்யமானது. ஜாஸ்தியான விளைச்சலினாலாவது அல்லது ஒரே பயிரையே பலவருஷங்களுக்கு ஸாகுபடி செய்ததினாலாவது சளைத்திருக்கும் நிலங்களை சிலகாலம் தரிசாகப்போடுவதனால் அது நல்ல ஸ்திதிக்குவந்துவிடும் என்பது எல்லாக் குடியானவர்களுக்கும் தெரிந்தவிஷயமே. இதன் காரணமென்னவென்றால் பயிருக்கு வேண்டிய உணவு அந்த நிலத்தில் இருந்தபோதிலும் அது பயிர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய பதத்தில் இல்லை. அந்த நிலத்தில் காற்றும் மழையும் ஸூர்யவெப்பமும் தாக்குவதனால் அந்நிலத்திலுள்ள பயிருணவு பின்னால் ஸாகுபடி செய்யப்படும் பயிர் உட்கொள்ளக்கூடிய ஸ்திதிக்கு வந்துவிடுகிறது. ஆகையால் மாட்டெருவில் பயிர்களுக்கு வேண்டிய உணவுப்பொருள் இல்லாவிடினும், இப்பேர்க்கொத்த நிலங்களை கைப்புள்ளதாக்கும் குணம் இருக்கிறது. இதனால் பயிர்களின் வேர் உணவு தேடி நிலத்தின் நாலாபக்கங்களிலும் ஸுலபமாய் ப்ரவேசிக்கும். ஆகையால் பயிர் நல்ல உணவைத் தேடி எடுத்துவளர்ந்து ஜாஸ்தியான பலனைக்கொடுக்கும். நிலத்தை கைப்பாக்குவதன் உபயோகத்திற்கு தென்னாற்

காடு ஜில்லாவில் நிலக்கரிச்சாம்பலை ப்ரயோகித்துவரும் வழக்கம் ஒரு நல்ல உதாரணமாகும். நிலக்கரிச்சாம்பலுக்கு எருவாகுங் குணம் கொஞ்சங்கூட இல்லை. அதாவது அந்தச்சாம்பலில் பயிருணவே இல்லை. என்றாலும் இந்தச் சாம்பல் நிலத்தின் தன்மையை சீர்திருத்தும் காரணங்கொண்டுதான் தென் ஆற்காடு ஜில்லா குடியானவர்கள் வண்டிப் பாரம் ஒன்றுக்கு சில ஸமயங்களில் ரூ. 3-0-0 வரையில் கொடுத்தும் வாங்குகிறார்கள். நஞ்சை நிலத்திற்கும் மாட்டுரம் வெகுவாய்ப் பயனைத்தரக் கூடியது. ஏனெனில் அது பயிருணவாக ஆவதுமல்லாமல் நிலத்தின் ஸ்வபாவத்தையும் உயர்த்துகிறது. வடிகால் வஸதியுள்ள மணல்சாரி நிலங்களில் மக்கியதழையானது நிலத்தின் ஈரத்தை உலர்த்திவிடாமல் காத்துக்கொள்ளுகிறது. களிப்பு நிலங்களில் நைப்பை அதிகப்படுத்தி தரைக்குள் ஜல ஓட்டத்தைக்கொடுக்கிறது. அதாவது தண்ணீரை ஓரிடத்திலேயே தங்கவிடுவதில்லை.

மாட்டு உரத்தின் உபயோகங்களைத் தெரிந்து கொண்டோம். இனி ஒவ்வொரு குடியானவனும் ஸுலபமாய் அதைத் தயார்செய்து கொள்ளும் வழியைத் தெரிந்துகொள்வோம். சென்னை ராஜதானியில் பல இடங்களிலும் குடியானவர்கள் தயார்செய்யும் நல்ல வழிகளைச் சொல்லுவோம். தென் கன்னடம் ஜில்லாவிலுள்ள துளுவ குடியானவர்கள் ராஜதானியில் மற்ற இடங்களில் செய்யப்படுவதைக்காட்டிலும் மேலான மாட்டு எரு தயார் செய்கிறார்கள் என்பதில ஸந்தேகமில்லை. அவர்களால் ஸாகுபடி செய்யப்பட்ட நெல்வயல்களையும் பக்கத்திலுள்ள மலையாள நாட்டிலுள்ள நெல்வயல்களையும் கவனித்துப் பார்த்தால், துளுவ குடியானவர்கள் செய்யும் முறையில் நல்ல லாபம் இருக்கிறது என்பது விளங்கும். ஸாதாரணமாய்க்கிடைக்கக்கூடிய ஸாமான்களைக்கொண்டு தான் தொழுவம் கட்டப்படுகிறது. என்றாலும் கொட்டில்தரை பூமி மட்டத்திற்கு கீழே 2 அடியோ, அல்லது இன்னும் கொஞ்சம் ஆழமாகவோ பள்ளமாக்கப்படுகிறது. மாடுகள் விலையுயர்ந்ததாக இருந்தால் அவைகளைக் கொட்டிலில் கட்டியும் அதிக விலையில்லாதது மாடுகளைக் கட்டாமலும் விட்டுவிடுவார்கள். காட்டுத்தழைகள் ஏராளமாகக்கிடைக்கக்கூடிய இடங்களில் அவைகளை தினம் சேகரித்து கொட்டிலில் முதல் நாள் மாடுகள் போட்ட சாணி சிறுநீர் இவைகளை மூடும்படி பரப்பி விடுகிறார்கள். இந்தப் பச்சைத்தழைகள் மறுநாள் மாடுகளுக்குப் படுக்கையாகிறது. இம் மாதிரி பள்ளமான கொட்டில், பூமிமட்டத்திற்குவரும் வரையில் செய்யப்படுகிறது. காடு இல்லாத இடங்களில் ஜனங்கள், குழந்தைகளையும் கிழவிகளையும் வெளியில் அனுப்பி மரங்களிலிருந்து உதிரும் இலைகளை சேகரிக்கும்படி செய்கிறார்கள். அவ்விடங்களில் மாட்டுத் தொழுவத்திற்கு ஸமீபத்தில் வேண்டியபோதெல்லாம் மாடுகளின் படுக்கை உபயோகத்திற்காக காய்ந்த இலைகளை குவித்திருப்பதை ஸாதாரணமாக காணலாம். இப்படிச் செய்வதில் எல்லாச்சாணியும், சிறுநீரும் ஏராளமான தழைப்பொருளும எருவாகச்சேருகின்றன. இதை மாடுகள் மிதித்துச் சீக்ரம் அழுகிவிடாமல் போதுமான அளவுக்குக் கெட்டியாக்குகின்றன. கொட்டில் நிறைந்ததும் அந்த எருவை உபயோகப்படுத்தவேண்டிய நிலத்தின் ஒரு மூலையில் கொண்டுபோய்க் குவித்து அதன் மேல் மண்ணைப்போட்டு மூடிவிடுகிறார்கள், வட ஆற்காடு ஜில்லாவின் சிலபாகங்களில் மூத்திரத்தை சேகரிப்பதற்கு பின்வரும் முறை கையாடப்படுகிறது. மாட்டுச்சாணியைக் கொட்டிலிலிருந்து சேகரித்து வெயிலில் உலர்த்தி தடியினால் அடித்துப் பொடியாக்குகிறார்கள். இதைக் கொட்டிலில் பரப்புகிறார்கள். இதன் மூலமாக

மாடுகள் விடும் மூத்ரம் க்ரஹிக்கப்படுகிறது. மறுநாள் இந்தப்படுக்கையை எருக்குழியில் கொட்டிவிட்டு மறுபடி போடும் சாணியைக் கொண்டு புதுப்படுக்கை செய்கிறார்கள். கூளம் அகப்படாத இடங்களில் உலர்ந்த மணலைப் படுக்கைக்கு உபயோகித்து பலன் கண்டிருக்கிறார்கள். ப்ரதி காலையிலும் தரையில் 3 அங்குல கனத்திற்கு மணலைப் பரப்புவார்கள். சாணியை எடுத்தெறிந்த பிறகு, இந்த மணலை வாரி அப்புறப்படுத்திவிட்டு, மாடுகள் மூத்ரம் விடும் இடத்தில் புதியமணலை பரப்புகிறார்கள். ஸுமார் 15 நாள் ஆனபிறகு மூத்ரத்தில் ஊறின இந்த மண்ணை எடுத்து குப்பை மேட்டின்மேல் பரப்புகிறார்கள். புஞ்சை ஸாகுபடி செய்கிற ஜில்லாக்களில் இந்த முறையைக் கையாடலாம்.—விவஸாய பஞ்சாங்கத்தில் எச். வி. ஸாம்ப்ஸன்.

CATTLE BREEDING.

கால்நடை வளர்த்தல்.

ஸமீபத்தில் ஒங்கோலில் கால்நடைக்காட்சி நடைபெற்றபோது அந்தக் காட்சியைத் திறந்துவைத்த ஆனரபிள் மிஸ்டர் சிவஸ்வாமி அய்யர் கால்நடை வளர்த்தலைப்பற்றி நீண்டதோர் ப்ரஸங்கம் செய்தார். அந்த ப்ரஸங்கத்தின் ஸாராம்சத்தை எழுதுகிறோம்.

தேசத்தில் பலவிடங்களில் ஜனங்கள் கால்நடையின் நிலைமை த்ருப்திகரமாக வில்லையென்றும், கால்நடைகளின் தொகை குறைந்து வருகிறதென்றும், இக்காரணங்களால் ஸாதாரண விவஸாயி கொடுக்க முடியாத அவ்வளவு உயர்ந்த விலை கொடுத்தாலொழிய நல்ல கால்நடை விலைக்குக் கிடைப்பது அரிதாயிருக்கிறதென்றும் சொல்லி வருகிறார்கள். இதைப்போலவே லெஜிஸ்லெடிவ்கௌன்ஸில்களில் மெம்பர்களும் தாங்கள் கொண்டு வந்த தீர்மானங்களில் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தத் தீர்மானங்களில் கால்நடை ஸம்பந்தமான சில விஷயங்களை வற்புறுத்திக்கூறியிருக்கிறார்கள். கால்நடைகள் மேய்வதற்கு மேய்ச்சல்தரைகளில்லையென்றும், போதுமான அளவு மாட்டுத்தீவனம் கிடைப்பதில்லையென்றும், இவைகளாலும் இன்னம் வேறு சில காரணங்களாலும் மாடுகளின் தொகை குறைந்தும் அவைகளின் நிலைமை கெட்டுப்போயும் இருக்கின்றனவென்றும் அந்தத் தீர்மானங்களில் வற்புறுத்திக் கூறப்பட்டிருக்கின்றன. மாடுகளின் தற்போதைய சீர்கேடான நிலைமைக்கு காரணங்கள் மேலே சொன்னவைகள் மாத்ரமல்ல. இதற்கு வேறொரு முக்ய காரணமும் இருக்கிறது. சில ப்ரதேசங்களில் ரொம்ப பெயர்பெற்றிருந்த உயர்ந்த ஜாதி மாடுகள் இப்போது அகப்படுவது அருமையாய்க் கொண்டு வருகின்றது. வட ஆற்காடு ஜில்லாவில் ரொம்ப பெயர் பெற்றதாயுள்ள வேறு ஜாதிக்கலப்பில்லாத புங்கனூர் மாடுகள் இப்போது அகப்படுவது அரிதென்று தெரிகிறது.

இவைகளை யுத்தேசித்து கவர்ன்மெண்டார் கால்நடையின் நிலைமையை ஆராய்ச்சி செய்வதற்காக மிஸ்டர் ஸாம்ப்ஸனை நியமித்தார்கள். அவர் கால்நடைகளைப்பற்றிய பல விஷயங்களையும் ஆராய்ச்சிசெய்து ஒரு ரிபோர்ட்டு எழுதியிருக்கிறார்.

பொது ஜனங்களாகட்டும் விவஸாயிகளாகட்டும் மாடுவளர்ப்பதில் விசேஷ கவலையெடுத்துக்கொள்ள வேண்டியது அவச்யமென்பதை உணரவில்லை. மாடுகள் மேய்வதற்கு பொது மேய்ச்சல் தரைகள் ஏற்படுத்தவேண்டியது அவச்யமென்று பலர் சொல்லிவருகிறார்கள். ஆனால் பொது மேய்ச்சல் தரைகளால் என்ன கெடுதிகள் நேரிடுமென்பதை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. கால்நடை விஷயங்களில் நிபுணர்கள் பொது மேய்ச்சல்

தரைகளில் அநேக மாடுகளை ஒன்றாகச் சேர்த்து மேயவிடுவதால் மாடுகளில் ஜாதிக்கலப்பு ஏற்பட்டு, நல்ல ஜாதிமாடுகள் அபிவ்ருத்தி செய்வது முடியாமல் போகிறதென்று சொல்லுகிறார்கள். மாடுகளைப பொலியவிடுவதில் ரொமப கவலை யெடுத்துக்கொள்ள வேண்டியது அவச்யமெனபதையும், மாடுகள் மேய்வதற்கு தனியாக மேய்ச்சல் தரைகள் ஏற்படுத்துவது ரொம்ப மேலானதென்பதையும் ஜனங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். இந்த விஷயங்களை ஜனங்களுக்குப் பரவச்செய்வதே கால்நடைக்காட்சிகளின முக்ய கடமையாகும். கால்நடைகளை விற்பனை செய்ய அல்லது வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்ய உதவியாயிருப்பது இந்தக் கால்நடைக்காட்சிகளின் நோக்கமாகாது. கால்நடைகளில் ரொம்ப ப்ரபலமான ஜாதிகளை வ்ருத்தி செய்வதற்கு ஸாதகமாயிருப்பதே கால் நடைக்காட்சிகளின் முக்ய நோக்கமாகும். பொதுவாய் இந்த ராஜதானியில் கால்நடைக்காட்சிகளால் அதிகபலன் ஏற்படாமல் போனதற்குககாரணம் என்னவென்றால், கால்நடைகள் அபிவ்ருத்தி செய்யப்படும் ப்ரதேசங்களில் அந்தக் கால்நடைக்காட்சிகள் நடைபெறாமையே.

கால் நடைகளைச் சீர்திருத்துவதற்குச் சில கார்யங்கள் செய்யவேண்டியது அவச்யமென்று சொல்லப்படுகிறது. அவைகளாவன:—கால்நடைக்காட்சிகளில் கால்நடைகளைத்தராதரம் பிரிப்பதிலும், இனும் கொடுப்பதிலும் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டும்.

மாடுகளை வ்ருத்தி செய்வதற்கு உதவியாக பொலி காளைகள் வாங்கிவைத்து உதவி செய்ய வேண்டுமென்று சிலர் சொல்லுகிறார்கள், கால்நடை அபிவ்ருத்திப் பண்ணைகளை ஸர்க்காரில் ஏற்படுத்தி நடத்துவதென்பது ரொம்பவும் ச்ரமமான கார்யம், கால்நடை யபிவ்ருத்தி வேலை வெகுவாய் ஜனங்களே ஸொந்தத்தில் செய்துகொள்ள வேண்டிய விஷயமாகும். ஆனால் கவர்ன்மெண்டார் இரண்டொரு இடங்களில் கால்நடைப் பண்ணைகள் ஸ்தாபித்து அவைகளில் பொலி காளைகள் வளர்த்து வருவதைப்பற்றி ஆலோசித்து வருகிறார்கள். சிற்சில இடங்களில் கால்நடை யபிவ்ருத்திப் பண்ணைகள் ஸ்தாபிக்க வேண்டுமென்று அநேகமாய் தீர்மானிக்கப்படலாம். கவர்ன்மெண்டார் தற்போது விவஸாயிகளுக்கு உதவிவரும் பொலிகாளைகளை சில ஸமயங்களில் விவஸாயிகள் தகுந்தபடி கவனிக்காமலும் உபயோகிக்காமலுமிருந்து, அவைகளை கவர்ன்மெண்டினிடம் திருப்பி விட்டுவிட்டார்கள். ஆகையால் இனிமேல் பொலிகாளைகளை க்ராமவாஸிகள் சரிவர பராமரித்து தகுந்தபடி உபயோகித்துக் கொள்கிறார்களா என்று பார்க்க வேண்டியது அவச்யமாகிறது.

இன்னம் கால்நடைகளை அபிவ்ருத்திசெய்வதைப்பற்றி கவனிக்க ஒரு கால்நடை நிபுணர் நியமிப்பதைப்பற்றி கவர்ன்மெண்டார் ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள். கால்நடை யபிவ்ருத்தி விஷயங்களை கவனிக்க சாஸ்த்ரீய அறிவும் அநுபோகமும் அவச்யமாகையால், கால்நடை நிபுணர் ஒருவரை இவ்விஷயங்களை கவனிக்க நியமித்தால் கால்நடைகள் ரொம்ப உயர்ந்தவைகளாக அபிவ்ருத்தி செய்யப்படலாம். கால்நடைக்காட்சிகள் கூடியிருக்கும் ஸமயங்களை யொட்டி, கால்நடைகளைத் தகுந்த பொலிகாளைகளைக்கொண்டு அபிவ்ருத்தி செய்யாமையின் கெடுதிகள், தகுந்த வளர்ச்சியடையாத காளைகளைப் பொலியவிடுவதின் தீங்கு, உயர்ந்த மாடுகளை வெளியிடங்களுக்கு அனுப்பாமல் அந்தந்த ஜில்லாக்களிலேயே வைத்திருப்பதின் அவச்யம், ஜாதிகளில் கலப்பு ஏற்படாமல் பார்த்துக்கொள்வது ஆகிய இவைகளைப்பற்றி கால்நடை அபிவ்ருத்தியில் தேர்ச்சியடைந்தவர்களைக்கொண்டு விவஸாயிகளுக்கு

ப்ரஸங்கங்கள் செய்யும்படி ஏற்பாடு செய்ய வேண்டும்.

இன்னொரு விஷயம் என்னவென்றால், தனவந்தர்களான விவஸாயிகள் கால்நடை யபிவ்ருத்திவிஷயமாக ரொம்ப ஊக்கமெடுத்து உழைக்கும்படி அவர்களைத்தான் வேண்டியிருக்கிறது. பம்பாய் கவர்னராகிய லார்ட் வில்லிங்டன் பூனாவில் ஒரு கால்நடைப்பண்ணை ஏற்படுத்தப்போவதாகச் சொல்லியிருந்தார். ஒரு ராஜதானியின் கவர்னரே இக்கார்யம் அகௌரவமானதல்லவென்று நினைத்து கால்நடைப்பண்ணை ஏற்படுத்துவதாகச் சொன்னாரென்றால் தனவந்தர்களான விவஸாயிகள் இதுவிஷயத்தில் யாதொரு ஆக்ஷேபணையும் சொல்வதற்கில்லை. தனவந்தர்களான விவஸாயிகள் கால்நடை அபிவ்ருத்தி வேலையை தங்களுக்கு ப்ரியமான ஒரு வேலையாகக்கொண்டு உழைத்துவந்தால் கால்நடையின் நிலைமை ரொம்பவும் அபிவ்ருத்தியடையக்கூடும்

GRAPE CULTIVATION.

த்ராக்ஷைக் கொடி பயிர்செய்தல்.

த்ராக்ஷைக் கொடி தென்னிந்தியாவில் ஏராளமாய்ப் பயிர் செய்யப்பட்டு வந்தாலும் த்ராக்ஷைப்பழத்தின் ருசியையும் தன்மையையும் வ்ருத்திசெய்ய யாதொரு முயற்சியும் இதுவரையில் செய்யப்படவில்லை. இந்தப்பக்கத்துப்பழதினுஸுகள் ரொம்பப் புளிப்பானவையும் விதையதிகமாய் உள்ளவையுமாக இருக்கின்றன. வட இந்தியாவில் உற்பத்தியாகும் பழம் ரொம்ப ருசியுள்ளதாக இருக்கிறது. த்ராக்ஷைப்பழம்புளிப்பாயும்கொட்டைநிறைந்ததாயு மிருப்பதற்குக் காரணம் பழுப்பதற்கு முன்னால் அதைப்பறித்து விடுவதுதான். வாழை, மா, முதலிய பழங்களை நன்றாய்ப் பழுப்பதற்கு முன் பறித்துப் பழுக்கவிடலாம். ஆனால் த்ராக்ஷையைக்காயாகஇருக்கும்போது பறித்து விட்டால் பிறகு பழுப்பதில்லையாம், அன்னாசியும் அதைப் பறித்தபின் ருசியில் மாறுதலடைவதில்லை யென்று 1912ஹு ஜூலைமாஸத்து ஸஞ்சிகையில் குறிப்பிட்டிருக்கிறோம். த்ராக்ஷைப்பழத்தைவிற்பனைக்கு வெகுவாய் வெளியூர்களுக்கு அனுப்பவேண்டியிருப்பதால் நன்றாய் பழுத்துப்போனால் வழியில் பழங்கள் கெட்டுப்போகும். ஆகையால் த்ராக்ஷை ஸாகுபடி செய்கிறவர்கள் கிடைத்தவிலை போதுமென்று நன்றாய்ப் பழுக்காதிருக்கும் போதே குலைகளை அறுத்து விற்பனைக்கு அனுப்பி விடுகிறார்கள்.

ஸாதாரண வளப்பமுள்ள தோட்டக்கால் களிலெல்லாம் த்ராக்ஷை நன்றாய்ப் பயிராகும் நிலம் நல்ல வடிகால் உள்ளதாய் இருக்கவேண்டும். இளகலான பூமி, களிமண்தரை, மணல் கலந்த வண்டல் பூமி முதலியவைகள் த்ராக்ஷைப்பயிர் ஸாகுபடிக்கு ஏற்ற நிலங்களாகும். நிலத்தில் கொஞ்சம் சுண்ணாம்பு இருப்பது நல்லது. இதனால் த்ராக்ஷையின் மாஸுல் அதிகரிப்பதற்கு இடமேற்படும். சதுப்பான களிமண் பூமியும், ரொம்ப இளகலாமணல் பூமியும் த்ராக்ஷை ஸாகுபடிக்கு ஏற்றவையல்ல. விதைகள் போட்டும், பதியன்களை நட்டும், ஒட்டுக்கட்டியும் த்ராக்ஷையை வ்ருத்திசெய்யலாம். ஆனால இவைகளைத் தெரிந்தெடுப்பதில் ஜாக்ரதையாக இருக்கவேண்டும். இவைகள் நல்லவைகளாயிராவிட்டால் இவைகளிலிருந்து உண்டாகும் பழங்கள் அதிக விதையுள்ளவைகளாக இருக்கும்.

த்ராக்ஷைப்பயிருக்கு தகுந்த அளவு ஈரம் இருக்கவேண்டியது அவச்யம். ஆனால் அளவுக்கு மிஞ்சி யிருத்தல் கூடாது. இதற்கு எரு இடுவது ரொம்ப அவச்யம். ஆஸிட் பாஸ்பேட் 40-ராத்தல், கானேய்ட் 90-ராத்தல், பருத்திக்கொட்டைப்பிண்ணாக்கு 20-ராத்தல் ஆகிய இவைகளைக் கலந்து கொடி சிறியதாயிருக்கும் போது, செடிக்கு 8-ராத்தல்

விதம் எருவிடவேண்டும். காலாகாலங்களில் கிளைகளைத் தகுந்தபடிக் கத்தரித்து வரவேண்டும். பழம் அடர்த்தியாயிருந்தது கொடிய றுந்து போகுமென்று தோன்றினால் பிஞ்சாயிருக்கும் போதே குலைகளில் சிலவற்றைக் கத்தரித்து விடவேண்டும். ஒரு ஏகர் பூமியில் தகுந்தபடி ஸாகுபடிசெய்தால் 7000 ராத்தல் பழம் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது.

A NEW METHOD OF GRAFTING.

ஒட்டுக் கட்டுதலில் ஒரு நவீன முறை.

அமெரிக்காவிலுள்ள வாஷிங்டன என்னும் பட்டணத்தில் ஒட்டுக்கட்டுதலில் ஒரு நூதன முறை கண்டுபிடித்திருக்கிறார்கள். ஸாதாரணமாய் ஒருசெடி பலன்கொடுப்பதற்கு 8-வர்ஷமாகுமானால் இந்த நூதனமுறையால் 2-வர்ஷத்துக்குள்ளேயே பலன் கொடுக்க ஆரம்பித்து விடுகிறதாம். அந்த முறை பின்வருமாறு. ஒட்டுக்கட்டவேண்டிய செடியை தனியான இடத்தில் பயிரிடுகிறார்கள். அது மூன்று அல்லது நான்கு வார காலத்தில் நான்கு அல்லது ஐந்து இலைகளுள்ள சிறு செடியாக வளர்ந்து விடுகிறது. இந்தச் செடியை ஒட்டுக்கட்டும் மரம இரண்டு மூன்று வாஷத்துப் பயிராக இருக்கவேண்டும். செடியும் மரமும் ஒரே ஜாதியாக இருக்க வேண்டும். மரம் பயிரிடப்பட்டு இரண்டு மூன்று வாஷமாகியிருப்பதால் அதன் வேர்கள பூமிக்குள் வெகு ஆழம் சென்று மரத்தின் மேல்பாகமாகிய கிளைகளுக்கு ஏராளமான உணவை பூமியிலிருந்து க்ரஹித்துக் கொடுக்கின்றன.

ஒட்டுக்கட்டவேண்டிய சிறு செடியை வேராகாமல் வேர்களைச் சுற்றியுள்ள மண்ணோடு பெயர்த்தெடுத்துக் கொள்ளுகிறார்கள். சில வாரகாலம் செடி ஜீவித்திருப்பதற்கு வேண்டிய அளவு மண்ணை வேர்களோடு எடுக்க வேண்டும். சிறு செடி ஒட்டுக்கட்டப்படும் பெரிய மரத்தில் பூமியிலிருந்து ஒரு அடி உயரத்துக்குமேல் மேல்பட்டையை கொஞ்சம் சீவி விடுகிறார்கள். அதைப்போலவே சிறு செடியிலும் மேல்பட்டையைக் கொஞ்சம் சீவி விடுகிறார்கள். பெரியமரத்தையும் சிறுசெடியையும் பட்டை சீவியுள்ள பாகத்தில்சேர்த்து ம்ருதுவான துணியால் நன்றாய்க்கட்டி விடுகிறார்கள். சிறு செடியின் வேர்களோடு உள்ள மண்ணையும் பெரிய மரத்தோடு சேர்த்துக் கீழே விழாதபடி கட்டிவிடுகிறார்கள். இரண்டு மூன்று வாரகாலத்துக்குள் இரண்டும சேர்ந்து விடுகின்றன. இதற்கப்புறம் சிறுசெடியின் அடியிலுள்ள மண்ணை எடுத்தெறிந்து விடலாம. இப்போது சிறு செடியானது பெரிய மரததிலிருந்து உணவுஸாரத்தை க்ரஹித்துக் கொண்டிருக்கும். கடைசியில் இரண்டையும் ஒட்டுக் கட்டியிருக்கும் இடத்துக்குக் கீழே சிறுசெடியின் வேர்களை வெட்டிவிடவேண்டும். இதனால் சிறு செடியானது பெரிய மரத்தின் ஒரு பாகமாக சேர்ந்துவிடுகிறது. சிறு செடியும் பெரியமரமும் நன்றாய் ஒட்டிக்கொண்டு விட்டன வென்று நிச்சயமாய்த்தெரிந்தவுடன் பெரியமரத்தின் மேல்பாகமாகிய கிளைகளை யெல்லாம் வெட்டிவிடவேண்டும். அப்படி வெட்டிவிட்டால், பெரியமரத்தின் வேர்கள பூமியிலிருந்து க்ரஹித்து அம்மரத்தின் கிளைகளுக்குக் கொடுத்துவந்த செடியுணவெல்லாம் புதிதாக ஒட்டுக்கட்டப்பட்ட சிறுசெடிக்குப் போய், அந்தச் சிறுசெடியை நன்றாய்வளருமபடி செயகிறது. இந்தச்சிறு செடிக்கு ஏராளமான உணவு கிடைப்பதால் அந்த உணவில் ஒருபாகத்தைக் கொண்டு செடியானது காலத்துக்கு முன் காய்க்க ஆரமபிக்கிறது. அதாவது சிறுசெடி ஸாதாரணமாய் வளர்ந்தால் காய்ப்பதற்கு எவ்வளவு காலம் செல்லுமோ அதை விடக் குறைவான காலத்திலேயே காய்க்க ஆரம்பித்துவிடுகிறது. இப்படிக் காய்க்கும் காயும், பழங்களும ரொம்ப உயர்ந்தவையாயிருக்கின்றனவாம்.

TWO CHEAP AGRICULTURAL IMPLEMENTS.

இரண்டு நயமான உழவுக் கருவிகள்.

ஸிந்துக் கலப்பை.—விந்து கலப்பையானது நாட்டு மரக்கலப்பையிலிருந்து கொஞ்சம் மாறுபாடாய் அமைக்கப்பட்டுள்ளது. மணல் பூமிகளையும், மணல் கலந்த இருமண்பாடான புஞ்சை நிலங்களையும் உழ இதுவே மிக ச்ரேஷ்டமான கலப்பை. இதனுடைய அகலமான கார் பூமியிலுள்ள பூண்டுகளை ஒழித்துவிடுகிறது. அருகங் கட்டைகள் வேரோடு பிடுங்கப்படுவதால் விந்து கலப்பைக்குமுன் நிற்கிறதில்லை. பூமியில் தகுந்த ஈரமிருந்தால் இக்கலப்பையைக் கொண்டு இரண்டு மூன்று சால் உழுவதனாலேயே ஒரு அடி ஆழம்வரை பூமியை உழலாம். இதன் விலை ரூ. 3-8-0. தென்னாற்காடு ஜில்லா நெல்லிகுப்பத்துக்கு அடுத்த பாலூர் விவஸாயப்பண்ணை மானேஜர் அவர்களுக்கு எழுதி விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

முள் பலுவு.—உழுத பூமியில் முள்பலுவு அடித்தால் புல் பூண்டுகளை ஒருமித்துச் சேர்க்கும். கம்பு, கேழ்வரகு, சோளம், வரகு, புழுதி நெல் முதலிய புஞ்சை தான்யப் பயிர்களில் இழுத்தால் களை வெட்டுவது ஸுலபமாகும். களைவெட்ட செலவும் குறையும். அடர்த்தியாயிருக்கும் பயிரைக் கலைத்துவிடும். பூமியின் மேல் மண்ணை உடைப்பதனால் பூமி தளர்ந்து பூமியின் ஈரத்தைகாக்கும். களைவெட்டியால் மேல்மண்ணை உடைக்கத்தகுந்த பருவமில்லாத சிறு பயிரிலும இப்பலுவை உபயோகிக்கலாம். பயிர் கதிருக்கு வரும் வரையில் இப்பலுவை உபயோகிக்கலாம்.

இந்த பலுவினால் 4 ஏகரா பூமியை ஒரு தினத்தில் கிளறிவிடலாம். இப்பலுவை உபயோகிப்பதனால் புஞ்சை நிலஸ்வான்கள் அதிக லாபத்தை அடைவார்கள். இதன் விலை (ரயில் சார்ஜ் அன்னியில்) ரூ. 7-0-0 ஆகிறது. தென் ஆற்காடு ஜில்லா நெல்லிகுப்பத்துக்கு அடுத்த பாலூர் விவஸாயப்பண்ணை மானேஜர் அவர்களுக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம். முள் பலுவின் உபயோகங்களைப் பற்றிய ஒருதுண்டு பத்திரிகை விவஸாய டிபார்ட்மெண்டால் ப்ரசுரிக்கப்பட்டிருக்கிறது. வேண்டுபவர்கள் விவஸாய டிபார்ட்மெண்டுக்கு எழுதி இனாமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

DEAD ANIMALS AS MANURE.

இறந்த ம்ருகங்கள் எருவாதல்.

மரங்கள் அதிக பழம்கொடுப்பதற்கு பாஸ்பாரிக் ஆஸிடுள்ள எருக்கள் இடுதல் முக்யம். ம்ருகஜாதியின் எலும்பு, தோல், மீன் முதலானவைகள் மரத்துக்குப பாஸ்பாரிக் ஆஸிட் எருவா யுபயோகப்படுவன.

சிலர் கிசலி, எலுமிச்சை முதலானவைகளுக்கு இறந்த ம்ருகங்களை எருவாக உபயோகிப்பதுண்டு. ஆனால் அதன் மகத்வம் இம்மட்டென்பதை சரிவர க்ரஹித்து முயற்சிப்பவரை காண்பதரிது. கோயம்புத்தூரிலே மிஷனரிமாருடைய சில தோட்டங்களிலே புள்ள மாதுளைகள் மிகச் செழித்து வளருகின்றன. அவைகள் ஏராளமான பழங்களைக் கொடுப்பதுமன்றி, அப்பழங்கள் ரொம்பப் பருமனுயுமிருக்கின்றன. இதற்குக் காரணமென்னவென்றால், அப்பட்டணத்திலே கோடைகாலத்தில்முனிஸிபாலிடியில் நாய்களைக் கொல்வார்கள். அந்த நாய்களை மேற்படி மிஷனரிமார் எடுப்பித்துத் தோட்டததிலுள்ள மாதுளைகளின் அடியிலே புதைத்து வந்ததேயாம். அவ்வண்ணமே கிச்சிலி, எலுமிச்சைகளுக்கும் பாஸ்பாரிக்ஆஸிட் உரங்கள் போடுவதால் ரொம்பப் பருமனான பழங்கள் ஏராளமாய்க் காய்க்கின்றன.

DESTRUCTION OF WILD ANIMALS.

காட்டு ம்ருகங்களை அழித்தல்.

சென்ற 1913-வர்ஷத்தில காட்டு ம்ருகங்களால் 379-ஜனங்கள் இறந்துபோனார்கள்.

1694-ஜனங்கள்பாம்புகடித்து இறந்துபோனார்கள். ஆக மொத்தம் காட்டு மருகங்களாலும பாம்புக்கடியாலும் இறந்தவர்களின் ஸங்க்யை 2073. அதற்கு முந்தின வர்ஷத்தில் 1852.

1913-ம் வர்ஷத்தில் காட்டு மிருகங்களால் 11,722-கால்நடைகள் இறந்துபோயின. புலி, சிறுத்தைப்புலி ஆகிய இவைகளால் மாத்ரம் 11,500-க்குமேல் கால்நடைகள் இறந்து போயின.

1729-கால்நடைகள் பாம்பு கடித்து இறந்து போயின. பாம்புக்கடியாலும், காட்டு மிருகங்களாலும் இறந்த கால்நடைகளின் மொத்தம 13451. இதற்கு முந்தினவர்ஷமாகிய 1912-ம் வர்ஷத்தில் 13345-கால் நடைகள் காட்டுமிருகங்களாலும் பாம்புக்கடியாலும் இறந்து போயின.

காட்டுமிருகங்களைக் கொல்வதற்காக கவர்ன்மெண்டார் இனாம் கொடுத்து வருகிறார்கள். சென்றவர்ஷம் (1913) 83-புலிகளும், 714-சிறுத்தை, சிவிங்கிகளும்,54-கரடிகளும்,1387-மற்ற காட்டுமிருகங்களும், ஆகமொத்தம் 2238-காட்டுமிருகங்கள் கொல்லப்பட்டன. இவைகளுக்காக ஸர்க்காரில் கொடுத்த வெகுமதி ரூபா 21831-3-ஆகும். அதற்கு முந்தின வர்ஷம் (1912) 2070-காட்டுமிருகங்கள்கொல்லப்பட்டன. அந்தவர்ஷம கொடுத்த வெகுமதி 17,818-ரூபாயாகும்.

SUGAR-CANE AND THE SOIL.

கரும்புப் பயிரும் பூஸாரமும்.

கரும்பு ஸாகுபடியாகும் நிலத்தில் மற்றபயிர்கள் ஸாகுபடி செய்தால் அந்தப்பயிர்களுக்குக் கெடுதியா நன்மையா என்பதை யறிவதற்காக ஜாவா தீவில் ஸமீபத்தில் சிலபரீக்ஷைகள் செய்து பார்த்தார்கள். முதல் வாஷத்தில சில துண்டு நிலங்களில் கரும்பும், சில துண்டுநிலங்களில் வேர்க்கடலையும் பயிரிட்டு, அதற்கடுத்த வர்ஷத்தில் எல்லா துண்டு நிலங்களிலும் சோளம் ஸாகுபடி செய்தார்கள். கரும்புபயிரிட்ட துண்டு நிலங்களில் 81-ராத்தல் சோளம் மாஸூலில் கிடைத்திருக்க, வேர்க்கடலை ஸாகுபடி செய்த நிலத்தில் 53-ராத்தல் சோளமே கிடைத்ததாம். அதற்கடுத்தவர்ஷத்தில் எல்லா நிலங்களிலும் நெல் ஸாகுபடி செய்தார்கள். அப்போதும் கரும்பு பயிரிட்ட துண்டு நிலங்களில் நெல் மாஸூலில் அதிகமாகவும், வேர்க்கடலை பயிரிட்டதுண்டு நிலங்களில் நெல் மாஸூலில் குறைவாகவும் இருந்தது. இதனால் கரும்புப் பயிரானது வேர்க்கடலைப்பயிரைவிடக்குறைவாகவே பூஸாரத்தை க்ரஹிக்கிறதென்று தெரியவருகிறது.

ARTIFICIAL MANURE FOR COCOANUT TREES.

தென்னைமரங்களுக்கு செயற்கை உரம்.

திருவாங்கூரில் விவஸாய டிபார்ட்மெண்டார் தென்னை மரங்களுக்கு ஏற்றதாக ஒருபுது செயற்கை எரு தயாரித்து விற்கப் போகிறார்களென்று தெரிகிறது. அந்தச் செயற்கைஉரத்தில் ஒருமரத்துக்கு வேண்டிய சேர்மானம் பின்வருமாறு.

		ராத்தல்.
வேர்க்கடலைப்பிண்ணாக்கு	...	2
'பிஷ் குவானோ' என்னும் மீன் எரு	...	2
போன்மீல் என்னும் எலும்புத்தூள்	...	2
'கெய்னிட்' என்னும் எருப்பொருள்	...	2
ஸல்பேட் அப் பொட்டாஷ்	...	
உப்பு	...	1
சுண்ணாம்பு	...	1½
ஆக ஒரு மரத்துக்கு ராத்தல்	...	11

இந்த செயற்கை எருவை ராத்தல் ஒரு சக்ரம் வீதம் அதாவது 7-பை வீதம் விற்பார்கள். ஒவ்வொரு மரத்துக்கும இடும எருவின் அளவு, மேற் சொன்னபடி குறைவாயிருக்கிறபடியால் நிறைய மண்கலந்து தான் மரங்களுக்கு இடவேண்டுமாம்

The Co-operative World.

கோவாபரேஷன் பகுதி.

AUDIT AND INSPECTION.

ஆடிட்டும் இன்ஸ்பெக்ஷனும்.

ஸமீபத்தில் பேஹார் ஒரிஸ்ஸா மாகாணத்து கோவாபரேடிவ் கான்பரென்ஸ் நடைபெற்ற போது, கான்பரென்ஸ் மெம்பர்கள் ஸங்கங்களின் கணக்குகளைத் தணிக்கை (ஆடிட்) செய்வதைப் பற்றிப் பேசினார்கள்.

இந்த விஷயத்தைப்பற்றி ப்ரேரித்த மிஸ்டர் காலின்ஸ் என்பவர் முதலில் நாம் கவனிக்க வேண்டியது ஆடிட்டின் ப்ரயோஜனம் என்ன என்றும், இரண்டாவது ஆடிட் செய்வதற்கு ஏற்ற முறையும், யார் ஆடிட் செய்யவேண்டியதென்பதுமென்றும் சொன்னார். 1908-ம் வர்ஷத்தில் ஜெர்மனியிலுள்ள ஸ்ட்ராஸபர்க்கில் ஒரு கோவாபரேடிவ் காங்க்ரெஸ் கூடிற்று. அதில் ஸங்கங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்யவேண்டியது ரொம்ப அத்யாவச்யமானதென்றும், ஆடிட் செய்வதால் ஒவ்வொரு ஸங்கத்தின் அபிவ்ருத்திக்கு ஸாதகமேற்படுவதோடு பொதுவாய் க்ராமாந்தரங்களில் கோவாபரேஷன் முயற்சி ரொம்ப அபிவ்ருத்தியடையக்கூடுமென்றும் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. அந்தத் தீர்மானத்தைப்போலவே இந்த பேஹார் ஒரிஸ்ஸா கான்பரென்ஸிலும் ஒரு தீர்மானம் செய்ய வேண்டுமென்று மிஸ்டர் காலின்ஸ் சொன்னார். இன்னும் அவர், ஸங்கங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்ய யாரைநியமித்தாலும், அவர்கள் ஷை ஸங்கங்கள் சேர்ந்துள்ள ஸெண்ட்ரல் பாங்கிகள் அல்லது யூனியன்களுக்குக் கீழ்ப்பட்டு நடப்பவர்களாக இருக்கக்கூடாதென்று சொன்னார். ஏனென்றால், ஸெண்ட்ரல் பாங்கிகள் அவைகளோடு சேர்ந்துள்ள ஸங்கங்களுக்குப் பணம் கடன் கொடுத்துவருகின்றன. ஆகையால் ஸெண்ட்ரல் பாங்கிகளோடு ஸம்பந்தப்படாதவர்கள் ஸங்கங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்வது தான் நல்லது.

கான்பரென்ஸுக்கு வந்திருந்த இன்னொருவர் ஸெண்ட்ரல் பாங்கிகளுக்கும், யூனியன்களுக்கும் ஸம்பந்தப்படாத அல்லது அவைகளுக்கு கீழ்ப்பட்டிராதவர்களே ஸங்கங்களின் கணக்குகளைவருஷந்தோறும்தணிக்கைசெய்ய வேண்டுமென்றும், ஸெண்ட்ரல் பாங்கிகளின் டிரெக்டர்களில் சிலரை அந்த ஸெண்ட்ரல் பாங்கிகளின் கணக்குகளை மாஸத்துக்கு ஒரு தடவை தணிக்கை செய்யும்படி நியமிக்கவேண்டுமென்றும், இன்ஸ்பெக்டர் மானேஜர்கள் ரூரல் ஸங்கங்களின் கணக்குகளை மாஸத்துக்கு ஒரு தடவை தணிக்கை செய்யவேண்டுமென்றும் சொன்னார்.

வேறொருவர், ஸெண்ட்ரல் பாங்கிகளோடு ஸம்பந்தப்படாதவர்களே ரூரல் ஸங்கங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்யவேண்டுமென்றும், ரூரல் ஸங்கங்களின் கணக்குகளை இன்ஸ்பெக்ஷன் செய்வதற்கு ஸெண்ட்ரல் பாங்கிகளுக்கு கொஞ்சம் ஸ்வாதீனம் இருக்க வேண்டுமென்று சொன்னார். சில மெம்பர்கள் வர்ஷத்துக்கு இரண்டு தடவை கணக்குகளைத் தணிக்கை செய்யவேண்டுமென்று சொன்னார்கள்.

இன்னொருவர் ஸெண்ட்ரல் பாங்கிகளின் கணக்குகளை அடிக்கடி தணிக்கை செய்யவேண்டுமென்று சொன்னார்.

முடிவில் கான்பரென்ஸிற்கு வந்திருந்தவர்கள் பின்வருமாறு தீர்மானித்தார்கள்.

(1) ஸங்கங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்யவேண்டியது மிகவும் அவச்யம்.

(2) இந்தத் தணிக்கையானது இப்போது நடந்துவரும் தணிக்கையைவிடத் தாழ்ந்ததாக இருக்கக் கூடாது.

(3) இந்தத் தணிக்கைக்கும் ஸெண்ட்ரல் பாங்கிகள் இன்ஸபெக்ஷன் அல்லது தணிக்கை செய்வதற்கும் யாதொரு ஸம்பந்தமும் இல்லாமல் இரண்டும் ப்ரத்யேகமாய் இருக்க வேண்டும்.

(4) வர்ஷத்துக்கு இரண்டுதடவை கணக்குகளைத் தணிக்கை செய்வது ரொம்ப உத்தமமென்றாலும், தற்போது வர்ஷத்துக்கு ஒரு தடவை தணிக்கை செய்யவேண்டுமென்பது தான் நடக்கக்கூடிய கார்யம்.

இன்ஸ்பெக்ஷன்.

அதற்குப்பிறகு கான்பரென்ஸில் ஸங்கங்களை இன்ஸ்பெக்ஷன் செய்வதைப்பற்றிப் பேசினார்கள். இது விஷயமாய் மிஸ்டர் காலின்ஸ் பின்வருமாறு பேசினார்.

ஸங்கங்களை இன்ஸ்பெக்ட் செய்து மேற்பார்வை பார்த்துவர நியமிக்கப்படிருப்பவர்கள் படித்தவர்களாயும், கோவாபரேஷனின் கொள்கைகளையும் கோவாபரேஷனால் உண்டாகக்கூடிய நன்மைகளையும் நன்றாய் அறிந்தவர்களாயுமிருந்தாலொழிய கோவாபரேஷனில் ரொம்ப முன்னேற்ற மேற்படுவது முடியாது. ஆகவே ஸென்ட்ரல் ஸங்கங்களும் யூனியன்களும் கூடிய சீக்கிரத்தில் ஸங்கங்களை இன்ஸ்பெக்ட் செய்து மேற்பார்வை பார்த்து வருவதற்கு நல்லபடிப்புள்ளவர்களை நியமிக்கவேண்டுமென்று கான்பரென்ஸில் தீர்மானிக்கவேண்டும். ஆனால், இப்படி இனஸ்பெக்ட் செய்வதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் படிப்பாளிகளை நியமித்து விட்டால் ஸங்கங்களின் டிரெக்டர்களும் ஆனரரி வொர்க்கர்ஸ் என்று சொல்லப்படும் சம்பளமில்லாமல் கோவாபரேஷனுக்காக உழைத்துவருபவர்களும் ஸங்கங்களின் நடவடிக்கைகளில் அதிக ஊக்கம் பாராட்டாதிருக்கக்கூடுமென்று சிலர் சொல்லக்கூடும். ஆனால் ஸங்கங்கள் நாளாவட்டத்தில் ரொம்ப அபிவ்ருத்தி யடைந்து அவைகளின் நடவடிக்கைகளை கவனிப்பதென்பது ஜனங்களின் தினஸரிக் கார்யங்களில் ஒன்றாக ஆகிவிடுமாதலால் ஒவ்வொருவரும் இந்த ஸங்கங்களின் கார்யங்களில் ரொம்ப ஊக்கம் பாராட்டக்கூடும், என்றிப்படி மிஸ்டர் காலின்ஸ் சொன்னார்.

இது விஷயமாய் கான்பரென்ஸில் கொஞ்சம் விவாதம் நடந்த பிறகு பின்வருமாறு தீர்மானம் செய்யப்பட்டது. ஸென்ட்ரல் பாங்கிகள் தங்களாலியன்றவுடன ஸங்கங்களை இன்ஸ்பெக்ட் செய்யவும் மேற்பார்வை பார்க்கவும் நல்ல படிப்பாளிகளான பேர்களைத் தெரிந்தெடுத்துத் தக்க சம்பளம் கொடுத்து பாங்கிகளின் உத்யோகஸ்தர்களாக நியமித்துக் கொள்ளவும் வேண்டும்.

CO-OPERATIVE CREDIT.

ஐக்ய நாணயம்.

இந்த வர்ஷத்து விவஸாய பஞ்சாங்கத்தில் கோவாபரேடிவ் ஸங்கங்களின் ரெஜிஸ்ட்ராராகிய திவான்பகதூர் எல். டி. ஸ்வாமிக்கண்ணுப்பிள்ளை ஐக்ய நாணயத்தைப்பற்றி ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறார்.

இந்திய விவஸாயிகள் அநேகவிதமான கஷ்டங்களை அனுபவித்து வருவதற்கு அவர்கள் பழைய வழக்கங்களைக் கையாடி வருவது ஒரு காரணமாகும். உலகத்தின் மற்ற இடங்களில் கொஞ்சகாலமாய் ஸாகுபடியில் அநேக அபிவ்ருத்திகள் செய்யப்பட்டு அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. இந்தியாவில் விவஸாயத்திலுள்ள குறைகளை நீக்கி ஸாகுபடியில் அபிவ்ருத்திகள் செய்வதற்காக இந்தியா கவர்ன்மெண்டார் விவஸாய டிபார்ட்மெண்டை ஏற்படுத்தியிருக்கிறார்கள். கவர்ன்மெண்டார் விவஸாயிகளுக்குச் செய்திருக்கும் இன்னொரு உதவி என்னவென்

ரால், அவர்களுக்கு குறைந்தவட்டியில் மூல தனம் கிடைக்கும்படி செய்திருப்பதே. ஸாகுபடிக்காகவும், மற்ற செலவுகளுக்காகவும் விவஸாயிகளுக்கு பணம் தேவையாயிருக்கிறது. இதற்காக அவர்கள் கடன் வாங்கவேண்டியிருக்கிறது. இது விஷயத்தில் அவர்களுக்கு உதவி செய்வதுதான் ஐக்ய ஸங்கங்களின் நோக்கமாகும். ஐக்ய ஸங்கங்களின் நன்மைகள் இன்னவென்பது அநேகருக்குத் தெரியும். தெரியாதவர்களும் அநேகர் உண்டு. 1913ஹு ஜுன்மீ 30-உயில் இந்த ராஜதானியிலுள்ள க்ராமங்களில் 64,037-மெம்பர்கள் அடங்கிய 1,006 க்ராம சங்கங்கள் இருந்தன.

இந்த ராஜதானியில் ஆங்கிலேயர்களின் ஆளுகைக்கு உள்பட்ட க்ராமங்களின் ஜனத்தொகை 41,405,404. இவர்களில் 20,381, 955, ஆண்கள். இந்தத் தொகையில் 64, 64,037-ஜனங்கள் மாத்ரம் ஐக்ய ஸங்கங்களில் மெம்பராயிருப்பதால் ஐக்யத்தின் நன்மைகளை பெரும்பான்மையான க்ராமவாஸிகள் அநுபவிக்கிறதில்லை என்று நன்ருய் விளங்குகிறது.

2. ஐக்ய ஸங்கங்களில் மெம்பராயிராத ஆயிரக்கணக்கானவர்கள் மிதமிஞ்சின வட்டிக்கு கடன் வாங்குகிருர்கள். அப்படி வாங்கும் கடனுக்கு அதிகவட்டி கொடுக்கவேண்டியிருப்பதற்கு மூன்று காரணங்கள் இருக்கின்றன. அவையாவன:—

i. க்ராமங்களில் பணங் கொடுக்கும் முதலாளிகள் குறைவு. ஆகையால்தான் வட்டியின் விகிதம் அதிகப்படுகிறது.

ii. தக்க ஈடில்லாமல் கடன் கொடுப்பதாலும், நாணயமில்லாத கடன்காரர்களால் கடன் கொடுப்பவனுக்கு ஏற்படும் நஷ்டங்களை நாணயமுள்ள கடன்காரர் கொடுக்கும் வட்டியைக்கொண்டு ஈடுசெய்யவேண்டியிருப்பதாலும், தான் கொடுக்கும் கடனுக்கு முதலாளி (பணம் கடன் கொடுப்பவன்) அதிக வட்டி கேட்கிருன்,

iii. பூமியின்மேல் கடன் கொடுப்பது நல்ல ஈடேயாளுலும் அப்படிகொடுக்கப்பட்ட கடன்கள் எல்லாம் அதிகநாள் கழித்தே வஸுலாகுமானதாலும், கோர்ட்டில் செய்யும் தாவா முதலானவைகளுக்கு அதிக செலவு செல்லுகிறதாலும், கொடுக்கும் கடனுக்கு அதிக வட்டி கேட்கப்படுகிறது. க்ராமங்களில் வேண்டிய தொகை இருந்து, மேற்கூறியபடி பணம் ஸந்தேகமில்லாமலும் கோர்ட்டு முதலியவிடங்களுக்குப் போகாமலும் கடன்களை வஸுலிக்கக் கூடுமென்ற நிச்சயம் இருந்து, கடன் கொடுப்பவர்களும் கடன் வாங்குகிறவர்களும் ஒருவருக்கொருவர் மோச நினைவு இல்லாமல் நடந்து கொள்ளும்படி ஏற்பட்டால், தற்காலம் கடன் வாங்கும் குடித்தனக்காரர்கள் அதிக வட்டி கொடுக்கவேண்டியிராது.

கூடுமான வரையில் மேற்கூறிய அன்யோன்யங்களும் க்ரமமான நடவடிக்கைகளும் இருக்கும் படிக்கே ஐக்ய ஸங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நிச்சயமாய் ஈடில்லாதவைகளில் கைமுதலைப்போட்டு தேம்புவதற்கு பதிலாக அவச்யமாய் அபிவ்ருத்தியாக வேண்டிய விவஸாய விஷயங்களுக்கு வேண்டிய முதலை ஐக்ய சங்கம் சேர்க்கிறது. கைமீதியாயிருக்கும் பணங்களை பலவிடத்திலிருந்தும் ஒருமித்து சேர்த்து ஏழைக்குடியானவர்களுக்கு தேவையான பணஉதவியை ஐக்ய ஸங்கம் கொடுக்கிறது. கடன் கொடுப்பவர்களுக்கும் கடன்வாங்குகிறவர்களுக்கும நியாய வட்டியும் ஐக்ய ஸங்கத்தால் ஏற்படுகிறது.

ஒரு க்ராமத்தில் அநேகர் தாங்கள் கடன் கொடுக்கவும் கடன் வாங்கவும் ஒரு ஐக்ய ஸங்கத்தில் சேருகிருர்கள். ஒவ்வொருவரும் தனியே ப்ரயாஸை எடுத்துக்கொள்வதால் அடையமுடியாத அநுகூலங்களை எல்லோரும் ஒன்றுசேருவதனுல் அடைகிருர்கள். தவிரவும் ஒரு ஐக்ய ஸங்கத்தில் விசேஷ ஸொத்தில்

லாத ஏழைக் குடியானவனும் மற்றவர்களைப் போல் அனுகூல மடைகிறான். ஒருவன் யோக்யனாயும் ஸம்பாதிக்க சக்தியுள்ளவனாயுமிருந்தால், அவன் ஏழையாயிருந்தாலும அவனுக்கு ஈடுவைக்க ஸொத்திருப்பது போல பாவிக்கப்படும். அதாவது அவன் ஒரு நாணயஸ்தனாக எண்ணப்படுவான். ஒவ்வொருவனுடைய நன்மைக்காக எல்லோரும் தங்களுடைய எல்லா ஸொத்தையுமே யல்லாமல் தங்களுடைய வல்லமைகளையும் ஒன்று சேர்க்க ஒப்புக்கொள்ளுவதுதான் ஐக்ய மென்பது. இப்படி ஒன்று சேர்ந்து ஒரு கூட்டத்தார் கடன் வேண்டுமென்றால், கடன் கொடுப்பவனுக்கு வாங்கும் கடனை இவர்கள் எல்லோரும் சேர்ந்தால் வாப்ஸ் செய்வார்கள் என்று முழு நம்பிக்கை ஏற்படுமல்லவா? அப்படியிருக்கும் நம்பிக்கையினால் நாணயமுள்ளவர்கள் ஒன்று சேர்ந்த ஒரு ஸங்கத்துக்கு குறைந்த வட்டிக்கு கடன் கிடைக்கிறது. இப்படி அனேகம் ஸங்கங்கள் ஏற்பட்டால், அனேக விடங்களிலிருக்கும் ஸாவ்கார்கள் இந்த ஸங்கங்களுக்கு கடன் கொடுக்க சீக்ரம் முன்வருவார்கள். அப்பொழுது தேவையான பணம் வெளிவரும். சென்னை ராஜதானியில் ஒவ்வொரு க்ராமத்திலும் இம்மாதிரி ஸங்கம்ஒன்று இருக்கலாம். அப்படி ஏற்பட்டால்க்ராமவாஸிகளுக்கு அந்த ஸங்கத்தால் அதிக நன்மையுண்டாகும்.

CO-OPERATION IN COORG.

குடகில் கோவாபரேஷன்.

குடகில் கோவபரேடிவ் ஸங்கங்கள் 1905-ம் வர்ஷத்தில் ஏற்படுத்தப்பட்டன. அந்த வர்ஷத்தில் 6-ஸங்கங்களும் 507 மெம்பர்களும் இருந்தார்கள். நடை முதல் பணம் 9,400 ரூபாயாக விருந்தது. சென்ற வருஷம் அந்த மாகாணத்தில் 28 ஸங்கங்களும் 2320 மெம்பர்களும் இருந்தார்கள். அந்த ஸங்கங்களுக்கு நடை முதல் பணம் 91,500 ரூபாய் இருந்தது. ரிஸர்வு பண்ட் 15,050 ரூபாயாகும். செலுத்தப்பட்ட பங்குகளின்தொகை 37,800 ரூபாய். இந்தத் தொகை மெம்பர்கள் மிச்சம் பிடித்து ஸங்கங்களில் போட்ட தொகையாகும். நாள்பட்ட ஸங்கங்கள் சென்ற வருஷம் 3071-ரூபாய் டிவிடெண்டாகக் கொடுத்தன. ஸங்கங்கள் நூற்றுக்கு 10-முதல் 21-வரையில் டிவிடெண்டாகக் கொடுத்தன.

THE WOKK BEFORE US.

நாம் இன்னும் செய்யவேண்டிய வேலை.

திவான்பகதூர் கே. க்ருஷ்ணஸ்வாமி ராவ் சென்னை ப்ரொவின்ஷ்யல் கோவாபரேடிவ் கான்பரென்ஸில் சொன்னபடி செங்கல்பட்டு ஜில்லாவிலுள்ள ஸங்கங்களின் ஸங்க்யை ஒவ்வொரு ஜில்லாவிலும் இருக்கவேண்டிய ஸங்கங்களின் ஸங்க்யையாக வைத்துக்கொண்டால் இந்த ராஜதானியில் 4800 ஸங்கங்கள் இருக்கவேண்டும். ஆனால் இப்போது இருக்கும் ஸங்கங்கள் 1100-தான். 6 கோடியே 20 லக்ஷம் ஜனமுள்ள ஜெர்மனியில் 20,000-ஸங்கங்களிருக்குமானால் 4-கோடியே 20-லக்ஷம் ஜனமுள்ள சென்னைராஜதானியில் 14,000 ஸங்கங்கள் இருக்கவேண்டு மென்றாகிறது. இந்த எண்களால் நாம் இன்னும் எவ்வளவு உழைக்க வேண்டுமென்பது ஏற்படுகிறது. வெகுசீக்ரம் இத்தனை ஸங்கங்களும் ஏற்படவேண்டும் என்று சொல்ல வரவில்லை. ஆனால் வேலை மெதுவாயும் நிதானமாயும் நடக்கவேண்டும்.

CO-OPERATION IN ANCIENT INDIA.

பூர்விகத்தில் இந்தியாவில் கோவாபரேஷன்.

வேம்பனூர் கோவாபரேடிவ் ஸங்கத்தின் முதலாவது வர்ஷாந்தர மீட்டிங்கில் ப்ரும்மஸ்ரீ வித்வான் நரஸிம்மாசாரி ஸ்வாமி கோவாபரேஷனின் லக்ஷ்யத்தைப்பற்றிச் செய்த ஒரு ப்ரஸங்கத்தில், கோவாபரேஷன் முதல் முதலில் ஐரோப்பியர்களால் கண்டுபிடிக்கப்படவில்லை யென்றும், மனுஸ்ம்ருதியிலும், யாக்ஞவல்க்ய ஸ்ம்ருதியிலும் கோவாபரேஷன் விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன வென்றும், நமது தேசத்து பூர்விக சட்டக் கோட்பாடுகளில் கோவாபரேஷன் ஒரு முக்ய அம்சமாக இருந்த தென்றும் சொன்னார்.

The Commercial World.

வ்யாபாரப் பகுதி.

BELL-METAL INDUSTRY.

வெண்கலப் பாத்ரம் செய்யும் தொழில்.

வெள்ளீயம், துத்த நாகம், செம்பு ஆகிய மூன்று லோகங்களையும் கணக்காய்ச் சேர்த்து உருக்குவதாலுண்டாகும் மிச்ரலோகம் தான் வெண்கலம். இதன் விலை மணங்கொன்றுக்கு 30-லிருந்து 40-ரூ. வரையிலிருக்கிறது. வெது வாய் கன்னார்கள் புதிதாய் மிச்ரலோகத்தைச் செய்வதில்லை; உடைந்து போன பாத்ரங்களையே வாங்கி உருக்கி வேண்டிய மாதிரி வார்க்கிறார்கள். ஏனெனில் புதிதாய்ச் செய்து கொள்வதில் விலை கட்டுவதில்லை. நஷ்டமும் ஏற்படக் கூடும். பழைய வெண்கலத்தில்செய்த ஸாமான்களுக்கு நன்றாய் மெருகிடலாம். கன்னான் தன் பட்டரையில் சில்லரை வேலைக்காக ஆட்களுக்கு 2 ரூ-யிலிருந்து 8 ரூ வரை மாதச் சம்பளம் கொடுக்கிறான். பாத்ரம் வார்த்துத்தர கன்னான் ச்ரமத்துக்கும் பாத்ரத்துக்கும் தக்கபடி 1 ரூ-முதல் 6 ரூ-வரை கூலிவாங்குகிறான்.

வெண்கல வ்யாபாரிகள் ஸொந்தத்தில் பட்டரை வைத்து கன்னான்களுக்கு 'அத்தக்' கூலியோ மாதச் சம்பளமோ கொடுத்து வருகிறார்கள். சென்ற 20-வர்ஷத்தில் இவர்களின் கூலி முன்னிருந்ததை விட ரூபாய்க்கு ஒரு அணா விதம் உயர்ந்திருக்கிறது. வெண்கல வ்யாபாரிகள் ஒட்டு மொத்த பேரத்தில் சேர் ஒன்றுக்கு ஒரு அணா அல்லது இரண்டு அணா லாபமும், சில்லரை பேரத்தில் 2 அல்லது 4 அணா லாபமும் எதிர் பார்க்கிறார்கள்.

வெண்கல வ்யாபாரிகள் எடத்தட்டில் இப்படி கொள்ளை யடிக்காமலிருக்கவும், வெண்கல ஸாமான் செய்யும் தொழில் வ்ருத்தியாகவும் உள்ள ஸாதனங்களை விசாரிப்போம். ஹிந்து குடும்பங்களில் அநேக காலமாக சமையல் பர்த்ரம், ஜலபாத்ரம், வெற்றிலை பாக்குத் தட்டு போன்ற பல வெண்கல ஸாமான்கள் பழக்கத்திலிருந்து வருகின்றன. இவைகளின் விலை அதிகமாயிருத்தலை கவனித்து, ஸரஸமான எனமல் பாத்ரங்கள் வாங்கப் படுகின்றன. வெண்கலப்பாத்ரம் உடைந்தோ ஓட்டையாயோ போனாலும் கொடுத்த விலைக்கு பாதியோ மூன்றிலொரு பங்கோ கிடைப்பது உறுதி. எனமல் பாத்ரத்தில் எனமல் உதிர்ந்துபோனால் தம்படிகூட யாரும் கொடுக்க மாட்டார்கள். இருந்தாலும் நம் ஏழ்மை ஸ்திதியானது வெண்கலப் பாத்ரங்களை வாங்க இடையூறாயிருக்கிறது. கன்னான்கள் வெங்கலத்தை உருக்கவும் வார்க்கவும், உருவப் படுத்தவும் ஆள்களை வைத்து அவர்களுக்குக் கூலி கொடுப்பதாலும், வ்யாபாரிகள் அதிகலாபம் வைத்து விற்பதாலும் பாத்ரங்களின் விலை தூக்கி நிற்கிறது.

வார்ப்புக்கு அச்சுகளும், கடையவும் தேய்க்கவும் யந்த்ரங்களும் வைத்து, ஒரு தொழிற் சாலை ஏற்படுத்தலாம். வேண்டிய யந்த்ரங்களுக்கு 300-ரூ க்கு மேலே பிடிக்காது.

(2) சென்னைக் கன்னார்கள் உபயோகித்து வரும் கடைசல் யந்த்ரத்தை உபயோகிப்பதால் வேலை ஸுலபமாயும் சீக்ரமாயும் முடியும். ச்ரமும் அதிகமில்லை.

(3) தற்காலம் கத்தரியைக் கொண்டு வெட்டுவதற்கு பதிலாக பஞ்சிங் மெஷீன்களை உபயோகிக்கலாம்.

(4) இப்போது உபயோகித்து வரும் அச்சுகளைவிட உயர்ந்தவையாயும் அதிக நாள்

உபயோகத்துக்கு வருவனவாயுமுள்ள அச்சுகளை உபயோகிப்பது நல்லது. மேலே கூறியுள்ள சீர்திருத்தங்கள் ஒரு புறமிருக்க, இப்பாத்ரங்களைப் பற்றி ஜனங்கள் அறியும்படி விளம்பரம் செய்யவேண்டும். வென்கலப் பாத்ரங்கள் ஏராளமாய் வங்காளத்தில் செலவாகும். ஆகையால் இத்தொழிலில் ஊக்கமாய் வேலை செய்பவர்களுக்கு நல்ல லாபம் உண்டு. மற்றுமொரு விஷயம். நமது கன்னார்கள் அவர்களுடைய முன்னோர்கள் செய்துவந்த மாதிரிகளையே பின்பற்றிச் செய்து வருகிறார்களேயன்றி நவீனமாய்ப் புது மாதிரிகளைச் செய்கிறதில்லை. நல்ல சித்ரவேலைப்பாடுள்ள பாத்ரங்கள் செய்ய அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தால் வ்யாபாரம் நன்றாக பலக்கும்.

PRESERVING FRUITS.

பழங்களைக் கெட்டுப்போகாமல் வைத்திருப்பது.

சென்ற தை மாஸத்து ஸஞ்சிகையில் பழங்களை வெகுகாலம் கெட்டுப்போகாமல் வைத்திருப்பதற்கு ஒரு ப்ரெஞ்ச் சாஸ்த்ரி கண்டுபிடித்திருக்கும் ஒரு நூதன முறையைப்பற்றி எழுதியிருந்தோம். அதைவிட மிகவும் ஸுலபமான வழிகள் இரண்டு இருக்கின்றன. முதல் வழியின்வருமாறு: மாம்பழம், அனுசிப் பழம், ஆரஞ்சு முதலிய பழங்களை நல்லதாய்ப் பார்த்து ஜாக்ரதையாகப் பறித்து மேலேயிருக்கக்கூடிய தூசி முதலியவைகளை ஈரத்துணியால் துடைத்துவிட்டு ஈரம்போகக் காற்றில் வைத்து உலர்த்தவும். பழங்கள் நன்றாய் உலர்ந்தவுடன் அவைகளை ஒவ்வொன்றாய் எடுத்து டிஷ்யூ பேபர் என்று சொல்லப்படும் மிகவும் மெல்லிய கடுதாசியில் வைத்துச் சுற்றி வைத்துக்கொள்ள வேண்டும்.

பழங்களை பத்ரப்படுத்துவதற்கு சுத்தமான உலர்ந்த மணல் வேண்டும். போதுமான அளவு மணல் கொண்டுவந்து அதை ஒரு சல்லடையில் போட்டுச் சலித்தால் மணல் பெரிதும் சிறிதுமாயிராமல் ஒரே சீராய்க்கிடைக்கும். பழங்களை வைக்க ஒரு மூங்கில் கூடையாவது பிரம்புக் கூடையாவது வாங்கி வைத்துக் கொள்ளவும். இந்தக் கூடையை அடிக்கடி இடம் மாற்றக் கூடாதாகையால் அப்படி மாற்றுவதற்கு அவச்யம் ஏற்படாத ஓரிடத்தில் வைத்து, கூடையின் உட்புறத்தின் அடியில் மணலைக்கொஞ்சம் கொட்டிப் பரப்பவும். பழம் ரொம்ப பெரியதாயும் கனமாயும் இருந்தால் அடியில் அதிகமாக மணல்போட வேண்டும். இந்த மணல்மேல் பழங்களை ஒன்றின்மேலொன்று படாதபடி வைத்துவிடவும். பழங்களுக்கிடையில் சந்திருக்கவேண்டும். இந்த சந்தில் மணலைப்போட்டு மூடிப்பிறகு பழங்களின்மேல் மணலைக்கொட்டிப் பழங்களை நன்றாய் மூடிவிடவேண்டும். இந்த மணல்மேல் ஒரு வரிசைப் பழமும் அதன்மேல் மணலுமாக இப்படியே பழமும் மணலுமாய் கூடை நிரம்பும் வரையில் வைக்கவும்.

ஆனால் அதிக வரிசைகளில் பழங்கள் வைத்தால், மேலேயுள்ள பழங்கள் கீழேயுள்ள பழங்களை அழுத்திக் கீழேயுள்ள பழங்கள் நசுங்கியோ இடம்விட்டுப் பெயர்ந்தோ போய்விடும். அனுசிப் பழங்கள் வைப்பதில் ஒன்றின்மேலொன்றாய் மூன்று அடுக்குகள் வைத்தால் போதும். மாம்பழங்களில் 5 அல்லது 6 அடுக்குகள் வைக்கலாம். ஆரெஞ்சு பழங்களிலும் 5 அல்லது 6 அடுக்குகள் போதும். வாழைப் பழத்தைச் சீப்புகளாக வைப்பது நல்லது. இதை 4 அல்லது 5 அடுக்குகளாக வைப்பது போதும.

இந்த முறையில் மணல் சேருவதில் பழக்கூடைகள் மிகவும் கனமாய்ப் போவதால், இவைகளை வெளியூர்களுக்கு அனுப்புவது கஷ்டமாகும். வெளியூர்களுக்கு அனுப்ப இரண்டாவதுமுறை நல்லது. இதில் மணலுக்குப் பதிலாகக் கார்க்குத்தூளை உபயோகிக்க வேண்

டும். கார்க்குத்தூள் பெரிய இங்க்லீஷ் மருந்துக்கடைகளில் தான் கிடைக்கும். பழங்களை ஜாதிக்காய் பலகைப் பெட்டிகளில் வைக்கவேண்டும். பழங்களை முன்போலவே பதித்து கடுதாசிகளில் சுற்றவேண்டும்.

பழங்களை பெட்டியில் வைப்பதும் முன்போலத்தான். பழங்களுக்கிடையிலுள்ள சந்துகளிலெல்லாம் கார்க்குத்தூளைப் போட்டு நிரப்ப வேண்டும். கார்க்கு உபயோகிப்பதில் பழங்கள் உஷ்ணத்தாலும், குளிர்ச்சியாலும் பாதிக்கப்படாமல் காக்கப்படுகின்றன. ஆயினும் கார்க்குத்தூள் பெரிய பட்டணங்களிலுள்ள வர்களுக்குத் தான் கிடைக்குமே யொழிய எல்லாருக்கும் அகப்படாதாகையால் யாவரும் உபயோகிக்கக் கூடியது முதலில் கூறிய மணல் முறைதான்.

இரண்டு முறைகளிலும் நாம கவனிக்க வேண்டிய முக்யமான விஷயங்கள் சில இருக்கின்றன. பழங்கள் நசுங்கியாவது, கெட்டாவது, அல்லது ரொம்பப் பழுத்தாவது இருக்கக்கூடாது. கொஞ்சம் காய் வெட்டாயிருப்பது ரொம்ப உத்தமம். பழங்களில் கொஞ்சமேனும் தூசியாவது ஈரமாவது இருக்கக்கூடாது. பழங்களுக்கிடையில் கொஞ்சமும் காற்றுப்புகாதபடி மணலைக் கொட்டியிருக்க வேண்டும். மேலிருக்கும் பழங்கள் கீழிருக்கும் பழங்களை ரொம்பவும் அழுத்தக்கூடாது.

பழங்களை உபயோகிக்க வேண்டுமானால் பழங்களை வெளியிலெடுத்து குளிர்ந்த ஜலத்தில் நனைத்துப் பிறகு கடைகளில் பரப்பி வைக்கலாம். அந்தந்தப் பழக்காலங்களில் பழங்களை இந்த முறையில காப்பாற்றி வைத்திருந்தால் பழங்கள் அகப்படுவது அருமையாயிருக்கும் காலங்களில் அவைகளை உயர்ந்த விலைக்கு விற்று லாபமடையலாம். கொஞ்சம் முதல் போட்டால் இந்த முறைப்படி ஏராளமான பழ வ்யாபாரம் செய்யக்கூடும். மணல் முறை மிகவும் ஸுலபமானதால் நமது தேசத்து வ்யாபாரிகள் பரீக்ஷார்த்தமாகச் செய்துபார்த்து த்ருப்திப்பட்டால் அதையே அனுஷ்டித்து லாபமடையலாம்.

GROUND-NUT TRADE.

வேர்க்கடலை வ்யாபாரம்.

ப்ரான்ஸின் தெற்கிலுள்ள மார்ஸேல்ஸ் என்னும் துறைமுகப்பட்டணம் எண்ணெ யாட்டும் தொழிலுக்கு ரொம்பவும் பெயர்போனது. உலகத்திலுள்ள மற்றெல்லா பட்டணங்களையும் விட அதில்தான் அதிகமாக எண்ணெயாட்டப்படுகிறது. அங்கே42-மில்லுகளும் 1900 ப்ரெஸுகளும் இருக்கின்றன. அங்கே எண்ணெயாட்ட விசேஷமாய் உபயோகப்படும் எண்ணெய் வித்து வேர்க்கடலையாகும். மொத்தம் எண்ணெயாட்டப்படும் பொருள்களில் இது நூற்றில் 60 பங்காகிறது. ஸுமார் பத்துவித வேர்க்கடலை அந்தப் பட்டணத்துக்குள் இறக்குமதியாகிறது. வேர்க்கடலை தோலெடுத்த பருப்பாகவும், தோலெடுக்காமலும் அங்கே இறக்குமதியாகிறது. தோலெடுக்காத கடலை மேற்கு ஆப்ரிக்காவிலுள்ள ப்ரான்ஸுக்கு ஸொந்தமான குடியேற்ற நாடுகளிலிருந்துதான் விசேஷமாய்ப் போகிறது. வேர்க்கடலைப்பருப்பு விசேஷமாய் சீனா, பம்பாய், சோழமண்டலக்கரை (அதாவது சென்னை ராஜதானியின் தென் கிழக்கு ஜில்லாக்கள்) ஆகிய இவ்விடங்களிலிருந்து போகிறது.

தோல் எடுக்காமல் வரும் வேர்க்கடலையிலிருந்துதான் நல்ல எண்ணெய் கிடைக்கிறதாம். இந்தத் தோலுரிக்காத கடலை நன்றாய் உலர்த்தப்பட்டு 20-படி கடலை கொள்ளும்படியான கோணிப்பைகளில் போட்டுக் கட்டியனுப்பப்படுகிறதாம. அந்தப் பைகளை எண்ணெயாட்டும் வரையில் மில்லுகளிலேயே பத்ரமாய் வைத்துக்கொள்ளுகிறார்கள். சீனா,

மொஸாம்பிக், பம்பாய் ஆகிய இவ்விடங்களில் கடலையைத் தோலுரிப்பதில் ரொம்ப ஜாக்ரதை யெடுத்துக்கொள்வதால் அவ்விடங்களிலிருந்து அனுப்பப்படும் வேர்க்கடலைப்பருப்பிலிருந்தும் நல்ல எண்ணெய் ஆட்டப்படுகிறது. சீனுவில் வேர்க்கடலையிலிருந்து கையால் தோலுரித்து எடுத்து நன்ருய்க் காயவைத்து அனுப்புகிருர்கள். சீனுவிலிருந்து அனுப்பப்படும் வேர்க்கடலை நொருங்கியாவது, உடைந்தாவது இருப்பதில்லை. மொஸாம்பிக்கில் வேர்க்கடலையைக் காயவைத்து தடியாலடித்து பிறகு கையால் தோலை ஸுலபமாய் எடுத்துவிடுகிருர்கள். இதில் கடலைப் பருப்பு கொஞ்சம் உடைந்திருக்குமென்ருலும், அதை நன்ருய்க் காயவைத்து ஈரமாகாதபடி பத்ரப்படுத்தி விடுவதால் அது நல்ல நிலைமையிலேயே போய்ச் சேருகிறது. பம்பாயில் வேர்க்கடலையைத் தடியாலடித்து தோலெடுத்தும், யந்த்ரத்தால் தோலெடுத்தும் பருப்பைப் பிரிக்கிருர்கள். யந்த்ரத்தால் தோலுரிப்பதில் அநேகமாய் எப்போதும் பருப்புகள் உடைந்து போகின்றன.

சென்னையிலிருந்து அனுப்பப்படும் வேர்க்கடலைப்பருப்பு கொஞ்சம் தாழ்ந்ததாக இருப்பதால் பம்பாய்ப் பருப்பைவிடக் குறைவாகவே விலைப்போகிறது. சென்னைப் பருப்பு தயாரிக்கும் முறையைச் சீர்திருத்தி அதற்கு ஒரு க்ராக்கி ஏற்படுத்திவிட்டால், அதற்கும் பம்பாய்ப் பருப்பு விலை கிடைக்கும்.

தற்போது சென்னை ராஜதானியில் வேர்க்கடலையை தோலுரிப்பதற்குமுன் ஜலத்தில் நனைக்கிருர்கள். இதனுல் தோலானது பெரும்பாலும் தானுகவே வெடித்துக்கொள்கிறது. பிறகு கடலையை தடியாலடித்து தோலுரித்துப் பருப்பைப் பிரித்தெடுக்கிருர்கள். பருப்பை எடுத்த பிறகு அதை நன்ருய்க் காயப்போடாமலே ஏற்றுமதி செய்துவிடுகிருர்களாதலால், அது மார்ஸேல்ஸுக்குப் போய்ச்சேரும்போது சூடாகவும், கெட்ட நாற்றமுடையதாகவும் இருக்கிறது. பருப்பு இப்படிக் கெட்ட நிலைமையிலிருப்பதால் அதிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் நூற்றுக்கு 15 முதல் 25 வரையில் எண்ணெய் ஸம்பந்தமான த்ராவகங்கள் கொண்டதாக இருக்கிறது. மேலும் அந்த எண்ணெய் சிக்கு நாற்றமுள்ளதாகவும் கசப்பாயும் இருக்கிறது. இதனுல் அது சாப்பாட்டுடன் உபயோகிக்க ப்ரயோஜனப்படுவதில்லை.

நம்மவர்கள் வேர்க்கடலையைத் தோலுரித்துப் பருப்பு எடுப்பதில், கடலையை ஜலத்தில் நனைக்காமலிருந்து, ஏற்றுமதி செய்யுமுன் பருப்பை நன்ருய்க் காயவைத்து உலர்த்தி அனுப்பினுல் இந்த ப்ரதேசத்துப்பருப்புக்கும், மற்ற உயர்ந்த பருப்புக்குக் கிடைக்கும் விலை கிடைத்துவரும் என்பதில் ஸந்தேகமில்லை. நமது தேசத்து விவஸாயிகளும் வ்யாபாரிகளும் வேர்க்கடலையைப் பருப்பாக்குவதில் அதிக ஜாக்ரதை யெடுத்துக்கொள்வார்களென்று நம்புகிருேம்.

BUSINESS ENTERPRISE IN INDIA.

இந்தியாவின் வ்யாபார ஊக்கம்.

இந்தியாவில் சென்ற ஜனவரிமாஸத்தில் அடியில்கண்ட விவரப்படி 23-கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

3	பாங்கி லேவாதேவி கம்பெனிகள்	...	8,50,000
5	இன்ஷூரென்ஸ் கம்பெனிகள்	...	13,00,000
2	அச்சிட்டு ப்ரசுரம் செய்யுங் கம்பெனிகள்	...	40,000
6	வ்யாபாரக் கம்பெனிகள் (மேலே சொன்னவை தவிர		50,07,06,400
1	பஞ்சுத்தி மில் கம்பெனி	....	5,00,000
1	ஜூட் மில் கம்பெனி	...	2,50,000
1	அரிசி மில் கம்பெனி	...	1,50,000
1	எண்ணெய் மில் கம்பெனி	...	1,50,000
2	தேயிலை தோட்டக் கம்பெனிகள்	...	3,50,000
1	சர்க்கரை செய்யும் கம்பெனி	...	6,00,000
23			50,48,96,400

The Educational World.

வித்யாவிஷயப் பகுதி.

PLANETS.

BY

M. C. S. ANANTHA PADMANABA ROW.

நவ க்ரஹங்கள்.

"க்ரஹசாரம் நம்மைவிட்டதா?" "சுக்ர தசை அடிக்கிறது, கை வைத்ததெல்லாம் மங்களம்." "அவன் நாக்கில் சனி, தன்வாயினாலேயே அவன் கேடு அடைகிறான்." இவைகளும் இவைபோன்ற வேறு வாக்யங்களும் ஜனங்கள் ஸாதாரணமாக வழங்குவதை கேட்டிருப்பீர்கள். நீங்களும் ஸமயோக்தமாய் உபயோகித்திருக்கலாம். க்ரஹம், சுக்ரன், சனி முதலான வார்த்தைகள் எவற்றைக் குறிப்பிடுகின்றன என்பதை தெரிந்தவர்கள்தான் இம்மொழிகளை உபயோகிப்பதாகத் தோன்றவில்லை. கிரஹங்கள் எத்தன்மையன வென்பதையும், அவற்றை எவ்வாறு தெரிந்துகொள்ளலாம் என்பதையும்பற்றி இந்த வ்யாஸத்தில் விவரிப்போம்.

வானம் என்பது நமது தலைக்குமேல் உயர்ந்தும் நாலாபக்கமும் குவிந்தும் கவிழ்த்து வைக்கப்பட்ட ஒரு தேங்காய் சிப்பியைப் போல் தோன்றுகிறது. அவ்வானத்தில் அனேக நக்ஷத்ரங்கள் பதித்து வைத்திருப்பவைபோல் காணப்படுகின்றன. சேர்ந்தாற்போல் 4, 5 தினம் ஸாயந்திரம் வானத்தை கவனித்தால், நமக்குத் தென்படும் வான்மீன்கள் கும்பல் கும்பலாக ஓரோர் இடத்தில் நிற்பனபோலவும், ஆகாயமண்டலமே இவைகளுடன் பூமியைச் சுற்றி வருவதுபோலவும் காணும். அக்கூட்டங்கள் எவ்விடத்தில் ஆகாயத்தில் தோன்றினாலும், அவற்றின் இடை வெளியாலும் ப்ரகாச வேற்றுமையாலும், வர்ணபேதங்களாலும், கூட்டத்தின் விசித்ர அமைப்பாலும் அவைகளைக் கண்டுபிடித்துவிடலாம். இந்த மாதிரி காணும், மின்மினிக் கும்பல்களுக்கு அனேக க்ராமங்களைக் குறிக்கும் ஜில்லா பேர்களைப்போல, நக்ஷத்திரப்பேர் வைத்திருக்கிறார்கள். க்ருத்திகை என்பது இம்மாதிரியான ஒரு கூட்டம். புடலம்பூவைப்போல 6 சிறிய நக்ஷத்ரங்கள் கொஞ்சம் வெளிச்சத்துடன் பிப்ரவரி மாஸத்தில் ஸாயந்திரம், ஸூர்யன் மாலை 2-மணி ஸுமாருக்கு காணும் இடத்தில் தோன்றும். க்ருத்திகையின் பக்கத்தில் சந்த்ரன்வரும் தினம் க்ருத்திகை நக்ஷத்ரம். அச்வினி, பரணி முதலிய 27 நக்ஷத்ரங்களும் இம்மாதிரியான கும்பல்களே. இவைகள் சந்த்ரஸூர்யர்கள் செல்லும் மார்க்கத்திலேயே இருக்கின்றன.

வாரத்திற்கு ஒரு முறையாக சிலவாரங்கள் மாலை 7-மணிக்கு நாம் காணும் நக்ஷத்ர ஸ்தானங்களை ஒப்பிட்டால், இந்த விண்மீன்கள் ஒரே இடத்தில் இருப்பதில்லை யென்று தெரியவரும். கொஞ்சம் சாய்ந்து மேற்கில் காணும் க்ருத்திகை, இன்னும் இரண்டு மாஸத்தில் 7-மணி ஸுமாருக்கு அஸ்தமனமாகிவிடும். இப்போது கிழக்கில் தோன்றும் ஆகாய ஜோதிகள் அக்காலத்தில் நமது தலைக்குமேல் காணப்படும். என்றாலும் எந்தக் காலத்திலும் நக்ஷத்ரங்களின் அமைப்பும் ஒன்றுக் கொன்றுள்ள இடைவெளிகளும் மாறுவதே யில்லை.

இரவில்தான் நக்ஷத்ரங்கள் தென்படுகின்றன. பகலிலும் அவைகள் ஆகாயத்தில் இருக்கும் என்பதற்கு ஸூர்ய க்ரஹண காலங்களில் அவைகள் தென்படுவதும், ஆழமான பாழ்ங்கிணறுகளிலிருந்து மேலே பார்த்தால் தென்படுவதுமே அத்தாக்ஷியாகும். ஸூர்யன் அஸ்தமித்து ஒளி மழுங்க மழுங்க நக்ஷத்ரங்கள்

விளங்குகின்றன. அஸ்தமனமானவுடன் தலைக்குமேல் காணும் நக்ஷத்ரம் 3 மாஸம் கழித்து அக்காலத்தில் அஸ்தமனமாகிறதென்றால், ஸூர்யன் அம்மண்டலத்தில் தன் இடம் விட்டு நகர்ந்து செல்லுகிறான் என்று சொல்லவேண்டியதுதானே. ஸூர்யனும் நக்ஷத்ரங்களும் ஒவ்வொரு தினமும் கிழக்கில் உதித்து மேற்கில் அஸ்தமனமாவதாகத் தோன்றும் தினகதியுடன் நக்ஷத்ரமண்டலத்தில் மேற்குமுகமாய்ப் பெயர்ந்து செல்கின்றனவென்று நாம் த்ருஷ்டி அனுபவத்தால் கண்டுகொள்ளலாம். ஸூர்யன் இம்மண்டலத்தில் தினம் தினம் கொஞ்ச கொஞ்சமாகப் பெயர்ந்து சென்று ஒருவர்ஷ காலத்தில் தன் பழையஸ்தானத்தை வந்தடைகிறான். இது ஸூர்ய வர்ஷகதி என்று சொல்லப்படும்.

ஸூர்யனைப்போல் ஆகாயமண்டலத்தில் ஸஞ்சரிக்கும் வானஜோதிகள் வேறு உண்டோவென்று கவனிக்கும்போது, சந்த்ரனும் இம்மாதிரிதான் என்றும், ஸுமார் 27 தினத்தில் ஒருமண்டலப்ரதக்ஷணம் செய்கிறது என்றும், இந்த மாஸகதியும் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி யிருக்கிறதென்றும் குழந்தைகளும் சொல்லிவிடுவார்கள்.

இம்மாதிரி தினகதியன்றி மற்றொரு கதி உள்ளவையான ஆகாயமண்டலத்து ப்ரகாசிகளுக் கெல்லாம் க்ரஹங்கள் என்று பெயர். இவைகளைக் கவனித்தும் அவைகள் தோன்றும் காலத்தாலும் ஸ்தானபேதத்தாலும் அப்போதைக்கப்போது உலகத்தில் நடைபெறும் விசேஷங்களை குறிப்பிட்டுவைத்தும், ஜோதிட சாஸ்த்ரத்தை நமது தேசத்து வித்வான்கள் அனேக நூற்றாண்டுகளுக்கு முன் எழுதி வைத்திருக்கிறார்கள். இவைகளின் கதிகளை நக்ஷத்ரசாலைகளில் நன்றாய் தினந்தோறும் கவனித்து எழுதிவைத்து, அவைகள் எக்காலத்தில் எந்த இடத்தில் ஆகாயத்தில் தென்படும் என்பதை வெகுநாள் முன்னதாகவே கணக்கிட முடியும்படியான ஸூத்ரங்களையும், வாக்யங்களையும் ஊஹித்து, கணிதசாஸ்திரம் எழுதப் பட்டிருக்கிறது. இந்த உதவியால்தான் வர்ஷம், மாஸம், திதி, நக்ஷத்ரம், க்ரஹசாரங்கள் ஆகிய இவைகளெல்லாம் கணிக்கப்பட்டு நமது ஸ்வதேச பஞ்சாங்கங்களில் ப்ரசுரிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு ப்ரபலத்துக்கு வந்த சாஸ்த்ரங்கள் இப்போது நமது தேசத்தில் அபிவ்ருத்தியின்றி க்ஷீணதசைக்கு வந்திருப்பது. தேசாபிமானிகளுக்கு மனவருத்தத்தைத் தரத்தக்கதாக இருக்கிறது.

க்ரஹங்களென்று நாம் ஸாதாரணமாக கணக்கிடுவன ஒன்பது. அவை ஸூர்யன், சந்த்ரன், செவ்வாய், புதன், வியாழன் அல்லது குரு, சுக்ரன் அல்லது வெள்ளி, சனி, ராகு, கேது. முதல் ஏழும் 7 வாரங்களின் பெயரோடு ஸம்பந்தப்பட்டிருக்கின்றன. இவ்வேழையும் கண்ணால் காணலாம். அவற்றின் சலனத்தாலே கண்டுகொள்ளலாம். கடைசியில் சொன்ன ராகு கேது க்ரஹங்கள் கண்ணுக்கு புலப்படாத ஸூர்ய சந்த்ர மார்க்கத்தில் உள்ள இரண்டு ஸ்தானங்கள். இவைகளும் க்ரஹங்களைப்போல ஆகாயமண்டலத்தில் இடம் மாறும். இந்த ஸ்தானங்களண்டையில் ஸூர்ய சந்த்ரர்கள் சேர்ந்து வந்தால் க்ரஹணங்கள் நேரிட ஸந்தர்ப்பம் ஏற்படும். கண்ணுக்குத் தெரியாததால் இவைகளை சாயா க்ரஹங்களென்று சொல்லுவார்கள். பஞ்சாங்கங்களில் மாஸாமாஸம் காட்டியிருக்கும் ராசி சக்ரம் என்னும் 12 வீடுள்ள சதுரத்தில் இந்த க்ரஹங்களின் ஸ்தானங்கள் காட்டப்பட்டிருக்கும்.

மற்றெல்லா தேசத்தாரும் திருஷ்டியால் காணக்கூடிய க்ரஹங்களைத்தான் க்ரஹங்களென்று கணக்கிடுகிறார்கள். ஆதலால் ராகு கேதுக்கள் இக்கணக்கில் இல்லை. அவர்களுடைய கணக்கின்படியும் க்ரஹங்கள் ஒன்பது

அவையாவன புதன், சுக்ரன் அல்லது வெள்ளி, பூமி, செவ்வாய், சிறு க்ரஹக்கூட்டம், குரு அல்லது வியாழன், சனி, யுரேனஸ், நெப்ட்யூன். இவைகளில் கடைசி இரண்டையும் தூர த்ருஷ்டிக் கண்ணாடியால் காணலாம். சிறு க்ரஹக்கூட்டத்தில் மிகவும் சிறிய கோளங்கள் தூரத்ருஷ்டியின் வழி தெரியும்படியானவைகள். இம்மூன்றும் இப்போதுதான் சில வர்ஷங்களுக்குமுன் கண்டுபிடித்ததாலும், கண்ணுக்கு ஸுலபமாய் புலப்படாமையாலும் நமது ஸ்வதேச க்ரஹக்கணக்கில் சேரவில்லை. மேலும் ஸூர்யனை பூமியும் மற்ற க்ரஹங்களும் சுற்றுவதாகசிதாசனங்கள் இருப்பதால், ஸூர்யனை அயல் நாட்டார் க்ருஹக்கணக்கில் சேர்க்கவில்லை. சந்த்ரன் ஸூர்யனைச் சுற்றுமல் பூமியைச் சுற்றுவதாலும், பூமியோடு ஸூர்யனைச் சுற்றுவதாலும் உபக்ரஹமென்று எண்ணி க்ருஹங்கள் கணக்கில் சேர்க்கவில்லை.

NATURE STUDY.

இயற்கைப் பாடம்.

ஏப்ரல் மாஸத்து 'நல்லாசிரியனில்' இயற்கைப்பாடத்தைப் பற்றி ஒரு வ்யாஸம் எழுதப்பட்டிருக்கிறது.

இயற்கைப் பாடமென்பது இயற்கையில் அகப்படும் பொருளைப்பற்றிய பாடமாகும். இதில் மரஞ்செடிகொடிகளினுடைய வாழ்க்கையும், ம்ருகராசிகளினுடைய வாழ்க்கையும், நிலத்தின் தன்மையும் சேர்ந்துள்ளன. செயற்கைப் பொருள்களைப் பற்றி இயற்கைப் பாடத்தில் கற்பிக்கக்கூடாது. இவைகளை வாசக பாடத்திலும், மற்ற பாடங்களோடும் கற்பிக்கலாம். இயற்கைப்பாடத்தில் நேரில் பார்க்கக் கூடிய இயற்கைப்பொருள்களைப் பற்றித்தான் கற்பிக்கவேண்டும்.

இயற்கைப் பாடத்தில் இயற்கைப் பொருள்களைப் பரீக்ஷிக்கவேண்டுமே யொழிய அவைகளைப்போல் செய்த (களிமண்) மாதிரிகளையும் சித்ரங்களையும் உபயோகித்தல் கூடாது. வாஸ்தவமான பொருளிருக்க மாதிரிகளும் சித்ரங்களும் எதற்கு? வாஸ்தவமான பொருள்களைப் போல் அவ்வளவு தெளிவாய் சித்ரங்களும் மாதிரிகளும விஷயங்களைத் தெரிவிக்கமாட்டா என்பது யாவரும் ஒப்புக்கொண்ட விஷயம்.

ஆயினும் சிற்சில பொருள்கள் கற்பிக்கும் காலத்திற்கு ஏற்க அகப்படாமல் போவதால், அவைகளைப்பற்றிக் கற்பிக்கும்போது மேற்கூறிய போலி யுருவங்களும் சித்ரங்களும் பயன்படுமே யென்று சிலர் சொல்லக்கூடும். இயற்கைப் பாடமென்றிராமல் பொருள்பாடமென்றிருந்தால், நம்மிஷ்டப்படி மாமரத்தைப்பற்றி கார்த்திகை மாஸத்திலும், மழையைப்பற்றிக் கோடைகாலத்திலும், காற்றைப்பற்றித் தை மாஸத்திலும் கற்பிக்கலாம். இயற்கைப் பாடமென்றதினால், இயற்கையை யனுஸரித்துப் பாடம் கற்பிக்கவேண்டுமென்பது ஏற்பட்டது. ஆகையால் எவ்விஷயத்தைக் கற்பிக்கவேண்டுமென்று எண்ணினாலும், அவ் விஷயம் கற்பிக்கும் காலத்துக்கும இடத்துக்கும் பொருந்தியிருக்கிறதா என்று அறிந்து, அதற்குத் தக்க வாறு கற்பிக்கவேண்டும். நாம் இயற்கைக்காகக் காத்திருக்கவேண்டுமே.

இயற்கைப் பாடத்தின் நோக்கம் பிள்ளைகளின் உற்று நோக்கும் சக்தியை வ்ருத்தி செய்து, அவர்களே பொருள்களின் இயல்பை அறிந்துகொள்ளும்படி தூண்டுவதே. அப்படியின்றி உபாத்யாயரே எல்லா விஷயங்களையும் சொல்லிக் கொடுத்துவிடக் கூடாது. இயற்கை ப்ரமாணங்களை நேரில் கண்டு ஆராய்ந்து அறிந்துகொள்ள வேண்டுமென்பதே இயற்கைப் பாடத்தின் முக்ய கொள்கையாகும்.

இயற்கைப் பாடத்தில் எந்தப் பாகத்தை வேண்டுமாயினும் கற்பிக்கலாம். பொதுவில் கூறுமிடத்து நமது தேசத்துக் கேற்றவை தாவர வர்க்கமும், பூமியின் தன்மையுமே யாம்.

ப்ராணி வர்க்கத்தில் சிறிதளவே கற்பிக்க லாம். ப்ராணி ஹிம்ஸை செய்வது, பூச்சிப் புழுக்களைப் பிடிப்பது, முட்டை தேடுவது முதலியவை யெல்லாம் நமது தேசத்துக்குச் சிறிதும் ஏற்றவை யல்ல. தாவர வர்க்கத்தில் அந்தந்த இடத்துக் கேற்றவைகள், அவச்யம் அறிய வேண்டியவைகள் ஆகிய இவற்றி னுடைய தன்மைகளை அறியலாம். அவை களில் வேண்டியவற்றை கூடியவரையில் பள் ளிக்கூடத்துத் தோட்டத்தில் பயிரிடலாம். பூமியின் தன்மையில் ஒருபாகம் பூகோள ஸம் பந்தமானது. அதையும் இயற்கைப் பாடமா கக் கற்பிக்கலாம்.

INDUSTRIAL EDUCATION.
கைத்தொழில் படிப்பு.

இந்தியாவில் சென்ற ஐந்துவர்ஷங்களுக் குள் கைத்தொழில் பள்ளிக்கூடங்கள் 147-லிருந்து 242-க்கு ஏறியிருக்கின்றன. சென்னை ராஜதானி,வங்காளம், ஐக்யமாகாணங்கள்,பஞ் சாப் ஆகிய இந்தமாகாணங்களில்தான் அதிக மாக ஸ்தாபிக்கபபட்டிருக்கின்றன. 5-வர்ஷத் திற்குமுந்தி மாணுக்கர்கள் 6,820-பேர்கள் தானிருந்தார்கள். இப்போதோ 12,064-பேர் கள் இருக்கிறார்கள். 1897-லிருந்த மாணுக்கர் களைவிட இப்போது11-மடங்கு அதிகமாயிருக் கிறார்கள். கைத்தொழிலில் உயர்தரபடிப்பு கற் பிக்கும்படியான பள்ளிக்கூடம் பெங்களூரில் ஒன்று இருக்கிறது. இதனபெயர் இந்தியன் இன்ஸ்டிட்யூட் அப் ஸையன்ஸ், பேர்போன பார்ஸி வர்த்தகராகிய மிஸ்டர் ஜெ. என். டாடாவால் இது ஆதியில் ஸ்தாபிக்கப்பட்டது அவர் இறந்துபோகிறவரையில் இந்தப்பள்ளிக் கூடவேற்பாடு பூர்த்தியாகவில்லை. வர்ஷத்திற்கு ரூபா 1,25,000 வருமானமுள்ள பூமியொன்று நன்கொடை அளித்திருக்கிறார். கவர்ன்மெண் டார் வர்ஷத்திற்கு ரூபா 87-ஆயிரம் கொடுத்து வருகிறார்கள், மைஸூர் ஸ்மஸ்தான கவர்ன் மெண்டார் ஒருபூமி விட்டிருப்பதுமன்றி ஆரம்பச்செலவிற்காக 5-லக்ஷரூபாய் ஸாங்க் ஷன் செய்திருக்கிறார்கள் 1911 - ம் வர்ஷம் ஜுலைமாஸத்தில் பள்ளிக்கூடம் திறக்கப்பட் டது. எல்லா உயர்தர கைத்தொழில் படிப்பும் போதிக்கப்பட்டு வருவதுடன் ஜெர்மன், ப்ர ஞ்சு பத்ரிகைகளை மாணவர்கள் வாசித்துப் பார்க்கும்படியாக அந்த பாஷைகளும் போதிக் கப்பட்டு வருகின்றன.

PRIMARY EDUCATION IN MYSORE.
மைஸூரில் மூலாதாரக் கல்வி.

மைஸூர் ராஜ்யத்தில் ப்ரைமரி கல்வியை வ்ருத்தி செய்வதற்காக மைஸூர் கவர்ன் மெண்டார் ஒரு லக்ஷம் ரூபாய் தனியாக க்ராண்ட் செய்திருக்கிறார்கள். புதிதாக 158 எலிமெண்டரி ஸ்கூல்கள் ஸ்தாபிப்பதற்காக வும், ஏற்கவவேயுள்ள ஸ்கூல்களை பலப் படுத்துவதற்காகவும் 41685 ரூபாய் ஸாங்க்ஷ னுகி யிருக்கிறது. புதிதாய் ஸ்தாபிக்கப் போ கும் பள்ளிக்கூடங்களுக்கு மேஜை, நாற்காலி, பெஞ்சுகளும், உபகரணங்களும் வாங்குவதற் காக 15,000 ரூபாய் ஸாங்க்ஷன் செய்திருக் கிறார்கள்.

HOSTELS FOR TRAINING SCHOOLS.
ட்ரேய்னிங் ஸ்கூல்களுக்கு ஹோஸ்டல்கள்.

ரஸலல்கொண்டா, பாஹம்புரம், அநந்த பூர், பல்லாரி, குண்டூர், சித்தூர், சைதாப்பேட் டை, திண்டிக்கல், சேலம், கள்ளிக்கோட்டை, மாலப்புரம், மங்களூர், ஒங்கோல் ஆகிய இவ் விடங்களில் உள்ள ட்ரெய்னிங் ஸ்கூல்களை யொட்டி ஹோஸ்டல்கள் ஏற்படுத்த வேண்டு மென்றும், அவைகளை வாடகை வீடுகளில் வைக்கலாமென்றும் கவர்ன்மெண்டார் உத்தர விட்டிருக்கிறார்கள்.

GRANTS FOR ELEMENTARY SCHOOL BUILDINGS.
எலிமெண்டரி ஸ்கூல் கட்டிடங்களுக்கு க்ராண்ட்.

எலிமெண்டரி ஸ்கூல் கட்டிடங்கள் கட்டுவ தற்காக ஜில்லாபோர்டுகளுக்கும், முனிஸிபா லிடிகளுக்கும் கவர்ன்மெண்டார் 2,76,500 ரூபாய் க்ராண்ட் கொடுத்திருக்கிறார்கள்.

The Legal World.

வ்யவஹாரப் பகுதி.

BEQUESTS IN FAVOUR OF UNBORN PERSONS.

இனி பிறக்கப்போகிறவர்களுக்கு உயிலெழுதி வைத்தல்.

(பங்காள லா ரிபோர்ட்டுகள் 9-ம் வால்யூம் 377-வது பக்கத்திற்கண்ட) டாகூர் எதிரி டாகூர் என்னும் வ்யாஜ்ஜியத்தில் ப்ரிவி கௌன்ஸில் என்னும் மந்த்ராலோசனை ஸபையைச் சேர்ந்த நீதி வ்யவகார விசாரணைக் கமிட்டியார்-உயிலேற்படுத்தினவர் இறந்து போகிறகாலத்தில் ஜீவித்திராத நபர்கள் பெயருக்கு உயில்மூலமாய்ச செய்யப்படும் ஆஸ்தி ஏற்பாடுகள் சட்டஸம்மதமாகமாட்டாவென்று அபிப்ராயப்பட்டார்கள். இந்த தீர்மானமானது-தாயபாகம் 1-ம் அத்தியாயம 1-வதுபாகத்திலுள்ள ஒரு வாக்யத்தை ஆதாரமாகக் கொண்டு செய்யப்பட்டிருந்தபோதிலும், மிதாக்ஷர தர்மசாஸ்த்ரத்தை அனுஸரித்து நடக்கும் நபர்களால் ஏற்படுத்தப்பட்ட உயிலுக்கு ப்ரயோகப்படுவதாய்க் கொள்ளப்பட்டிருக்கிறது. ஜீவிதகாலத்தில் ஸொத்தை ட்ரான்ஸ்பர் செய்தால் அதற்கும் இந்தத் தீர்மானத்தில்கண்ட கோட்பாடானது ப்ரயோகப்படும்படி செய்திருக்கிறது. இதனால் ஏற்படும் முடிவு என்னவென்றால் யாதொரு ஹிந்து தன் ஸொத்தை ஆயுஸு வரையில் தன்னுடைய பிள்ளைகள், பெண்கள், ஸகோதரர்கள் அல்லது ஸகோதரிகளுக்கும், அவர்களுக்குப் பிறகு அவர்களுடைய மக்களுக்கும் போகும்படியாக ஏற்பாடுசெய்ய விரும்பினால், அந்த ஆஸ்தி ஏற்பாடானது ஜீவிதகாலத்தில் செய்யப்பட்டிருந்தால் தானம் செய்த தேதியிலாவது, மரணசாஸன மூலமாய்ச் செய்யப்பட்டிருந்தால் அந்த ஏற்பாடு செய்தவர் இறந்துபோகும் தேதியிலாவது ஜீவித்திருக்கிறவர்கள் பெயருக்கன்றி மற்றப்படி அந்த ஆஸ்தி ஏற்பாடு செலாவணியாக மாட்டாது. ஸங்கர்ப்பத்துக்கேற்றபடி தானம் செய்த தேதிக்குப் பிறகாவது, உயிலேற்படுத்தினவர் இறந்துபோன பிறகாவது பிறக்கக்கூடிய மக்கள் உள்பட ஸகல மக்களும் ப்ரயோஜனம் அடையவேண்டுமென்பது மேலே கண்ட இரண்டு விஷயங்களிலும் ஸொத்து ஏற்பாடு செய்தவருடைய உத்தேசமாகையால், ஏற்கனவே குறிப்பிடப்பட்ட தீர்மானங்களில் அவ்வுத்தேசம் நிறைவேறாமற் போய்விடும். இந்தியாவின் இந்தபாகத்திலே ஹிந்துக்களால் எழுதப்படும் உயில்களிலும் பத்ரங்களிலும் இவ்வகையான நிபந்தனைகள் இருப்பது ஸர்வஸாதாரணமாயிருக்கிறது; டாகூர் வ்யாஜ்யத்தை ஆதாரமாகக்கொண்டு அப்படிப்பட்ட ஆஸ்தி ஏற்பாடுகளைச் சட்டஸம்மத மற்றவைகளாய்ச் செய்வதற்காக கணக்கற்ற தீர்மானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. டாகூர் வ்யாஜ்யத்தில் செய்யப்பட்ட தீர்மானமானது சரியாயிருந்தாலுஞ்சரி, தப்பாயிருந்தாலுஞ்சரி, சட்டத்தை ஜனஸமூகத்தாருடையஅபிப்ராயத்துக்கும் விருப்பத்துக்கும ஒத்திருக்கும்படி செய்வது அவச்யமே.

இதற்காக ஆனரபிள் ஜஸ்டிஸ் டி. வி. சேஷகிரி அய்யர், தாம் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் மெம்பராக இருந்தபோது ஒருமசோதா ஆக்ட் கொண்டுவந்தார். அது லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் சட்டமாக்கப்பட்டு சென்னை கவர்னராலும், கவர்னர் ஜெனராலும அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டம் பின்வருமாறு,

இனி பிறக்கப்போகும் நபர்கள் பெயருக்கு (ஸொத்தை) ட்ரான்ஸ்பர் செய்வதற்கும் உயில் மூலமாய் ஆஸ்தி ஏற்பாடுகள் செய்வதற்கும் ஹிந்துக்களுக் குள்ள உரிமைகளை நிர்ணயிப்ப தற்கான ஆக்ட்.

பீடிகை:—இனி பிறக்கப்போகும் நபர்கள் பெயருக்கு (ஸொத்தை) ட்ரான்ஸ்பர் செய்வதற்கும், உயில் மூலமாய் ஆஸ்தி ஏற்பாடுகள் செய்வதற்கும் ஹிந்து தர்மசாஸ்த்ரத்தை அனுஸரிக்கிறவர்களுக்கு உள்ள உரிமைகளை நிர்ணயிப்பது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால்.—

1. சுருக்கமானபெயர்—இந்தஆக்டை, "ஹிந்துக்கள் (ஸொத்தை) ட்ரான்ஸ்பர் செய்வதையும் உயில்மூலமாய் ஆஸ்தி ஏற்பாடுகள் செய்வதையுங் குறித்த 1914-௵த்து ஆக்ட்" என்று சொல்லலாம்.

2. ஆக்டின் ப்ரயோகமும் வ்யாபகமும்.—(1) சென்னபட்டணம்ப்ரெஸிடென்ஸியின் எல்லைகளுக்குள்ளே நிலையான வாஸஸ்தலம் வைத்துக்கொண்டிருப்பவர்களாய் ஹிந்து தர்மசாஸ்த்ரத்தை அனுஸரித்து நடக்கும் நபர்கள் ஜீவிதகாலத்திலே செய்யும் சகல ட்ரான்ஸ்பர்களுக்கும், அவர்கள் ஏற்படுத்தும் சகல உயில்களுக்கும் இந்த ஆக்ட் ப்ரயோகப்படும்.

(2) இந்த ஆக்டின் தேதிக்குமுன் எழுதி முடிக்கப்பட்ட உயில்களின் விஷயத்திலாவது, அந்தப்படி எழுதிமுடிக்கப்பட்டு ஜீவித காலத்திலே செய்யப்பட்டிருக்கும் ட்ரான்ஸ்பர்களின் விஷயத்திலாவது, அவைகளின்படி செய்யப்பட்ட எந்த ஸொத்து ஏற்பாடுகள் அந்த தேதிக்குப் பிறகுள்ள யாதொரு காலத்தில் அமுலுக்கு வர உத்தேசிக்கப்படுகிறதோ அந்த ஏற்பாடுகளுக்கு இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகள் ப்ரயோகிக்கப்படும்: ஆனால், பெறுமான ஐவேஜுக்காக நல்ல எண்ணத்துடன் ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்ற எந்த நபர்களிடத்தில் யாதொரு ஸொத்துக்குரிய உரிமையானது இந்த ஆக்டின் தேதிக்கு முன்னே வங்க்ரமித்திருக்கிறதோ அந்த நபர்களுக்கு இந்தப் பிரிவி லுள்ளதெதனுலும் பாதகமுண்டாக மாட்டாது.

விவரணம்.—மருமக்கதாய சட்டத்தையாவது அளியஸந்தான சட்டத்தையாவது அனுஸரித்து நடக்கும் ஹிந்துக்கள் இந்த ஆக்டின் கார்யங்களுக்காக ஹிந்து தர்மசாஸ்த்ரத்தை அனுஸரித்து நடக்கும் நபர்களாக எண்ணப்படுவார்கள்.

3. இனி பிறக்கப்போகும் நபர்கள்பெயருக்கு (ஸொத்தை) ட்ரான்ஸ்பர் செய்வதும் உயில் மூலமாய் ஆஸ்தி ஏற்பாடுகள் செய்வதும்.—ஜீவித காலத்திலே எந்த ஸொத்தையாகிலும் ட்ரான்ஸ்பர் செய்தாலும் உயில் மூலமாய் ஏற்பாடு செய்தாலும், அது ஸந்தர்ப்பத்துக்கேற்றபடி ட்ரான்ஸ்பர் செய்யப் பெற்றவராவது உயில் மூலமாய் ஆஸ்தி ஏற்பாடு செய்யப்பெற்றவராவது ட்ரான்ஸ்பர் செய்யப்பட்ட தேதியிலாகிலும் உயிலேற்படுத்தினவர் இறந்துபோன தேதியிலாகிலும பிறக்கவில்லை யென்னும் காரணத்தினாலேயே சட்ட ஸம்மதமற்றதாய்ப் போய்விடாது.

4. (ஸொத்து) ட்ரான்ஸ்பர்களின் விஷயத்தில் நிரந்தர ப்ரயோஜனம் உண்டாக்கக்கூடாதென்னும் விதி.—ஸொத்தின் ட்ரான்ஸ்பர் செய்வதனால் உண்டாகும் ஸ்வதந்த்ரமானது ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டதேதியில் ஜீவித்திருக்கிற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுடைய ஜீவித காலத்துக்குப் பிறகும், அந்தக் காலத்தின் முடிவில் ஜீவித்திருக்கும் எந்த மைனருக்கு வயதுவந்ததன்மேல் அப்படி உண்டுபண்ணப்பட்ட ஸ்வதந்த்ரம் சேரவேண்டுமோ அவர் மைனராயிருக்கும் காலத்துக்குப் பிறகும் செலாவணியாவதாயிருந்தால் எந்த ஸொத்து ட்ரான்ஸ்பரினாலும் அப்படிப்பட்ட ஸ்வதந்த்ரம் உண்டாகமாட்டாது.

5. உயில் மூலமாய்ச்செய்யும் ஆஸ்தி ஏற்பாடுகள் விஷயத்தில் நிரந்தர ப்ரயோசனம் உண்டாக்கக் கூடாதென்னும் விதி.-யாதொரு ஆஸ்தி ஏற்பட்டால் ஏற்படுத்தப்பட்ட பொருள் ஸங்க்ரமிப்பதானது உயிலேற்படுத்தினவர் இறந்துபோகையில் ஜீவித்திருக்கிற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுடைய ஜீவிதகாலத்துக்கும், அந்தக் காலத்தின் முடிவில் ஜீவித்திருக்கும் எந்த மைனருக்கு வயது வந்ததன்மேல் அப்படி ஏற்படுத்தப்பட்ட பொருள் சேர வேண்டுமோ, அவர் மைனராயிருக்கும் காலத்துக்கும் பிறகுவரையில் தள்ளிவைக்கப் பட்டால், அந்த ஆஸ்தி ஏற்பாடு செல்லாது.

PROMISSORY NOTE.

ப்ராமிஸரி நோட்டு.

முதல் ப்ரதிவாதியும் இரண்டாவது ப்ரதிவாதியும் சேர்ந்து எழுதிக் கொடுத்ததாகச் சொல்லப்படுமொரு ப்ராமிஸரி நோட்டின் மேல் வாதி ஒரு வ்யாஜ்யம் போட்டார். முதல் ப்ரதிவாதி தான் ப்ராமிஸரி நோட்டை எழுதிக்கொடுக்கவில்லை யென்றும், தன் கையெழுத்து போர்ஜரியென்றும் வாதித்தார். இரண்டாவது ப்ரதிவாதி இரண்டு ப்ரதிவாதிகளும் சேர்ந்து ப்ராமிஸரி நோட்டு எழுதிக் கொடுக்க வேண்டுமெனவும், தான் (இரண்டாவது ப்ரதிவாதி) ஜாமீனாகவும், முதல் ப்ரதிவாதி கடனை அடைபவராகவும் இருக்க வேண்டுமெனவும், இரண்டு பேரும் கடனுக்கு உத்தரவாதியாக வேண்டுமெனவும் பேசியிருந்ததென்றும், முதல் ப்ரதிவாதி ப்ராமிஸரி நோட்டை எழுதிக்கொடுக்கவில்லை யாதலால் தான் கடனுக்கு பாத்யப்படுவதற்கில்லை யென்றும் வாதித்தார். இதை விசாரித்த ஸப் ஜட்ஜ் ஷை ப்ராமிஸரி நோட்டை இரண்டு ப்ரதிவாதிகளும் சேர்ந்து எழுதிக்கொடுக்க வேண்டுமெனவும் இரண்டுபேரும் சேர்ந்து கடனுக்கு பாத்யப்பட வேண்டுமெனவும் எண்ணியிருந்தார்களென்றும், இரண்டாவது ப்ரதிவாதிமாத்ரம் ப்ராமிஸரி நோட்டை எழுதிக் கொடுத்திருக்கிறாரென்றும், முதல் ப்ரதிவாதிக்கும் வாதிக்கும் வெகுகாலமாக விரோதமிருந்ததால் வாதி முதல் ப்ரதிவாதிக்குப் பணம் கடன் கொடுத்திருப்பாரென்று சொல்வதற்கில்லை யென்றும், ப்ராமிஸரி நோட்டில் கண்டிருக்கும் முதல் ப்ரதிவாதியின் கையெழுத்தை யாரோ ஒருவர் போர்ஜரி செய்திருக்கிறாரென்றும் தெரிவதாகச் சொல்லி முதல் ப்ரதிவாதியைத் தள்ளிவிட்டு இரண்டாம் ப்ரதிவாதிக்கு விரோதமாகத் தீர்ப்புச் செய்தார். அதன் மேல் இரண்டாவது ப்ரதிவாதி ஹைகோர்ட்டுக்கு ஸிவில் ரிவிஷன் பெடிஷன் தாக்கல் செய்தார். ஹைகோர்ட்டார் பின் வருமாறு தீர்ப்புச் சொன்னார்கள்.

ப்ளெய்ண்டிலிருந்து தெரிகிறபடி இரண்டு ப்ரதிவாதிகளும் சேர்ந்து கடனுக்கு பாத்யப்படவேண்டுமென்றும், அப்படி இரண்டு பேரும் சேர்ந்து பாத்யப்படுவதற்காக அந்தக் கடனுக்காக இரண்டுபேரும் சேர்ந்து ப்ராமிஸரி நோட்டைஎழுதிக்கொடுக்கவேண்டுமென்றும் எண்ணியிருந்து, (ஸப்ஜட்ஜ் தீர்மானித்திருக்கிறபடி) முதல் ப்ரதிவாதி ப்ராமிஸரி நோட்டு எழுதிக் கொடுக்காமலிருந்து, இரண்டாவது ப்ரதிவாதி மாத்ரம் ப்ராமிஸரி நோட்டில் கையெழுத்திட்டிருந்தால், இரண்டாவது ப்ரதிவாதியைக் கடனுக்குக் கட்டுப்படுத்தக் கூடாது. ஏனென்றால் அவர் (இரண்டாவது ப்ரதிவாதி) முதல்ப்ரதிவாதியும் சேர்ந்து கடனுக்கு பாத்யப்பட்டால்தான், தான் கடனுக்குப் பாத்யப்படுவதாக ஒப்புக்கொண்டார்.

மேலும் ப்ராமிஸரி நோட்டின் ஒரு முக்யமான பாகம் போர்ஜரி செய்யப்பட்டிருக்கிறதனால் இந்த நோட்டு சட்டப்படி செல்லாது

1-லாவீக்லி 243

DANCING GIRL SERVICE IN A TEMPLE.

கோவிலில் தேவதாஸியின் ஊழியம்.

ஒரு கோவிலில் விக்ரகத்துக்கு சாமரம் போடுவதற்காக ஒரு தேவதாஸிக்கு ஒரு நிலம் இனும் நிலமாகக் கொடுக்கப் பட்டிருந்தது. இனும் கமிஷன் காலத்தில், கவர்ன்மெண்டார் அப்படி யவளுக்குக் கொடுத்திருந்ததை ஊர்ஜிதப்படுத்தி சில நிபந்தனைகளுடன் தான சாஸன பத்ரமும் அவளுக்குக் கொடுத்தார்கள். பிறகு சிலகாலத்துக்கெல்லாம் தேவதாஸியானவள் தனது கடமையைச் செய்யத் தவறின தன்மேல் கோவில் தர்மகர்த்தா இனும் நிலம் தமது வசத்துக்கு வரவேண்டுமென்று வ்யாஜ்யம் போட்டார்.

தீர்ப்பு:-தேவதாஸி தனதுகடமையைச்செய்யாமலிருந்ததற்கு அவளை அந்த வேலையிலிருந்து நீக்கி விட்டு அவளுடைய ஸ்தானத்தில் இன்னொருவளை நியமிக்கக் கோவில் தர்மகர்த்தாவுக்கு அதிகாரமிருக்கிறதென்றாலும்; அப்படிப் புதிதாக நியமிக்கப்பட்ட தேவதாஸி இனும் நிலம் தனக்குச் சேரவேண்டுமென்று, தனது கடமையை செய்யத்தவறின ஏற்கனவே வேலையிலிருந்துகொண்டுவந்த தேவதாஸி மேல் வ்யாஜ்யம் போடலாமென்றாலும், கோவிலுக்காக இனும நிலத்தை தன்வசப்படுத்துவதற்கு வ்யாஜ்யம் போட தர்மகர்த்தாவுக்கு அந்த நிலத்தில் அவ்வளவு பாத்யதை கிடையாது.

PAYMENT OF SUBSISTENCE EXPENSES FOR DEBTORS IN JAIL.

ஸிவில் ஜெயிலிலுள்ள கடனாளிகளுக்குப் படி கட்டுதல்.

ஸிவில் ஜெயிலில் இருந்த ஒரு கடனாளி ஜெயிலிலிருந்து விடுதலை செய்யப்படுமுன், டிக்ரி ஹோல்டர் அந்தக் கடனாளியின் படிச் செலவுக்காக மணியார்டர் மூலமாக பணம் அனுப்பினார். ஆனால் பணமானது கடனாளி ஜெயிலிலிருந்து விடுதலை செய்யப்பட்டதற்கு மறுநாள் தான் ஜெயில் ஸுபரின்டெண்டண்டுக்குக் கிடைத்தது. அப்படியானால் டிக்ரீ ஹோல்டர் சரியானபடி படி கட்டினதாக மாட்டாது. ஸுபரின்டெண்டண்ட் கடனாளியை விடுதலை செய்தது ந்யாயமாகும்.

SETTLEMENT OF ACCOUNTS.

கணக்குத் தீர்த்தல்.

வாதியும ப்ரதிவாதியும் பாகஸ்தர்களாயிருந்தார்கள். அவர்கள் 1909-ம் வர்ஷத்தில் கணக்குப்பார்த்துத் தீர்த்ததில் ப்ரதிவாதி வாதிக்கு ஒரு குறிப்பிட்ட தொகை கொடுக்க வேண்டியதென்றேற்பட்டது. அக்காலத்தில் அந்தத் தொகையில் பெரும்பாகம் கொடுக்கப்பட்டுப் போய்விட்டதால், பாக்கித் தொகைக்கு ஒரு ப்ராமிஸரி நோட்டு எழுதிக் கொடுக்கப்பட்டது. ஆனால் அந்த ப்ராமிஸரி நோட்டுக்கு சரியானபடி ஸ்டாம்பு ஒட்டப்படவில்லை. வாதி தமக்குக் கிடைக்க வேண்டிய தொகைக்காக ப்ராமிஸரி நோட்டின்மேல் வ்யாஜ்யங்கொண்டு வராமல் கணக்குத் தீர்த்ததின்மேல் ப்ரதிவாதிக்குப் பணங்கொண்டியிருந்த தென்பதை ஆதாரமாகக் கொண்டு வ்யாஜ்யம் போட்டார். மேலுமநோட்டு எழுதுவதற்கு முன் பணம் கொடுக்கவேண்டுமென்று ப்ராமிஸரி வாய்ப்பேச்சாகச் சொல்லியிருந்ததாகவும் சொன்னார். இந்தக்கேஸில் ஹைகோர்ட்டார் செய்த தீர்மானம் பின் வருமாறு:—ஸ்டாம்ப் சரியாய் ஒட்டாத ப்ராமிஸரி நோட்டை ஆதாரமாகக்கொண்டு வ்யாஜ்யம் செய்யாமல் ஆதியில் ஏற்பட்ட வ்யாஜ்ய மூலத்தைக்கொண்டு வ்யாஜ்யம் செய்யலாம். முதலில் கணக்குப் பார்த்ததையும், அந்தக்கணக்கின்படிப்ரதிவாதி ஒரு தொகை செலுத்தி யிருந்தாரென்பதையும் ஆதாரமாகக் கொண்டு பாக்கிப்பணத்தை செலுத்த ஒரு உடன்படிக்கை செய்திருந்ததாக ஊஹிக்கலாம். ப்ராமிஸரி நோட்டானது அந்த உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கிறதென்பதற்கு ஒரு ஸாக்ஷ்யமாகும். 1914-மதராஸ் லா டைம்ஸ் 243.

The Sanitary World.
ஸுகாதாரப் பகுதி

SANITATION IN INDIA.
இந்தியாவில் ஸுகாதாரம்.

இந்திய கவர்ன்மெண்டார் ஸுகாதாரத்தைப்பற்றி ஒரு முக்யமான தீர்மானம் வெளியிட்டிருக்கிறாகள். அதில் இந்தியாவின் ஸுகாதார நிலைமைகளைச் சீர்திருத்துவதற்காகச் செய்துவரும் முயற்சிகளைப்பற்றியும், தொத்து நோய்களின் நிவாரணம், குழந்தைகளின் மரணம், ஜலவஸதி, க்ராமாநதரங்களின் ஸுகாதாரம் முதலியவைகளைப்பற்றியும் ப்ரஸ்தாபித்திருக்கிறார்கள்.

ஸுகாதார விஷயமாய் கவர்ன்மெண்டார் சிலகாலமாக ஊக்கங்காட்டி வந்திருக்கிறார்கள். ஒவ்வொரு மாகாணத்திலும் ஸுகாதார விஷயங்களைப் பற்றி கவனிப்பதற்காக ஸானிடரிகமிஷனர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்திய கவர்ன்மெண்டில் கல்வி, ஸுகாதாரம் முதலியவைகளைப் பற்றி கவனிப்பதற்காக ஒரு தனி டிபார்ட்மெண்ட் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. மாகாண கவர்ன்மெண்டுகள் சொந்தத்தில் ஸுகாதாரக் கான்பரென்ஸுகள் நடத்தி ஸுகாதார விஷயங்களைப் பற்றி கவனித்து வருகிறார்கள். இவைகளே யல்லாமல், சென்ற மூன்றுவர்ஷங்களாக எல்லா இந்திய ஸுகாதாரக் கான்பரென்ஸுகள் நடந்து வருகின்றன. இதோடு ஒரு இந்திய ஆராய்ச்சி பண்டு ஸங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த பண்டுக்கு கவர்ன்மெண்டார் வர்ஷந்தோறும் க்ராண்டுகள் கொடுத்து வருகிறார்கள். இந்திய கவர்ன்மெண்டார் மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு ஸுகாதாரச் செலவுகளுக்காக வர்ஷா வர்ஷம் 55 லக்ஷம் ரூபாய் க்ராண்டும், வர்ஷா வர்ஷம் கொடுக்காத க்ராண்டாக 4-கோடி ரூபாயும் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் சில மாகாணங்களில் ஜில்லா போர்டுகளுக்கு முக்யமாய் க்ராம ஸுகாதாரத்தை கவனிப்பதற்காக 82 லக்ஷம் ரூபாய் க்ராண்ட் கொடுத்திருக்கிறார்கள்.

ஸுகாதார சீர்திருத்தங்களால் ஸைன்யங்களிலுள்ள ஜனங்களுக்கு நன்மைகள் உண்டானதுபோல ஸாதாரண ஜனங்களுக்கு உண்டாகவில்லையென்று கவர்ன்மெண்டார் தீர்மானத்தில தெரிவித்திருக்கிறார்கள். ஸைன்யத்திலுள்ள ஜனங்களின நிலைமைக்கும் ஸாதாரண ஜனங்களின் நிலைமைக்கும் ரொம்ப வித்யாஸமிருக்கிறது. ஸாதாரண ஜனங்களுக்கு ஸுகாதார சீர்திருத்தங்களால் நன்மையுண்டாகவேண்டுமானால் சீர்திருத்தங்கள் சில முக்ய விதிகளை அநுஸரித்தவைகளாயிருக்கவேண்டுமாம். அதாவது சீர்திருத்தங்கள் (1) ஜனங்களுடைய ஜீவ்ய ஒழுங்கு, பழக்க வழக்கங்கள், கொள்கைகள், அவர்கள் வஸிக்கும் இடங்களின் நிலைமை ஆகிய இவைகளை யநுஸரித்தவைகளாயிருக்கவேண்டும். ஜனங்கள் சீர் திருத்தங்களுக்காக கவர்ன்மெண்டுடன் ஒத்துழைக்கவேண்டும். (2) இந்ததேசம் ரொம்ப விசாலமானதாகையால் ஒரு பாகத்திலுள்ள நிலைமைகளைப்போல் இன்னொரு பாகத்தில் இருப்பதில்லை. இடத்துக்கிடம் சீதோஷ்ணஸ்திதியும இயற்கையமைப்பும் வித்யாஸமாயிருக்கும். இவைகளுக்கு ஏற்றபடி சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டும். (3) சீர்திருத்தங்கள் செய்யுமுன், அந்தந்த இடங்களின் நிலைமைகளைப்பற்றி ஆராய்ச்சிகளும் பரீக்ஷைகளும செய்து பார்க்கவேண்டும் என்று கவர்ன்மெண்டார் அபிப்ராயப்படுகிறார்கள்.

ஸுகாதாரவிப்பத்திகளை ஸுகாதாரவிஷயங்

களில் பயிற்றுவதைப்பற்றி இந்தியா கவர்ன்மெண்டார் கவனம் செலுத்தி வருகிறார்கள். ஸுகாதார உத்யோகஸ்தர்களுக்கு ஸுகாதார விஷயங்களை கற்பிக்க சீக்ரம் ஏற்பாடு செய்யப்போகிறார்கள்.

ஸுகாதார விஷயமாய் ஆராய்ச்சி செய்வதற்கு கல்கத்தா உஷ்ண ப்ரதேச வைத்யப்பள்ளிக்கூடத்தில் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்போகிறார்களாம். காஸெளலியில் ஒரு ஆராய்ச்சி சாலையும், ப்ளேக்கைப்பற்றி ஆராய்ச்சி செய்ய பம்பாயைச் சேர்ந்த பேரலில் ஒரு ஆராய்ச்சிசாலையும், கிண்டியில் ஒரு ஸுகாதார ஆராய்ச்சி சாலையும் ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இனனும் காஸெளலியிலும், குன்னூரிலும் நாய்கடி வைத்யசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அஸாம், பர்மா, பம்பாய் ஆகிய இவ்விடங்களிலும் நாய்கடி வைத்ய சாலைகள் ஸ்தாபிப்பதைப்பற்றி கவர்ன்மெண்டார் ஆலோசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் தீர்மானத்தில் மலேரியாவைப்பற்றிய சில உபயோகமான குறிப்புகள் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளை இங்கு குறிப்பிடுகிறோம்: மலேரியா பரவாமலிருப்பதற்கு இரண்டு வழிகள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. ஒன்று, மனிதர்களுக்கு மலேரியா வராமருக்கவும், வந்திருந்தால் அதை ஸ்வஸ்தப்படுத்தவும் க்வினைன் முதலிய மருந்துகள்கொடுப்பது. இரண்டாவது, மலேரியா க்ருமிகள் பரவுவதற்கு மிகவும அனுகூலமாயிருக்கும் கொசுக்களையழிக்க, அவைகள் வ்ருத்தியாவதற்கு ஸாதகமாயிருக்கும் இடங்களை கொசுக்கள் வ்ருத்தியாக முடியாதபடி மாற்றிவிடுதல். மலேரியா வராமல் பாதுகாக்கவும், வந்த மலேரியாக் காய்ச்சலை ஸ்வஸ்தப்படுத்தவும் க்வினைனனது கைகண்ட மருந்தாகும். இதன் உபயோகத்தை அளவிடமுடியாது. இதை ஜனங்கள்ரொம்பவும் அதிகமாக உபயோகிக்குமபடி. இதன் குணங்களை அவர்களுக்குக் கற்பிக்கவேண்டும். மலேரியாக்காலங்களில் பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு க்வினைன் மருந்து ஸ்வல்ப அளவில் க்ரமமாகக் கொடுத்துக்கொண்டு வந்தால் பொதுவாய் சிறுவர்கள் ரொம்ப தேகஸுகமடைவார்கள். மலேரியாக்காய்ச்சல் அவர்களை உபத்ரவப்படுத்தாது. இவைகளை கவனிக்கும்போது ஜனங்கள் மலேரியாவுக்கு க்வினைனை தாராளமாய் உபயோகிக்கவேண்டியது அவச்யமென்று ஏற்படுகிறது.

ப்ளேக்கைப்பற்றி ஆராய்ச்சிசெய்ய 1905-ம் வர்ஷத்தில் ஒரு கமிஷன் ஏற்படுத்தப்பட்டது. அந்தக்கமிஷன் செய்த ஆராய்ச்சிகளால் சில முக்யமான விஷயங்கள் தெரியவந்திருக்கின்றன. அவைகளைப்பற்றியும் தீர்மானத்தில் ப்ரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அவைகளாவன ப்ளேக் நோயானது எலிகளுக்குள் ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கும், எலிகளிலிருந்து அவை கடிக்கும் தெள்ளுப்பூச்சிகள் மூலமாய் மனிதர்களிடத்திலும் பரவுகிறது. ப்ளேக் க்ருமியானது மனிதர், எலி, தெள்ளுப்பூச்சி ஆகிய இவைகளின தேகத்தைவிட்டு வெளியிலிருந்தால் சீக்ரம் வீர்யம் குறைந்துபோகிறது. எலிகள் மூலமாகப்ளேக் வ்யாதி பரவுகிறதென்றாலும், எலிகள் தானாகவே ரொம்ப தூரமான இடங்களுக்குப் போய் அவ்விடங்களில் வ்யாதியைப் பரவச் செய்வதில்லை. ப்ளேக் வ்யாதிக்காரர்களாலும் அவர்களுடைய ஸாமான்களாலும், ப்ளேக் வ்யாதி பிடித்த எலிகள் அல்லது தெள்ளுப்பூச்சிகள் தான்யச்சாக்கு முதலியவைகளில் அகப்பட்டு தான்யம் முதலியவை ஒரு ஊரிலிருந்து வேறு ஊர்களுக்கு அனுப்பப்படும் போது அவ்வகளோடு அந்த ஊர்களுக்குப் போவதாலும் ப்ளேக் வ்யாதி பரவுகிறது. இவைகளையெல்லாம் கவனித்தால் எலியில்லாவிட்டால் ப்ளேக் வ்யாதி கிடையாதென்று ஏற்

படுகிறது. ஆகையால் ஜனங்கள் ஈஸிகளால் ரொம்ப கெடுதிகள் நேரிடுகின்றன என்பதை யறிந்துகொண்டு ஈஸிகளைக் கொல்வதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யவேண்டும்.

FILTHY ULCERS

சேற்றுப்புண்.

ஸமீபத்தில் வெளியான 'வைத்யகலாநிதி'யில் டாக்டர் யு. எஸ். ஜகதீசன் சேற்றுப்புண்ணைப் பற்றி ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறார்.

சேற்றுப்புண் உண்டாவதற்கு அநேகர் அநேக காரணங்கள் சொல்லுகிறார்கள். நாம் உபயோகிக்கும் ஜலத்தில் வ்யாதியை உண்டாக்கக்கூடிய சில தோஷங்கள் இருப்பதே இதற்கு முக்ய காரணமென்று சொல்லவேண்டும். இது முக்யமாய் சேற்றில் அலைகிறவர்களுக்கு உண்டாவதால் சேற்றுப்புண்ணென்றும், சென்னைக் குழாய் ஜலத்தில் நடமாடுகிறவர்களுக்கு உண்டாவதால் குழாய்ப்புண்ணென்றும் சொல்லப்படுகிறது.

சேறு ஜலம் முதலியவற்றிலுள்ள ஸூக்ஷ்ம ஜீவன்களாலேயே இந்த வ்யாதி உண்டாவதாக டாக்டர் ஜகதீசன் அபிப்ராயப்படுகிறார்.

குறிகள்.—(1) சேற்றிலாவது, கெட்ட ஜலத்திலாவது அலைந்து வரும்போது முதலில் கால் விரல்களின் இடுக்குகளில் உள்ள மேல் தோல் சிறிது வெண்மைநிறம் அடையும். (2) பிறகு அங்கு தினவு உண்டாகும். (3) சொரியச்சொரிய அவ்விடங்கள் சிவந்து விடும். (4) தோலின் மேற்புரையானது உரிய ஆரம்பிக்கும். (5) எரிச்சலெடுக்கும். (6) சில நாள்கள்சென்றதும் வட்டம் வட்டமாகப் புண்கள் உண்டாகும்; அப்பொழுது தோலின் உள்புரையும் உரிந்து புண் வ்ருத்தியாகும். சிலருக்கு தோலின் மேற்புரையிலேயே படைகளைப் போன்ற (Ringworm) புண்கள் உண்டாவதுண்டு; இவற்றால் தினவு விசேஷமாய் உண்டாகும். பிறகு நாளடைவில் இப்புண் படர்ந்து வ்ருத்தியாகும். (8) அப்பால் கறையான் அரித்ததுபோல் பாதம் முழுவதும் பரவி, தோலின் மேற்புரை அனைத்தையும் அப்புண் தின்று விடும். கால க்ரமத்தில் காலெல்லாம் எரிச்சல் எடுப்பதுடன் பார்வைக்கும் வெகு கோரமாயிருக்கும்.

சிகித்ஸை:— ஜலத்தில் இந்த வ்யாதியை உண்டாக்கக்கூடிய சில ஸூக்ஷ்மஜீவன்கள் இருப்பதால், ஸ்நானம் செய்யும்போது ஜலத்தை நன்றாகக் காய்ச்சி உபயோகித்தால் இந்த வ்யாதியை வரவிடாமல் தடுக்கலாம். (2) பிறகு பாதங்களில் சிறிதும் ஈரமில்லாமல் உடனே துடைத்து விடவேண்டும். (3) குழாய் நீரில் அடிக்கடி நடமாடக் கூடாது; அவ்விதம் ஜலத்தை மிதிக்கவேண்டி நேரிட்டால், மறுபடியும் உலர்ந்த துணிகளைக் கொண்டு விரலிடுக்குகளை நன்றாகத் துடைக்கவேண்டும்; விரல்களின் இடுக்கில் மண் அல்லது சேறு தங்கியிருந்தால் உடனே வெந்நீர் விட்டுக் கழுவி ஈரத்தைத் துடைக்கவேண்டும்.

ஔஷதம்:—(1) சிலர் தற்கால சாந்தியாக வசம்பையும் மஞ்சளையும் அரைத்து இப்புண்களின்மேல் தடவுகிறார்கள். ஆனால், இதனால் நல்ல குணம் உண்டாவதில்லை. (2) சிலர் மண்ணெண்ணெயைத் தடவுகிறார்கள். இதனால் எரிச்சல் அதிகம் எடுக்கும்; முற்றிலும் வ்யாதி குணமாவதில்லை. (3) இங்கிலீஷ் மருந்தில் சிலவற்றையும், இந்திய மருந்துகளில் சிலவற்றையும் கலந்து உபயோகித்தால் இந்த வ்யாதி ஸ்வஸ்தமாய் விடுகிறது. பைஸால் (Pisal) என்கிற ஒருவித ஔஷதத்தை டாக்டர் ஜகதீசன் உபயோகித்து குணங்கண்டிருக்கிறார். அதில் சேர்ந்துள்ள சரக்குகளாவன:—

(1) கர்ப்பூரம், (2) ஸாலிஸிலிக் அமிலம் (Salicylic acid), (3) நாப்தலீன் (Naphthalene), (4) மாசக்காய், (4) கடுக்காய், (6) கஸ்தூரி மஞ்சள், (7) துமட்டிக்காய், (8) கீழ்க்காய்

செல்வி, (9) குப்பை மேனி, (10) ஆடாதொடை.

இவைகளுள் கர்ப்பூரமே அதிக அளவில் சேர்க்கப்படும். மேற்கூறிய கூட்டு மருந்தை இரவில் படுக்கும்போது பாதங்களில் நன்றுகப் பூசிவிட்டு, காலையில் வெந்நீர்விட்டு நன்றுகக் கழுவி வந்தால், இரண்டு முறையில் சேற்றுப்புண் குணமாய்விடும். இந்திய ஸ்த்ரீகள் இதனால் படும் கஷ்டத்தைக் கண்டு, இதுவும ஒரு வ்யாதியென்று கவனம் செலுத்தி, இது வாராமலிருப்பதற்கும், வந்தால் உடனே குணப்படுத்திக் கொள்ளவும் இவ்வுபாயங்களை அறிந்திருப்பது மிகவும் அவச்யம்.

SMOKING AMONG STUDENTS.

மாணவர்கள் சுருட்டுக் குடிப்பது.

சென்னை மாகாணத்தில் ஸ்கூல்களில் படிக்கும் பிள்ளைகள் அதிகமாய் சுருட்டுக்குடிக்கும் வழக்கத்தை யடக்க நம்மவர்கள் முயற்சிசெய்வது ஸந்தோஷகரமானது. சட்டஸபை மெம்பர்களில் ப்ரதிநிதி மெம்பர் ஒருவர் இந்த நோக்கத்துடன் ஒரு மசோதா கொண்டுவர கவர்மெண்டின் அனுமதியைக் கேட்பாரென்று சொல்லப் படுகிறது. இந்த மசோதா கொண்டுவரப்பட்டு சட்டமாகும் பக்ஷத்தில் சிறுவர்கள் சுருட்டையும் பீடியையும குடிப்பது ஒருவாறு நின்று போகக்கூடும் என்றாலும் அது முழுமையும் நின்று போகாதென்று அஞ்சுவதாக 'சுதேசமித்திரன்' எழுதுகிறது. பிள்ளைகளுக்குள் தானுகவே இந்த அறுவருப்பு உண்டாகவேண்டும். இப்படி அறுவருப்பு உண்டாகும்படி பிள்ளைகளே ஒன்று சேர்ந்து முயற்சி செய்யவேண்டும். அவர்களில் பலபேர் இந்த வழக்கமில்லாதவர்களாய் சுருட்டுக் குடிப்பதை வெறுக்கிறார்கள். அவர்களனைவரும் ஒன்று சேர்ந்து ஸபைகள் ஸ்தாபித்து, தாங்களே வ்ரதமசெய்து கொள்வது மல்லாமல், அந்த வழக்க முள்ளவர்களை அதினின்று மீட்டு வ்ரதம் செய்துகொள்ளும் படியாய்த் தூண்டவேண்டும். இதற்குப் பெரியோர்கள் பிள்ளைகளுக்கு வேண்டிய ஸகாயத்தைச் செய்யவேண்டும். இத்தகைய ஸபைகள் அங்கங்கே ஏற்பட்டால் சுருட்டுக் குடிக்கும் வழக்கமும் அதைப்போன்ற மற்ற துன்மார்க்கங்களும நின்றுபோகக் காரணம் ஏற்படும் என்று அந்தப்பத்ரிகை எழுதுகிறது.

REST BEFORE MEALS.

சாப்பிடுமுன் வேலை செய்யாமலிருப்பது.

சாப்பிடுமுன் யாதொரு வேலையும் செய்யாமல் ச்ரமந் தீர உட்கார்ந்திருப்பதால் சாப்பிடும் உணவு சீக்ரம் ஜீர்ணமாகும். சாப்பிடுமுன்னும் சாப்பிட்ட பிறகும் ரொம்ப பலமாக யோசித்தாலும், அல்லது மனோ வ்யாகூலத்தோடு இருந்தாலும், ஜீர்ணக் கருவிகளில் போதுமான அளவு ரத்தம் இராமல் குறைந்து போகும். சாப்பிடும்போது வாசிப்பதும் கெடுதல் தான். ரொம்ப ஆலோசனை செய்யவேண்டியிராத லேசான விஷயங்களைப்பற்றிப் பேசுவது நல்லது. மனம் அமைதியாயிருந்து, ஆகாரத்தை நன்றாய் மென்று தின்று வந்தால் சாதம் நன்றாய் ஜீர்ணமாகும்.

YAWNING.

கொட்டாவி விடுதல்.

தூக்கமில்லாவிட்டாலும் அஜீர்ணமாயிருந்தாலும் கொட்டாவி வருவதுண்டு. கொட்டாவிக்குக்காரணம் அஜீர்ணமாயிருந்தால் சாப்பாட்டைக் கொஞ்சம் குறைவாகச் சாப்பிடவேண்டும். இன்னமகொஞ்சம் சாப்பிடலாம் என்றிருக்கும்போதே இலையை விட்டு எழுந்துவிடவேண்டும். கொட்டாவி வந்தால் மெதுவாய் வெகுநேரம் ச்வாஸத்தை உள்ளுக்குக் வாங்கிக் கொண்டு மெதுவாய் வெளியில் விடவும். மூச்சையடக்கி ப்ராணுயாமம் செய்வதோடுகொட்டாவி விடுவதில்லையென்று வ்ரதம் செய்து அதின்படி நடக்க முயற்சிக்கவும்.

DIABETES

நீரிழிவு வ்யாதி

நீரிழிவு வ்யாதியின், உற்பத்தி அதன் பரிகாரம் முதலியவைகளைப்பற்றிப் பரிசோதனை செய்வதற்கான உபாயத்தை சென்னை கவர்ன்மெண்டார் சீக்ரத்தில் கையாடி வருவார்களென்று தெரிகிறது.

The Boys' World.

பையன்கள் பகுதி.

HOW SEEDS GROW.

விதைகள் முளைக்கும் விதம்.

விதைகளில் இரண்டு விதம் உண்டு: அவையாவன் ஒற்றைப்பருப்புள்ளவை, இரட்டைப் பருப்புள்ளவை என்பவைகள். அவரை அல்லது மொச்சையைத் தோலை யுரித்துள்ளே பார்த்தால் இரண்டு பருப்புகள் ஒரு ஓரத்தில் சேர்ந்திருப்பது தெரியும். சோளம், நெல், கம்பு, முதலிய சில தான்யங்களின் விதைகளில் ஒரே பருப்புத்தான் இருக்கிறது. விதைகள்முளைக்கும் விதத்தை நேரில கண்டறிவதற்கு முதலில் இரட்டைப்பருப்பு விதைகளை யெடுத்துக் கொள்ளவேண்டும். கல்யாணமுருங்கை, மொச்சை, வெள்ளரி முதலிய விதைகள் பரீக்ஷை செய்வதற்கு மிகவும் ஏற்றவை. ஒரு அகன்ற ஆழமில்லாத கண்ணாடிப்பாத்ரத்தில் கம்பளித் துணியை ஈரமாக்கி யதில் விதைகளைப்போட்டு வைக்கவேண்டும். விதைகள் கடினமாயிருந்தால் விதைப்பதற்குமுன் சிலமணிநேரம் ஜலத்தில் ஊறவைக்கவேண்டும். கண்ணாடிப் பாத்திரத்தில் விதைகளைப் போட்டு அவைகள் முளைக்கும் விதத்தைப் பார்ப்பதோடுகூட மரப்பெட்டிகளில் மண்ணைப்போட்டு நிரப்பி யதில் விதைகளை நட்டு ஜலம் வார்த்தால் பூமியிலிருந்து விதைகள் கிளம்பும் விதத்தையும் அப்போதுள்ள நிலைமைகளையும் நன்றாய் கவனிக்க முடியும். மொச்சை அல்லது கல்யாணமுருங்கையை ஜலத்தில் நனைத்தால் அதன் தோல் ஊறி ம்ருதுவாகும். தோலை யுரித்துவிட்டு உள்ளிருக்கும் பருப்புகளைக் கொஞ்சமாக பிரித்தால் இரண்டும் ஒரு ஓரத்தில் ஒட்டிக்கொண்டிருப்பது தெரியும். இரண்டும் ஒட்டிக்கொண்டிருக்குமிடத்தில் ஒரு சிறு முளையிருக்கும். இந்த முளைதான் வளர்ந்து செடியாகவும் மரமாகவும் ஆகிறது. சிறுமுளை பெரியதாகிறதாகவே பூமியிலிருந்து ஆகாரத்தை க்ரகிக்கக் கூடிய சக்தியை அடையும் வரையில் அது பருப்புகளிலுள்ள ஆகாரத்தை க்ரகித்து வளர்ந்து வருகிறது.

வேர்க்கடலையில் முளையானது சிறு இலைகளுள்ளதாக இருக்கும். உண்மையில் விதையென்பது தான் வளருவதற்கு வேண்டிய ஆகாரத்துடன் கூடிய ஒரு சிறு செடியாகும். இந்த சிறுமுளையின் அடிப்பாகம் சிறுவேர் ஆகும். இதன் மேல்பாகந்தான் மேல்நோக்கி வளர்ந்து தண்டும் இலைகளுமாக ஆகிறது. விதைகளை பூமியில் நட்டு அவைகள் வளரும்போது, சில ஜாதி விதைகளில் விதைப்பருப்பு பூமியிலேயே தங்கிவிடும்; சில ஜாதிவிதைகளில் பூமிக்கு வெளியில் வரும். பருப்புகளிலுள்ள ஸத்து முழுவதையும் சிறு செடி க்ரகித்துக் கொண்ட பிறகு பருப்புகள் வாடி உதிர்ந்துவிடும்

எல்லா விதைகளுக்கும் மேல்புறத்தில் கெட்டியான தோல் உண்டு. இதை ஜலத்தில் போட்டால் தோல் ஜலத்தில் ஊறி விடுகிறது. அந்தத்தோலின் வழியாக ஜலம் உள்ளேபோய் விதையிலுள்ள மா ஸத்துக்களின் சிற்றறைகளுக்குள் புகுந்து அறைகளை உப்பும்படி செய்கிறது. இதனால் விதையின் தோல் விரிந்து விதைப்பருப்பும் வேரும் வெளியில் வரும்படி செய்கிறது.

விதைகள் ஈரமாகாமல் உலர்ந்திருந்தால் அவைகள் வெகுநாள் வரையில் கெடாமலிருக்கும். ஈரமாகி உஷ்ணம் சேர்ந்தால் உடனே முளைக்க ஆரம்பித்து விடும். விதைகளில் சில புளிப்புப் பொருள்கள் இருக்கின்றன. இவைக

ளோடு ஜலம் சேராத வரையில் இவைகள் செயலற்று இருக்கின்றன. ஈரம் சேர்ந்ததும் ஒருபுளிப்புப்பொருள் மாஸத்தை வெளிப்படுத்துகிறது. இன்னொருபுளிப்புப்பொருள் அதை சர்க்கரையாக மாற்றுகிறது. இந்த சர்க்கரையை உட்கொண்டுதான் சிறுமுளை வளருகிறது. முளை வளரும்போது ஆகாயத்திலுள்ள ப்ராண வாயுவானது பருப்பிலுள்ள மாப்பொருளோடு கலந்து அதை சர்க்கரையாக மாற்றுவதில் ரொம்பவும் உதவியாயிருக்கிறது. மாப்பொருள் ப்ராணவாயுவின் உதவியால் சர்க்கரையாக மாறும்போது கரியமிலவாயு வென்னும் வாயு ஒன்று வெளிவருகிறது. செடிவளர்ச்சியில் ஒரு முக்யமான விஷயத்தை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அதாவது வேர்களும் அதன் கிளைகளும் பூமியிலுள்ள செடியுணவை க்ரஹிப்பதில்லை யென்பதே. வேர்களைச்சுற்றிலும் மிகவும் நுட்பமான ரோமம் போன்ற சிறு வேர்கள் அடர்ந்திருக்கின்றன. வேரைப்பிடுங்கும் போது அந்த ரோமம் போன்ற வேர்கள் அறுந்து போகின்றன. ஒவ்வொரு ரோம வேரின் நுனியிலும பூமியிலிருந்து மர உணவை க்ரஹிப்பதற்கு வேண்டிய ஏற்பாடு அமைக்கப்பட்டிருக்கிறது.

ஜலத்தில் கரைந்துள்ள மரஉணவானது ரோமவேரின் நுனியில் பட்டதும் வேரின் நுனியானது அந்த உணவை க்ரஹித்து வேர்களிலுள்ள சிற்றறைகளுக்கு அனுப்ப, அது அவைகளின் வழியாகவும் தண்டுகளின் வழியாகவும் போய் இலைகளுக்குப் போய்ச்சேருகிறது. ஒவ்வொரு வேரிலும் இந்த ரோமவேர்கள் உண்டாகின்றன. ரோமவேரில்லாத ஸாதாரணவேர்களின் நுனியில் ஒருவித கெட்டியான உறையிருக்கிறது. இது இருப்பதனல் வேரானது கெடுதலடையாமல் பூமியில் ஊடுருவிச் செல்லக்கூடும்.

விதை முளைப்பதில் முதலில் விதையின் தோல் பிரிந்து கொடுக்கிறது. அதிலிருந்து முளையின அடிப்பாகமாகிய சிறு வேர் வெளியில் வந்து கீழ்நோக்கிச் செல்லுகிறது. சிறு வேர் கொஞ்சம் வளர்ந்தபிறகு முளையின்மேல் பாகம் வெளியில் வருகிறது. விதைகள் முளைப்பதில் அவைகள் செடி அல்லது மரமாய் வளர்ந்து தக்க பலன் கொடுக்க வேண்டுமானல் 5-அம்சங்கள் உதவியாயிருக்க வேண்டும். அவைகளாவன: வெளிச்சம், உஷ்ணம், ஜலம், காற்று மண் ஆகிய இவைகளே. விதை முளைக்கும்போது வெளிச்சம் வேண்டிய அவச்யமில்லை. ஏனென்றல் விதை வளருவதற்கு வேண்டிய எனெர்ஜி அதாவது சக்தியானது விதையிலே இருந்து வருகிறது; விதைகள் காயில் இருக்கையில் அவைகள் முதிருவதற்கு ஸூர்ய உஷ்ணமும் வெளிச்சமும் வேண்டியிருந்தன. அப்போது கிடைத்த ஸூர்ய உஷ்ணம் வெளிச்சம் ஆகிய இவைகளால் விதை முளைப்பதற்கு வேண்டிய சக்தி ஏற்பட்டிருப்பதால் சிறு நாற்றுகளாக வளரும் வரையில் விதைகளுக்கு வெளிச்சமே வேண்டியிருப்பதில்லை.

விதையில் ஒருவிதபுளிப்புப்பொருள் இருப்பதாகச் சொன்னேம். விதையானது செடியிலிருந்து எடுக்கப்பட்டு அல்லது பிரிந்துசும்மா இருக்கும் காலத்தில் தான் இந்தப் புளிப்புப் பொருள்கள் விதைகளில் உண்டாகின்றன. விதைகளை வெகுகாலம் முளைக்கப் போடாமலிருந்தால் இந்தப் புளிப்புப் பொருள்களுக்கு சக்தி இல்லாமல் இறந்துபோய்விடும்.

மேலே சொன்னபடி விதைகளைப்போட்டுப் பார்த்தால் அவைகள் முளைப்பதை நன்றாய்ப் பார்க்கலாம். முளையின் அடிபாகம் ஸாதாரணமாய் எப்போதும் கீழ்நோக்கியேபோகுமென்றாலும் வெங்காயத்தின் விதையில் மாத்ரம் அடிப்பாகமானது முதலில் மேல் நோக்கிப் போய்ப் பிறகு கீழ்நோக்கிப் போகிறது,

IS THE EARTH DRYING UP?

பூமியிலுள்ள ஜலம் குறைந்து கொண்டிருக்கிறதா?

அநேக சாஸ்த்ரிகள் பூமியிலுள்ள ஜலம் சுண்டிப்போய்க் குறைந்து கொண்டிருக்கிறதென்று சொல்லிவருகிறார்கள். இந்தக் கொள்கை தவறானதென்று ஒரு ப்ரொபஸர் ஸாதிக்கிறார். இவர் ஸமீபத்தில் லண்டனிலுள்ள ராயல் ஜியாக்ராபிகல் ஸங்கம் என்று சொல்லப்படும் பூகோள சாஸ்த்ர ஸங்கத்தில் இதைப்பற்றி ஒரு ப்ரஸங்கம் செய்தார். பூமியிலுள்ள அநேக ப்ரதேசங்களில் ஏரிகளும் நதிகளும் ஜலம் வற்றி வறண்டுபோயிருப்பதற்கும், ரொம்ப செழிப்பான ப்ரதேசங்கள் ஒன்றுக்கும் உதவாத பாலைவனங்களாக மாறியிருப்பதற்கும் அத்தாட்சிகள் இருக்கின்றனவென்றாலும், அந்தந்த ப்ரதேசங்களில் பெய்யும் மழையின் அளவு வித்யாஸப்படுவதால்தான் இப்படி நேர்ந்திருக்கின்றனவென்றும், பூமியின் அநேக ப்ரதேசங்களில் மழை ரொம்ப ஏராளமாய்ப் பெய்திருக்கிறதாகத் தெரியவருகிறதென்றும், ஓரிடத்தில் அதிக மழை பெய்தால் இன்னொரு இடத்தில் மழை குறைவாகப் பெய்யவேண்டியது ந்யாயமேயாகும் என்றும், ஆகையால் சில இடங்களில் ஆறு ஏரிகள் வறண்டுபோய் செழிப்பான இடங்கள் பாலை நிலமாக மாறினதாலேயே பூமிமுழுவதும் ஜலம் குறைந்து வறண்டு போகுமென்று சொல்வதற்கில்லையென்றும் அந்த ப்ரொபஸர் சொன்னார்.

THE TALLEST TREE.

மிகவும் உயரமான மரம்.

அமெரிக்காவிலுள்ள வெல்லிங்டோனியா என்னும் மரந்தான் உலகத்திலுள்ள மரங்களெல்லாவற்றிலும் மிகவும் உயரமானதென்று இதுவரையில் எண்ணிவந்தார்கள். தறபோது ஆஸ்ட்ரேலியாவில் உள்ள 'யூகலிப்டஸ் அமிக்டாலினா' (Eucalyptus Amygdalina) என்னும் ஜாதி மரங்கள் வெல்லிங்டோனியாவைவிட ரொம்ப உயரமாயிருக்கின்றனவாம். இவைகளில் ஒன்று 480 அடி உயரம் வளர்ந்திருக்கிறதாம். இவைகளில் சிலவற்றின் அடிமரத்துச் சுற்றளவு 53 அடி இருக்கிறதாம். இவைகள் பல நூற்றுண்டுகள் உயிரோடிருந்திருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இவைகளின் அடிமரத்துச்சுற்றளவு 200 அல்லது 300 வருஷத்துக்குள் 6 அடி அதிகரிக்குமாம். இந்தக் கணக்கைக் கொண்டு பார்த்தால் மேலே குறித்த பெரியமரம் ஸுமார் இரண்டாயிரம் வருஷம் உயிரோடிருந்திருக்க வேண்டுமென்று ஏற்படுமென ஒரு தாவர சாஸ்த்ரி சொல்லுகிறார்.

ASOKA'S COLUMNS.

அசோகன் நட்ட ஸ்தம்பங்கள்.

சாம்பாரான் என்னும் ப்ரதேசத்தைச் சேர்ந்த ராம்பூர்வாவில் 2000 வர்ஷங்களுக்கு முன் அசோக ராஜா நாட்டியிருந்த இரண்டு பெரிய கல் ஸ்தம்பங்கள் குழிகளில் விழுந்திருந்ததை ஸமீபத்தில் அந்தக் குழிகளிலிருந்து வெளியிலெடுத்தார்கள். இவைகளை வெளியிலெடுப்பது ரொம்பகஷ்டமாயிருந்ததோடு அதிககாலமும் பிடித்ததாம். அந்த இரண்டு ஸ்தம்பங்களில் பெரியதில் எழுத்துகள் வெட்டப்பட்டிருந்தன. தற்காலம் அநேக நூதன ஸாதனங்களிருக்கையில் அவைகளைக் கொண்டு சிறுகுழிகளிலிருந்து எடுப்பது ரொம்ப கஷ்டமாயிருக்குமானால், 2000-வருஷங்களுக்குமுன் நூற்றுக்கணக்கான மைல் தூரத்திலிருந்து இந்தக் கற்களை எப்படிக் கொண்டுவந்து நட்டார்கள் என்பது மிகவும ஆச்சரியமாயிருக்கிறது.

SAYINGS OF AKBAR

அக்பர் நீதிமொழிகள்

1. துன்மார்க்கத்துக்குச் சோம்பலே காரணம். நன்மையை நாடுகிறவன ஒரு தொழிலைக் கற்று அதில் ப்ரவர்த்திக்க வேண்டும்,

2. லௌகிக சிந்தையுள்ளவர்கள், சோம்புலுக்கு இடங்கொடாமலும், அக்ரமமான விஷயங்களில் விருப்பஞ் செலுத்தாமலும், ஏதாவது ஒரு தொழிலில் முயற்சி செய்திருப்பதே தகுதி.

3. உலக வாழ்க்கைக்கு அவச்யமான கல்விப்பொருளையும் செல்வப்பொருளையும் தேடுவதில், ஒவ்வொரு நாளையும் வாழ்நாளின் கடைசி நாளாகவே பாவித்து, இன்றைக்குச் செய்யத்தக்கதை நாளைக்குச் செய்யலாமென்று கால தாமஸம் பண்ணுதல் கூடாது.

4. நித்ரையால் சரீரஸௌக்யம் உண்டாவது உண்மையே. ஆயினும் மனுஷஜன்மம் பெறுப் பேறுகையால், மனிதர் நெடுநேரம் நித்ரையில் போக்காமல் விழித்திருந்து கார்யங்களை கவனிக்கவேண்டும்.

5. ஸ்நேகருடைய சேர்க்கையால் மனிதர் ஸ்நேகருடைய இயல்பைப் பெறுவர். அவரவர்க்கு உண்டாகும் நன்மை தீமைகளில் அநேகத்துக்கு அதுவே காரணம்.

6. பகவானைப் போற்றுவதால் மனிதருக்கு இம்மைப்பேறும் மறுமைப்பேறும் உண்டாகும். தந்தைக்குக் கீழ்ப்படிந்து நடப்பதால் சிறுவர்களுக்கு க்ஷேமம் உண்டாகும்.

7. குருவுக்கு மிஞ்சின சிஷ்யன் இருந்தாலும் குருவினிடத்தில் மரியாதையாகவும் வணக்கமாகவும் நடக்கவேண்டும்.

8. உலக உயிர் வாழ்க்கைக்கு அன்பு இன்றியமையாதது. எந்த ஜீவப்ராணியும தன்னுபடி செய்யத் தக்கதல்ல.

9. மனிதன் தன் இரைப்பையை ப்ராணிகளின் ப்ரேதக் குழியாக்குவது தகுதியல்ல.

10. மனிதர் மாம்ஸம் உண்பது பெருவழக்காக இருக்கின்றது. நோவெடுக்காவிட்டால் தங்கள் உடலையே உண்பார்போலும்.—விவேக போதினி.

FLYING ROUND THE WORLD.

ஆகாயக் கப்பலில் பூ ப்ரதக்ஷணம்.

வட அமெரிக்காவையும் தென் அமெரிக்காவையும் ஒன்றுசேர்க்கும் பனமா பூஸந்தியில் ஒரு கால்வாய்வெட்டி அட்லாண்டிக் மகா ஸமுத்ரத்தையும் பஸிபிக் மகாஸமுத்ரத்தையும ஒன்றாய்ச் சேர்த்திருக்கிறார்கள். இந்தக் கால்வாய் வழியாய் கப்பல்கள் அமெரிக்காவின் கீழ்ப்புறத்திலிருந்து மேல்பக்கத்துக்கு ஸுலபமாயும் காலதாமஸ மில்லாமலும் போகக்கூடும்.

இந்தப் பனமா கால்வாய் ஸமீபத்தில்தான் திறந்து வைக்கப்பட்டது. இந்த ஸம்பவத்தை யொட்டி 1915-ம் வர்ஷம் ஒரு பொருள் காட்சிவைத்து நடத்தப்போகிறார்கள். அந்தக்காட்சி ஸமயத்தில் ஆகாயக்கப்பலிலேயே பூப்ரதக்ஷணம் செய்பவர்களுக்கு லக்ஷம் ரூபாய் இனாம் கொடுப்பதாக பொருள்காட்சி ஸபையார் உத்தேசித்திருக்கிறார்கள்.

இந்த பூப்ரதக்ஷணப் பந்தயத்தில் முதலாவதாக ஜயித்தவருக்கு 3 லக்ஷம் ரூபாய் இனாம் கொடுக்கப்படுமாம். அவர் அப்படி பூப்ரதக்ஷணம் செய்கையில் அட்லாண்டிக் மகா ஸமுத்ரத்தைக் கடக்கவேண்டியிருக்கும். அட்லாண்டிக் மகா ஸமுத்ரத்தைக் கடப்பவருக்கு 1½ லக்ஷம ரூபாய் இனாம் கொடுப்பதாக லண்டன் 'டைமஸ்' பத்ரிகையின் ஸொந்தக்காரர்களின் முக்யமானவராகிய லார்ட். நார்த்க்ளிப் என்னும் ப்ரபு வாக்களித்திருக்கிறார். ஆகையால் பூப்ரதக்ஷணப் பந்தயத்தில் ஜயித்தவருக்கு மொத்தத்தில் 4½லக்ஷரூபாய் கிடைக்குமாம. பூப்ரதக்ஷணம் செய்வதற்குஏற்றதான ஒருகப்பல் செய்வதற்கு 1½ லக்ஷம் ரூபாயாகும். பூமியில் பலவிடங்களிலும் ஆகாயக்கப்பல்வந்து தங்குவதற்குவேண்டிய ஸ்டேஷன்களும், கப்பலின் எஞ்ஜினுக்குவேண்டிய எரிகருவிகொண்டுபோவும் கட்டுவதற்கு இன்னொரு 1½ லக்ஷம ரூபாய் செலவழிந்து விடுமாம். ஆகவே பந்தயத்தில் ஜயிப்பவருக்கு 1½ லக்ஷம் ரூபாய்தான் மிச்சமாகும்.

The Ladies' World.

ஸ்த்ரீகள் பகுதி.

WOMEN IN THE EAST AND THE WEST.

கீழ்நாடுகளிலும் மேல்நாடுகளிலும் ஸ்த்ரீகளின் நிலைமை.

நமது தேசத்திலுள்ள ஸ்த்ரீகளின் நிலைமையை உயர்த்துவதற்காகப் பலர் முயற்சிசெய்து வருகிறார்கள். சிலர் இந்த தேசத்துப் பழக்கவழக்கங்களை யனுஸரித்தே சீர்திருத்தங்கள் செய்யவேண்டு மென்றும், வேறுசிலர் இங்கிலண்ட், ஜப்பான், அமெரிக்கா முதலிய தேசங்களிலுள்ள ஸ்த்ரீகளின் நிலைமைகளை யனுஸரித்து சீர்திருத்தங்கள் செய்யவேண்டு மென்றும், நமது தேசத்து ஆசாரங்களில் சிலவோ, பலவோ, அல்லது எல்லாமோ காலத்துக்கேற்றவைகளாயிராமல் முன்னேற்றத்துக்குத் தடைகளாகவும், தீங்கு செய்பவைகளாகவும் இருக்கின்றன வாகையால் அவைகளை ஒழித்துவிட வேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். மேல்நாட்டு ஆசாரங்கள் எப்படி யிருக்கின்றன வென்பதை பத்ரிகைகள் மூலமாயும் புஸ்தகங்கள் மூலமாயும் அறிந்து கொள்ளலாமென்றாலும், ஒருவர் அந்த தேசங்களுக்கு நேரில் போய்ப்பார்த்து அறிவது போல் அறியமுடியாது. சிலகாலம் இங்கிலண்டில் வஸித்திருந்து பிறகு இந்தியாவுக்குத் திரும்பிவந்த கான்பூர் வாஸியாகிய மிஸ்ஸஸ் ஜே. பி. ஸ்ரீவஸ்தவா என்னும் ஸ்த்ரீ ஸமீபத்தில் கான்பூரில் கூடிய ஒரு மீட்டிங்கில் இங்கிலண்ட் தேசத்து ஸ்த்ரீகளைப்பற்றிய தமது அனுபவத்தைக் குறிப்பிட்டு ஒரு வ்யாஸம் வாசித்தார். அந்த வ்யாஸத்தைச்சுருக்கி எழுதுகிறோம்.

மிஸ்ஸஸ் ஸ்ரீவஸ்தவா இங்கிலண்டில் இருந்தபோது சில பெரிய இங்கிலீஷ் குடும்பங்களில் போய் கலந்து உறவாடுவதுண்டாம். அவர்களுடைய பழக்கவழக்கங்கள் இந்தியர்களுடைய பழக்கவழக்கங்களைப் போலில்லாமல் வித்யாஸமாயிருந்ததனால் முதலில் அவைகள் அவருக்குப் பிடிக்கவேயில்லையாம். ஆனால் அவர் இங்கிலீஷ்காரர்களின் பழக்க வழக்கங்களிலும் கொள்கைகளிலும் ரொம்ப நன்மையிருக்கிறதென்று சீக்ரம் அறிந்து கொண்டாராம். ஜனஸமூகத்தின் நன்மைக்காக உழைக்கும் ஒரு ஸ்த்ரீயோடு அவருக்குப்பழக்க மேற்பட்டது. அப்போதுதான் அவருக்கு ஒருஸ்த்ரீ என்னென்ன கார்யங்கள் செய்யக்கூடு மென்பது தெரியலாயிற்று. அதைப்பற்றி நினைக்கும்போது இந்தியாவிலுள்ள ஸ்த்ரீகள் உலகத்தில் இன்ன நடக்கின்றன வென்று கொஞ்சங்கூடத்தெரியாமல், ஜனங்களுக்கு யாதொரு நன்மையும் செய்ய முடியாமல, தங்கள் புருஷர்களுக்கு ஒரு பெரும்பாரமாயிருந்து வருகிறார்களென்று தெரியவந்தது.

குடும்ப வாழ்க்கையானது ஸ்த்ரீ புருஷர்கள் நடந்துகொள்ளும் விதத்துக்குத்தக்கபடி ஸந்தோஷமாயோ துக்கமாயோ இருந்து வருகிறது. குடும்பவிஷயமாய் தமது கடமையின்னதென்பதை ஸ்த்ரீ புருஷர்கள் அறிந்து கொள்ளவேண்டும். ஒருபுருஷன் அல்லது ஸ்த்ரீ தமது வீட்டில் அதிகநேரம் தங்குவதாலேயே தமது கடமையைச் செய்துவிட்டதாக ஏற்பட்டுவிடாது. குடும்பத்திலுள்ளவர்கள் தங்களுடைய வாழ்நாளை ஸந்தோஷமாகக் கழிப்பதற்கு என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்தல் வேண்டும். புருஷனானவன் வெளியில் பலரிடத்திலும் ஸந்தோஷமான முகத்துடனிருந்து ஸுகமாய்க் காலங்கழித்து, பிறகு களைத்துப்போய் வீட்டுக்கு வந்ததும் வீட்டி-

னுள்ளாரிடம் சிடு சிடென்று எரிந்து விழுகிறான். இதனால் வீட்டில் ஸ்த்ரீ புருஷர்களும் குழந்தைகளும் ஸந்தோஷமாயிருப்பதென்பது முடிவதில்லை. புருஷர்கள் தங்கள் குடும்பத்தை ஸந்தோஷமாக இருக்கும்படி நடந்துகொள்ள வேண்டியது அவர்களுடைய கடமையாகும். வீட்டிலிருந்து வெளியே போனவுடன் எவ்வளவோமேன்மையான கார்யங்கள் செய்து எவ்வளவோ நல்லவர்களாக நடந்தும், வீட்டுக்கு வந்தவுடன் அந்த நல்ல குணங்களைவிட்டு விட்டிருப்பதுசரியல்ல. புருஷர்கள் தங்களுடைய உத்யோகங்களைப் பற்றியும் தொழில்களைப் பற்றியும் குடும்ப வ்யவஹாரங்களைப்பற்றியும் தங்களுடைய மனைவிகளிடம் ஒன்றும சொல்வதேயில்லை. ஆனால் இங்க்லண்டிலோ அப்படியல்ல. ஸ்த்ரீகள் தங்களுடைய புருஷர்களுக்கு மந்த்ரிகள்போலிருந்து வருகிறார்கள். ஸ்த்ரீ புருஷர்கள்சேர்ந்து யோசனை செய்யாமல் ஒரு கார்யமும்செய்வதில்லை. புருஷன் மற்றவர்களுடன் பேசும போது எப்படி ஸுமுகமாயும், ஸந்தோஷத்துடனும் இருப்பானோ அப்படியே தன்னுடைய மனைவி மக்களுடன் பேசிக்கொண்டிருக்கும் போதும் இருப்பான். இந்தியாவிலோ அப்படியல்ல. வீட்டுக்கு விருந்தாளிகளாவது அல்லது வேறுமனிதர்களாவது வந்தால் மாத்ரம் கோப தாபமில்லாமல் ஸந்தோஷமாக அவர்களுடன் பேசிக் காலங்கழிக்கிறார்கள். தங்கள் மனைவி மக்களுடன் பேசும்போதென்றால் மாத்ரம் அப்படியிருப்பதில்லை.

இந்தியாவில் ஸ்த்ரீகளுக்குச் சரியான கல்வி கிடையாது. கல்வி கற்றிருப்பதென்றால் எழுதப் படிக்கத் தெரிந்திருப்பது தானென்று இந்தியாவில் பலர் நினைத்து வருகிறார்கள். இந்தியால் கல்வி கற்றிருப்பதாகச் சொல்லப்படும் ஸ்த்ரீகளுக்கு உலக வ்யவஹாரங்களைப்பற்றி அநுபவங்கள் கிடையா. அவர்களுடைய அறிவு விசாலமடைவதில்லை. அப்படியிருக்கும் ஸ்த்ரீகள் மேல்நாடுகளிலுள்ள அதிக முன்னேற்றமடைந்திருக்கும் ஸ்த்ரீகளுக்கு ரொம்பவும் கீழ்ப்பட்டவர்கள் என்பதில்ஸந்தேகமென்ன? இங்க்லண்டில் ஸ்த்ரீகள் ஜனஸமூகத்தின் நன்மைக்காக ரொம்பவும் பாடுபட்டு வருகிறார்கள். இந்தியாவிலோ ஸ்த்ரீகள் வீட்டைவிட்டு வெளியில் வருவதே கஷ்டமாயிருக்கிறது. இந்திய ஸ்த்ரீகளை உயர்த்துவதற்கு அவர்களுக்குக் கல்விகற்பிக்கவேண்டியது மிகவும் அவச்யம். குடும்ப நிர்வாகம், ஸுகாதாரம், குழந்தைகள் பரிபாலனம் முதலியவைகள் தான் முக்யமாய்க் கற்பிக்கவேண்டும். ஸுகாதார விஷயங்கள் ஸ்த்ரீகளுக்குத் தெரியாததால் குழந்தைகளுக்கு வ்யாதிகள் அதிகம் ஏற்பட்டு, சிசுமரணம் அதிகமாயிருந்துவருகிறது. குழந்தைகளை சரிவரப் பாதுகாக்கத் தெரியாமையால் குழந்தைகளுக்கு நற்பழக்கங்கள் ஏற்படுவது முடியாமலிருக்கிறது. குடும்ப வ்யவஹாரங்களை நன்றாய் கவனிக்கத் திறமை ஏற்படும்படி ஸ்த்ரீகளுக்குக் கல்வி கற்பிக்கவேண்டும்.

COLIC IN INFANTS.

சிசுக்களின் வயிற்றுவலி.

‘வைத்தியகலாநிதி’ என்கிற வைத்ய பத்ரிகையானது இவ்விஷயத்தைப்பற்றி அடியில் வருமாறு கூறுகிறது:—மூன்று மாஸத்திய குழந்தை ஒன்று அதிகமாய் அழுதுகொண்டிருந்தது. அக்குழந்தையின் தாய்க்கு வேண்டியவர்களான சில ஸ்த்ரீகள் ‘குழந்தைக்குப் பசி, பால் புகட்டவேண்டும்’ என்று சொன்னார்கள். அப்படிப் பால் கொடுத்து வந்ததில் குழந்தைக்கு அவஸ்தை அதிகரித்தது. அதிக உணவினால் குழந்தை அதிசீக்ரம் வளரும் என்ற எண்ணமோ, அல்லது வேறு ஏதாவது காரணத்தினாலேயோ ஒருதரம் ஊட்டிய உணவு ஜீர்ணமாவதற்கு முந்தியே மறுபடியும் ஆஹாரம் ஊட்டுவது வழக்கமாயிருக்கிறது. குழந்

தைக்குப்பசி அதிகமாயிருந்தால் கையில் நாடியானது ஸாதாரண ஸமயங்களில்விட பலமாகவும் ஏழெட்டுத் தடவை அதிகமாகவும் அடித்துக்கொள்ளும். இது வைத்யர்களுக்குத் தெரிந்ததே. நினைத்தபோதெல்லாம் குழந்தைக்கு ஆஹாரம் ஊட்டுவதுபோல், அக்குழந்தையின் தாயை இரவிலும் பகலிலும் அடிக்கடி ஆஹாரம் உண்ணும்படி நிர்ப்பந்தப்படுத்தினால், அவளுடைய குடலுக்கு என்ன நேரிடுமென்று வைத்யர்கள் கேட்டால் அப்பொழுது தன்னுடைய வழக்கம் கெட்டதென்று அவளுக்குத் தெரியும். சிறிய சிசுவின் வயிற்றிலுள் ஜீர்ணமாகாமல் அதிகமாய்ப் புளித்துப்போன பால் தங்கியிருக்கும்போது குழந்தை வயிற்றுவலியால் அழுதுகொண்டிருப்பது ஒரு ஆச்சரியமா? ஒருமுறைபாலூட்டினபிறகு குறைந்தது இரண்டு மணிநேரம் கழித்துத்தான் மறுபடியும் பால் கொடுக்கவேண்டும். குழந்தைக்கு தாஹமிருக்கிறதென்று தெரிந்தால், இளஞ்சூடான சுத்தஜலத்தைத் தவிர வேறொன்றும் கொடுக்கக்கூடாது. அதிலும் ஒரு பாலடைஜலந்தான்கொடுக்கலாம். இம்மாதிரியாக சரியான காலங்களில் தகுந்த அளவு பாலூட்டி வந்தால் அஜீர்ண வயிற்றுவலி குழந்தைக்கு உண்டாகாது.

தாய்க்கு நேரிடும் மலபந்தம் குழந்தையின் வயிற்றுநோய்க்கு மற்றொரு காரணம். ஸ்த்ரீகள் பெரும்பாலும் மலச்சிக்கல் இருக்கிறதென்பதை வெளியிட்டுச் சொல்லுகிறதில்லை. குடலில் சேர்ந்திருக்கும் பழைய மலத்தின் தோஷங்கள் ரத்தத்தில் ஊறி அதன் மூலமாய் நாளாவர்த்தியில் முலைப்பாலிலும் ஸம்பந்திக்கும். அந்த முலைப்பால் குழந்தைக்குக் கெடுதி செய்யும். மலச்சிக்கலைப் பரிஹரிக்க ஓர்வித கஷாயமுண்டு. அதை உட்கொண்டால் மலபந்தம் நீங்கிவிடும்; அக்கஷாயம் தயாரிக்கும் முறை பின் வருமாறு:—சிவதைவேர் 1-பலம் இடித்துப்போட்டு ¼-படி ஜலம் சேர்த்து ⅛-ஆழாக்காகக் காய்ச்சி வடிகட்டி ஒரு பலம் விளக்கெண்ணெய்சேர்த்து காலையில் உட்கொள்ள வேண்டும். இதில் ½-பலம் இந்துப்பு வேண்டுமானால் சேர்த்து உபயோகித்துக் கொள்ளலாம். இந்துப்பு முதலிய சரக்குகள் குடலை சுத்தம் செய்வதுடன், பித்தநீரை அதிகமாகச் சுரப்பித்து, அதன் மூலமாக வயிற்றிலுள்ள அழுக்குகளை ஒருவிதமாக அப்புறப்படுத்தும். மலச்சிக்கலுள்ள ஸ்த்ரீகளுக்கு இவ்விதம் கவே நாலைந்துதடவை வாரத்திற்கு ஒரு முறையாக பேதிக்குக் கொடுத்தால் மலக்கட்டு ஒழிந்துவிடும். முலைப்பாலும் சுத்தமாய் விடும்.

MARRIAGE AND LONGEVITY.

கல்யாணமும் தீர்க்காயுஸும்.

கல்யாணம் செய்து கொள்வதால் ஒருவர் அதிககாலம் ஜீவித்திருக்கலாமென்று ஒரு ப்ரெஞ்ச் வைத்யர் சொல்லுகிறார். ஒரு ப்ரும்மசாரிக்கு அல்லது விவாகமாகாத ஸ்த்ரீக்கு அதிககாலம் ஜீவித்திருக்க அவ்வளவு ஸௌகர்யங்கள் இருக்கின்றனவோ அதைவிட அதிக ஸௌகர்யங்கள் கல்யாணமானவர்களுக்கு இருக்கின்றன. கல்யாணமான நிலைமையில் இருப்பவர்களுக்குள் உள்ள சாவு விகிதத்தைக் காட்டிலும் தாரமிழந்தவர்களுக்குள் சாவுவிகிதம் அதிகமா யிருக்கிறது. ஆகையால் தாரமிழந்தவர்கள் [illegible]0-வயஸுக்கு மேல்படாவிட்டால் மறுபடியும் கல்யாணம்செய்து கொள்ள வேண்டும் என்று அவர் சொல்லுகிறார்.

வாலிபர்களுக்கு அவர் கூறும் புத்திமதியாவன. வாலிபர்களுக்கு கல்யாணத்தால் க்ஷேமம் உண்டாகிறதால் அவர்கள் கல்யாண நிலைமையை அடைவது ரொம்பவும் நல்லது. அவர்கள் தங்களுடைய மனைவிகளின் தேகஸ்திதி விஷயத்தில் ரொம்ப கவனம் செலுத்த வேண்டும். மனைவி இறந்துபோனால் அவளுடைய புருஷனுடைய க்ஷேமத்துக்கு ரொம்ப கெடுதியேற்படும். ஏனெனில் புருஷனுடைய வாழ்க்கையானது பெரும்பாலும் மனைவியின் க்ஷேமத்தைப் பொருத்ததாயிருக்கிறது.

கல்யாணமாகாத ஸ்த்ரீகளுக்குள் உள்ள சாவு விகிதம் கல்யாணமான நிலைமையிலுள்ள ஸ்த்ரீகளுக்குள் உள்ள சாவு விகிதத்தைவிட

ரொம்ப அதிகமாயிருக்கிற தாகையால் ஸ்திரீகள் கல்யாணம் செய்து கொள்வதே நல்லதென்று அந்த டாக்டர் சொல்லுகிறார்.

விதவைகள் விஷயத்திலோ வென்றால் அவர்களுக்குள்ளும் சாவு விகிதம அதிகமாய் இருக்கிறது. அதிலும் 20-முதல் 25-வயது வரையில் உள்ள விதவைகளுக்குள் சாவு விகிதமானது அதே வயதுள்ள கல்யாணமான நிலையிலுள்ள ஸ்திரீகளுக்குள் உள்ள சாவு விகிதத்தைவிட மூன்று மடங்கு அதிகமாயிருக்கிறது.

கல்யாணமானவர்களுடைய வாழ்க்கையானது க்ரமம் தப்பாமல் இருந்து வருகிறது. அவர்கள் ஒருவித கட்டுக்கு அடங்கினவர்களாயிருக்கிறார்கள். அவர்களுடையஸன்மார்க்க முறைகளும் ஜீவ்ய இயல்பும் க்ரமமாயும் ஸுகமாயும் நடந்து வருகின்றன. இப்படியிருப்பதால் அவர்களுக்குள் சாவுவிகிதம் அதிகமாக இருக்க இடமில்லைஎன்கிறார்.

LADY HARDINGE.

லேடி ஹார்டிஞ்ஜ்.

லேடி ஹார்டிஞ்ஜ் தாம் ரொம்ப பரோபகார சிந்தனையுள்ளவரென்பதை இரண்டொரு ஸமயங்களில் காட்டியிருக்கிறார். ஸமீபத்தில் பேஹாரிலுள்ள பல பெரிய மனிதர்கள் அவருக்கு ஒரு உருவச்சிலை செய்து பங்கிப்பூரில் ஸ்தாபிக்கவேண்டுமென்று கேட்டதற்கு லேடி ஹார்டிஞ்ஜ் அந்தப்பணத்தைக்கொண்டு ஸ்திரீகளுக்கு வைத்யசாலை ஸ்தாபிப்பது நல்லதென்று சொல்லித் தடுத்துவிட்டார். இன்னொரு ஸமயம் கல்கத்தா முனிஸிபாலிடியார் லேடி ஹார்டிஞ்ஜ் கல்கத்தாவுக்கு வந்த ஸமயத்தை யொட்டி அவருக்கு ஒரு நகை கொடுக்கவேண்டு மென்று சொன்னதற்கு லேடி ஹார்டிஞ்ஜ் அதற்குப் பிடிக்கும் பணத்தை ஏதாவது தர்மகார்யத்துக்குச் செலவழிக்காலாமென்று சொல்லித் தடுத்துவிட்டார்.

DRAKSHI CHURNAM.

திராட்சி சூர்ணம்.

கொடி முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், அதிமதுரம், முட்காவேளை, நெற்பொரி, கோரைக்கிழங்கு, ஏலம், கிராம்பு, கொத்தமல்லி, மிளகு, திப்பிலி, கூகைநீர், வெலிப்பருத்திவேர், சாதிக்காய், சாதிபத்ரி, லவங்கப்பத்ரி, வால்மிளகு இவைகள் வகைக்குப் பலமொன்று வாங்கி இளவறுப்பாய் வறுத்துச்சூர்ணித்து, ஸமனிடை சர்க்கரையைச் சேர்த்து திரிகடி ப்ரமாணம் அந்திசந்தி நாற்பதுநாள் தேனிலாகிலும் நெய்யிலாகிலும் கொள்ளவும். இதனால் தீரும் வ்யாதிகளாவன ;—அந்திரவாய்வு, பாண்டுரோகம், தாபஜ்வரம், மயக்கம், தூக்கமின்மை, பித்தவாந்தி, அன்னத்வேஷம், உஷ்ணரோகம், சிலேஷ்மரோகம், அக்கினி மந்தம், கைகால் எரிவு முதலியவை தீரும். இச்சாபத்யம். கைகண்டது. உஷ்ணதேகிக்கு நெய்யிலும் சிலேஷ்மதேகிக்கு தேனிலும் கொடுக்கவேண்டும்.—விச்வகர்ம குலோபகாரி

PROF. KARVE'S WIDOW'S HOME.

கார்வேயின் விதவாச்ரமம்.

ப்ரொபஸர் கார்வேயென்னும் மகாராஷ்ட்ரர் பூனாவில் சிலவர்ஷங்களாக ஒரு விதவாச்ரமம் ஸ்தாபித்து நடத்திவருகிறார். அவர் 1891-ம் வர்ஷம் முதல்கொண்டே ஸ்திரீகளின் நிலைமையை உயர்த்தப் பாடுபட்டு வந்திருக்கிறார். அவர் வாய்ப்பேச்சோடு நில்லாமல் தமது கொள்கைகளை அனுஷ்டித்தும் காட்டிவருகிறார். அவர் அப்போது தாரமிழந்தவராயிருந்தார். 1893-ம் வர்ஷத்தில் அவர் ஒரு விதவையைக் கல்யாணம் செய்துகொண்டார்.

1907-ம் வர்ஷத்தில் மகிள வித்யாலயம் என்ற ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தினார். ஸாதாரணமாய் இந்தியர்களுக்குள் பால்யத்தில் கல்யாணமாவதை மாற்றி தக்கவயஸானபிறகு கல்யாணம் செய்யவேண்டுமென்பதைப் பரவச் செய்வதற்காக அதுஸ்தாபிக்கப்பட்டது. ப்ரொபஸர் கார்வே விதவாச்ரமம் ஒன்று ஸ்தாபித்திருக்கிறார். இவை இரண்டும்நன்றாய் நடந்துவருகின்றன. மகிள வித்யாலயத்தையும், அது ஸம்பந்தமான கல்வி அபிவ்ருத்தி முயற்சிகளையும் நிர்வகித்து அவைகளில் பாடுபடுவதற்கு ஸ்திரீகளைத் தயார் செய்வதற்காக ஒரு ஸபை அவரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதிலுள்ளவர்கள் அநேகமாய் விதவைகள்தான். இந்த ஸபையின் நோக்கம், ஸ்திரீகளை தேச நன்மைக்கான வேலைகள் செய்வதில் பழக்குவதோடு ஸ்திரீகளுக்காக பகல் பள்ளிக்கூடங்களும் ராத்ரிப் பள்ளிக்கூடங்களும் ஸ்தாபிப்பதும் ஸ்திரீகளின் நிலைமையை உயர்த்தப் பாடுபடுபவர்களுக்கு பணஉதவியும மனுஷ்ய உதவியும் செய்வதுமாம்.

Biography.

ஜீவ்ய சரித்ரம்.

THE REV. Dr. MILLER, C. I. E

ரெவரேண்ட் டாக்டர் மில்லர், ஸி. ஐ. இ.

தென்னிந்தியாவில் கல்வி அபிவ்ருத்திக்காக அதிக ஊக்கமெடுத்து உழைத்து கல்வியின் நிலைமையை உயர்த்தின ஐரோப்பியர்களில் ரெவரெண்ட் டாக்டர் மில்லரே முதன்மையானவராவர். அவர் சென்னையிலுள்ள க்ரிஸ்டியன் காலேஜுக்கு ஸுமார் 45-வர்ஷகாலம் ப்ரின்ஸிபலாக இருந்தார். அவர் அந்தக் காலேஜில் இருந்தவரையில் மாணவர்களால் நேசிக்கப்பட்டும் பொது ஜனங்களால் விச்வாஸிக்கப்பட்டும் வந்ததுமல்லாமல் உடம்பு அஸௌக்யத்தால் வேலையைவிட்டு தமது ஜன்மதேசமாகிய ஸ்காட்லண்டிலிருக்கும் இப்போதுங்கூட தென்னிந்தியவாஸிகள் அவர் மேல் அன்பு பாராட்டி வருகிறார்கள்.

வில்லியம் மில்லர் ஸ்காட்லண்ட் தேசத்தின் வடகோடியிலுள்ள கெய்த்னஸ் கௌண்டி (ஜில்லா)யைச்சேர்ந்த தர்ஸோ என்னும் ஊரில் 1838-ம்வர்ஷம் ஜனவரிமாஸம் 13தேதியன்று ஜனனமானார். அவருடைய தகப்பனார் ஒரு ப்ரபல வ்யாபாரி. அவர் ஸொந்தத்தில் சில கப்பல்கள்வைத்து வ்யாபாரம் செய்துகொண்டிருந்தார்.

டாக்டர் மில்லர் 13 - வயஸாயிருக்கும போதே தமது பள்ளிக்கூடப்படிப்பை முடித்துவிட்டார். பிறகு அபர்டீன் யூனிவர்ஸிட்டியைச்சேர்ந்த ஒரு காலேஜில் சேர்ந்துவாஸித்தார். 1856-ம் வர்ஷம் எம். ஏ. பட்டம் பெற்றார். காலேஜில் ஒருவர்ஷம் ஸாதாரணப்படிப்புப்படித்தபிறகு மதவிஷயங்கள் கற்றுக்கொடுக்கும் ஒரு கலாசாலையில் சேர்ந்து வாஸித்து வந்தார். அவருடைய படிப்பு முடிந்ததும், மத ஸம்பந்தமான 'உத்யோக மொன்றி லமர்ந்து சில காலத்துக்கெல்லாம் ஒரு மிஷனுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். க்ரிஸ்டியன் காலேஜ் முதலில் 'ஜெனரல் அஸம்ப்ளிஸ் இன்ஸ்டிட்யூஷன்' என்று ஒரு சிறு பள்ளிக்கூடமாயிருந்தது. அது ஸ்தாபிக்கப்பட்ட சில காலம்வரையில் ரொம்ப நன்றாய் நடந்துவந்தாலும், பிறகு தக்க உபாத்யாயர்களில்லாமலும், வேறு காரணங்களினாலும் க்ஷீணதசையடைந்து கொண்டிருந்தது. அப்போது அதாவது 1862 - ம் வர்ஷம் டாக்டர் மில்லர் சென்னைக்கு வேலைக்கு அழைக்கப்பட்டார். அவர் இங்குவந்த சில மாஸங்களுக்குள் பள்ளிக்கூடத்தின் நிலைமையை மிகவும் சீர்திருத்தினார். 1865-ம் வர்ஷத்தில் எப். ஏ. வகுப்பும் 1867-ம் வர்ஷத்தில் பி. ஏ., வகுப்பும் ஏற்படுத்தப்பட்டன. இப்படியாக 5-வர்ஷத்தில் காலேஜின் நிலைமையையும், காலேஜை நடத்திவந்த ப்ரீ சர்ச் மிஷன் என்னும் மதஸங்கத்தின் நிலைமையையும சீர்திருத்தினபிறகு 'பர்லோ' ரஜா எடுத்துக்கொண்டு ஜன்ம தேசத்துக்குப் போய் 1869-ம வர்ஷம் திரும்பிவந்து காலேஜை இன்னும் உயர்ந்த நிலைமையில் வைப்பதற்கு என்ன செய்யவேண்டுமோ அவைகளைச் செய்துவந்தார்.

வில்லியம் மில்லர் தமது காலேஜைச் சீர்திருத்தினதே யல்லாமல் பொதுவாய் பள்ளிக்கூடங்கள் எப்படி நிர்வாகம் செய்யப்படவேண்டு மென்பதற்கும் பிள்ளைகள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதற்கும் சில விதிகள் ஏற்படுத்தி அவைகளை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொள்ளும்படி செய்தார். அந்த விதிகள்தான் 'மதராஸ் எடுகேஷனல் ரூல்ஸ்' என்று வெளியிடப்பட்டிருக்கின்றன.

டாக்டர் மில்லர் தமது காலேஜுக்காக

எடுத்துக்கொண்ட பல முயற்சிகளில் ரொம்ப ச்லாகிக்கத் தகுந்தது மாணவர்கள் வஸிப்பதற்காக ஹோஸ்டல்கள் ஏற்படுத்தினதே. படிப்புக்காக ரொம்பதூரமான விடங்களிலிருந்து சென்னைக்கு வந்திருக்கும் மாணவர்களுக்கு நல்ல வாஸஸ்தலம் ஏற்படுத்திக்கொடுத்து அவர்களுக்குத்தக்க புத்திமதி சொல்லிக்கொடுத்து அவர்களுக்கு உதவி செய்யவேண்டியது ரொம்ப அவச்யமானது என்பதை டாக்டர் மில்லர் பல வர்ஷங்களுக்குமுன்பே அறிந்திருந்தார். 1882-ம் வர்ஷத்தில்தான் தென்னிந்தியாவில் ஹோஸ்டல் ஏற்பாடு முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. டாக்டர் மில்லர் காலேஜுக்கு ஸமீபத்தில் ஒருவீட்டை வாடகைக்கு வாங்கி அதில் சில ப்ராமண மாணவர்களுக்குத் தங்கஇடமும், சாப்பாடு வஸதியும் செய்துகொடுக்க ஏற்பாடுசெய்தார். அந்த ஏற்பாடு த்ருப்திகரமாய் நடந்துவரவே, 1884-ம் வர்ஷத்தில் தம்பு செட்டித்தெருவில் ப்ராமண மாணவர்களுக்காக மதராஸ் ஸ்டேண்ட்ஸ் ஹோம் என்று ஒரு ஹோஸ்டல் ஸதாபித்தார். இதுதான் தென்னிந்தியாவில் முதல் காலேஜ் ஹோஸ்டலாகும். அதன் பிறகு காலக்ரமத்தில் இந்திய கிரிஸ்தவர்களுக்கு ஒரு ஹோஸ்டலும், ப்ராமணமாணவர்களுக்கு இன்னொரு ஹோஸ்டலும், ப்ராமணரல்லாத ஹிந்துக்களுக்கு ஒரு ஹோஸ்டலும் ஏற்படுத்தினார்.

டாக்டர் மில்லர் மாணவர்களிடத்தில் ரொம்ப விச்வாஸம் கொண்டவர். தம்மிடம் வாசித்த பழைய மாணவர்களிடம் அவருக்கு ரொம்ப ப்ரீதியுண்டு. ஏழைப்பையன்களுக்கு அநேக ஸமயங்களில் பணங்கொடுத்து உதவியிருக்கிறார். அவர்தமது மாணவர்களிடம் கொண்டிருக்கும் அன்பை பல ஸமயங்களில் காட்டியிருக்கிறார். பல வர்ஷங்களுக்குமுன் பீபின்ஸ்பார்க்கில் தீப்பிடித்து அநேகர் இறந்துபோனபோது, தமது மாணவர்களில் சிலர் அந்தநெருப்பில் அகப்பட்டிருக்கக் கூடுமோ என்று எண்ணி பற்பலவிடங்களிலும் தமது மாணவர்களைத் தேடிக்கொண்டிருந்ததை அநேகம் மாணவர்கள் ச்லாகித்துக்கூறியிருக்கிறார்கள். யாராவது மாணவர் உடம்பு அஸௌக்யமாயிருப்பதாகத் தெரிந்தால் உடனே அவர் அந்த மாணவருடைய வீட்டுக்குப்போய் மருந்துகொடுக்க ஏற்பாடு செய்வாராம். தம்மிடம் வாசித்துவந்த ஒருமாணவர் விதிவசத்தால் இறந்துபோனபோது டாக்டர் மில்லர் கண்ணும் கண்ணீருமாய் பிணத்தின் பின்னால்நடந்து ஸ்மசானத்துக்குப் போயிருக்கிறாராம். மாணவர்கள்மேல் இவ்வளவு அன்பும் அநுதாபமும் கொண்டிருந்ததனால் அவரை இன்றைக்கும் யாவரும் ஞாபகத்தில் வைத்திருக்கிறார்கள்.

1907-ம் வர்ஷத்தில் மில்லருக்குக் கண்பார்வை குறைவடைந்தது. அதனால் அவர் தமது வேலையை விட்டுவிட்டு தமது ஜன்மதேசத்துக்குப் போகவேண்டியதாயிற்று. அவர் தமது ப்ரின்ஸிபல் உத்யோகத்தைவிட்டுவிட்டபோதிலும், மிஷன் அதிகாரிகள் அவர் கல்விக்காகவும், மதத்தைப் பரவச்செய்வதற்காகவும் ரொம்பப் பாடுபட்டிருப்பதை உத்தேசித்து அவரை ஆனரரி அதாவது கௌரவ ப்ரின்ஸிபலாக நியமித்திருக்கிறார்கள்.

இந்தியாவுக்குவந்து வெகு காலமாவதற்கு முன்னேயே அவர் யூனிவர்ஸிட்டி விஷயங்களில் கலந்துகொண்டிருந்தார். அவர் பல வர்ஷங்கள் யூனிவர்ஸிட்டி பரீக்ஷகர்களில் ஒருவராயிருந்தார். 1867-ம் வர்ஷத்தில் அவர் யூனிவர்ஸிட்டி ஸகாக்களில் ஒருவராக நியமிக்கப்பட்டார்.

1871-ம் வர்ஷத்திலும் 1894-ம் வர்ஷத்திலுமாக இரண்டு தடவைகளில் அவர் கான்வுகேஷன் அட்ரெஸ் கொடுத்தார்.

1882-ம் வர்ஷத்தில் லார்ட் ரிப்பன் ஏற்படுத்தின வித்யாவிசாரணைக் கமிஷனில் அவர் ஒரு மெம்பராயிருந்தார். கவர்ன்மெண்ட் ஸ்கூல்களல்லாத மற்ற ப்ரைவேட் ஸ்கூல்களுக்கு கவர்ன்மெண்டார் பண உதவி செய்ய வேண்டுமென்பது அவருடைய கொள்கை.

கவர்ன்மெண்டார் அவர் பொதுக்கார்யங்களில் எடுத்துக்கொண்ட ஊக்கத்தையறிந்து அவருக்கு ஸி. ஐ. இ. பட்டம் கொடுத்தார்கள். ஸ்காட்லண்டிலுள்ள அபர்டீன் யூனிவர்ஸிட்டியும், சென்னை யூனிவர்ஸிட்டியும் அவருக்கு எல். எல். டி. பட்டம் கொடுத்தார்கள். பிறகு அவர் சென்னை யூனிவர்ஸிட்டியின் வைஸ் சான்ஸலராக நியமிக்கப்பட்டார். அவர் சென்னை லெஜிஸ்லேடிவ் கௌன்ஸிலிலும் மெம்பரா யிருந்திருக்கிறார்.

1901-ம் வர்ஷத்தில் அவருடைய உருவச்சிலையொன்று சென்னையில் வைக்கப்பட்டது.

சில மிஷனரிகள் கிரிஸ்தவ மதத்தைத் தவிர வேறு எந்த மதத்திலும் மேலான கொள்கைகள் கிடையாவென்று சொல்லி மற்ற மதங்களை ரொம்ப த்வேஷிப்பதுபோல் டாக்டர் மில்லர் ஹிந்துமதத்தின்மேல் த்வேஷம் பாராட்டுவதில்லை. ஹிந்து மதத்தில் பற்பல மேலான கொள்கைகள் இருக்கின்றனவென்று அவர் அனேக தடவைகளில் சொல்லியிருக்கிறார்.

தற்காலம் டாக்டர் மில்லர் தமது ஜன்மதேசத்தில் வஸித்துவந்தபோதிலும், க்ரிஸ்டியன் காலேஜைப் பற்றிய விஷயங்களிலும், தமது பழைய மாணவர்களின் க்ஷேமத்தைப் பற்றியும் கவனம் செலுத்தி வருவதோடு, ஒவ்வொரு வர்ஷமும் காலேஜைச் சேர்ந்த புதிய மாணவர்களுக்கும் பழைய மாணவர்களுக்கும் தமது அபிப்ராயங்களையும் புத்திமதிகளையும் வெளியிட்டு ஒரு கடிதம் எழுதியனுப்பி வருகிறார். அக்கடிதங்கள் இந்தியர்கள் பலருக்கும் வாசிக்க இன்பங் கொடுத்து வருகின்றன. இவ்வளவு மேன்மை தங்கிய டாக்டர் மில்லருக்கு தீர்க்காயுஸும் தேகஸௌக்யமும் கொடுக்கும்படி ஸர்வேச்வரனை ப்ரார்த்திக்கிறோம்.

Short Stories.

சிறு கதைகள்.

A LAD'S REASONING.

ஒரு வாலிபன் வாதம்.

ஒரு அரசனிடத்தில் ஒருவிதமான கோர வ்யாதி குடிகொண்டிருந்தது. அதைப்பார்த்து தகுந்த சிகித்ஸை செய்ய ஒருவராலும் முடியவில்லை. கடைசியில், வைத்யத் தொழிலில் சிறந்த க்ரீஸ் தேசத்திலுள்ள அநேக வைத்யர்கள் ஒன்றுசேர்ந்து ஆலோசித்து குறிப்பிட்ட சில லக்ஷணங்களுள்ள மனிதனுடைய ஈரல் இந்த வ்யாதியைத் தீர்க்குமென்று சொன்னார்கள். உடனே அரசன் வைத்யர்களால் சொல்லப்பட்ட அடையாளங்கள் பொருந்திய மனிதனிருக்குமிடத்தை தேடிவாருங்களென்று தன்னிடமுள்ளவர்களுக்கு உத்தரவு செய்தான். வைத்யர்கள் கூறிய குறிப்புகளோடு கூடியவனாக ஒரு குடியானவனுடைய குமாரன் இருப்பதாகத் தெரிந்தது. அரசன் அந்தப் பிள்ளையின் பெற்றோர்களுக்கு வேண்டிய த்ரவ்யத்தைக் கொடுத்து அவர்களுடைய அநுமதியுடன் பையனை வாங்கிக்கொண்டதுமன்றி, அரசனுடைய தேக ஸௌக்யத்தையும் நன்மையையும் நோக்கி அவன் ப்ரஜைகளின் ஒருவனுடைய உயிரைப் போக்குவதில் குற்றம் யாதொன்றுமில்லையென் சட்டமும் இடங்கொடுக்கிறதென்று காஜியாரும் தீர்ப்புசெய்த

தைத்தெரிந்துகொண்டான். கொலையாளிகளும் அரசன் உத்தரவின் பேரில் அவனை கொலைக் களங் கொண்டுபோக ஆயத்தம செய்தார்கள். அப்பொழுது அவ்விளைஞன் ஆகாயத்தைஉற்று நோக்கிச் சிரித்தான். அரசன் அப்படிச் சிரித்த அவனைப்பார்த்து "இந்த ஸமயத்தில் யாராவது சிரிப்பதுண்டா? நீ ஏன் சிரித்தாய்" என்று கேட்க; பையன், "ஐயா, பிள்ளைகள் பெற்றோர களின் அன்பைச் சார்ந்தவர்கள். அது ஏதே னும் குறைந்ததானல் அதை சீர்திருத்துவது காஜியார் கடமை. அவரும நெறிதவறினுல் அதற்கு ந்யாயம் அரசனிடமிருந்துதான் கிடைக்கவேண்டும். இப்பொழுது பணத்தாசை பிடித்த பெறறோர்கள் எனதுயிரை அரசனுக்கு ஒப்படைக்க, காஜியாரும் இப்படிச் செய்வது சட்டத்திற்கு விரோதம இல்லை என்று அனுமதி கொடுத்திருக்கிறார். மூன்றாம்படியான அரசனும் தன் தேக ஸௌக்யத்தை நாடி என்னைக்கொலைசெய்யும்படி உத்தரவுகொடுத்து விட்டபடியால் இனி என் ப்ரதிவாதியான அரசனுக்கு பாதிகூலமும் எனக்கு அநுகூலமும உள்ளதான தீர்ப்புக்கிடைக்க எல்லாவற்றையும் படைததருளிய கடவுளிடதது என் மனக் குறையைத தெரிவித்துக்கொள்ளுமபடி நேர்ந் ததையிட்டுச் சிரித்தேன்" என்றான். இதைக கேட்ட அரசன் கண்களில் தணணீர ததும்ப நிரபராதியான ஒருவனைக கொல்லுவதைப் பார்க்கிலும் தானே இறந்துவிடுவது நலம என்று சொல்லி பையனுடைய தலையிலும்கண்களிலும முத்தங்கொடுத்து அவனைக்கட்டித்தழுவி அவனுக்கு வேண்டிய பொருளுதவி செய்து, கொலையி னின்றும விடுதலை செய்து அனுப்பிவிட்டான. அப்படிச் செய்தற்கு ஏறக்குறைய ஒருவாரததிற்குள் அரசனுடைய தீராநோயும தீர்ந்து விட்டதாகவும் சொல்லுகிறார்கள்.

இந்த கதையைக் கேட்கும போது நீலநதிக கரையில் ஒரு யானை மாவுத்தன் சொல்லிய வசனங்கள் சரி. அவை வருமாறு:—"உனகாலின் கீழுள்ள எறும்பின் நிலைமை இனன தென்று உனக்குத் தெரியாவிட்டால், யானையின் பாதங்களுக்கு கீழ் நீ இருந்தால் உன்கதி என்ன ஆகும எனபதைத் தெரிந்துகொள."

TRUTH WILL WIN.

தான் ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைக்கும்—முடிவில் ஸத்யமே வெல்லும்.

ஒரு காலத்தில் ஸ்ரீராமருடைய ஸேனையாட்களில் 16-பேர்கள் ராவணனுடையஸேனையாட்களில் 16-பேர்களுக்கு எதிர்ப்பட்டார்கள். அப்பொழுது ராவணனுடைய ஸேனையாட்கள் தந்த்ரத்தினல்ஸ்ரீராமருடையசேனையாட்களில் சிலரைக் கொல்லலாம என்றுகருதி, தாங்கள் சண்டை செயகிறதில்லை யென்றும, ஆனல் ஒரு ஒப்பந்தம பேசுவதாயும், அதற்கு ஸம்மதப் படவேண்டுமென்றும், அது யாதெனில்:-- இருகக்ஷிக்காரர்களும் அதாவது 32-பேர்களும் கலந்து ஒரேவரிசையாய் நிற்பதென்றும், முதலிலிருந்து எணணி வந்த 9-வது மனிதனை, அவன யாராயிருந்தாலும் சரி, கொன்று விடுகிற தென றும், இப்படியே வரிசையாய்த் திருப்பித்திருப்பி மீதியுள்ளவர்களில் எண்ணி வந்த 9-வது மனிதனைக் கொன்றுவிடுகிற தென்றும், இவ்விதமாய் 32-பேர்களுக்குள் 16-பேர்களைக் கொன்றுவிடுகிற தென்றும், ஸ்ரீராமருடைய ஸேனையாட்களுடன சொன்னார்கள். அதற்கு அவர்கள் ஸத்யமே வெல்லும என்றுசொல்லி ஒப்புக்கொண்டார்கள். ஸத்யவஸதுவானது ஷை 32-பேர்களையும அடியில்கண்டபடி நிற்கும்படி செய்துவிட்டது. ராவணனுடைய ஆட்களின பெயர்கள் () இந்த குறிப்புக் குள்ளிருப்பவை. மற்றவைகள ஸ்ரீராமருடைய ஆட்களின் பெயர்கள். ஷை ஒப்பந்தப்படி முதலிலிருந்து எண்ணி வந்த 9-வது மனிதனைக் கொனறதில் ராவணனுடைய ஆட்கள் 16 பேர்களே கொல்லப்பட்டார்கள். இது ஸத்யமே எந்த விதத்திலும் வெல்லும என்பதற்கு ஒரு த்ருஷ்டாந்தம். கொல்லப்பட்டவர்களின் பெயர்களைக் கூட்டி வாசித்தால் "பராபரத்ரோஹம்-அஹங்காரம்-சூது-வஞ்சனை-பாவம்" எனறும, கொல்லப்படாதவர்களின்பெயர்களை அவ்விதமே வாசித்தால் "தெய்வபக்தி- ஜீவகாருண்யம்- சாந்தம்-ஸத்யம-தாமம்-மோக்ஷம்"-என்றும ஏறபடுகிறது. ஆதலால் இதை வாசிப்பவர்கள் ஒவ்வொருவரும மேற்கணட ராக்ஷஸ ஸேனைகளை வதை செய்தும, ஸத்ய வஸ்துவினுடைய சேனைகளையே எப்போதும் தழுவிக்கொண்டும் இருக்கவேண்டும.

தெய்-(ப)-வ-(ரா)-(பர)-பக்-தி-(த்ரோ)-(ஹம்)-ஜீவ-(அ)-கா-(ஹங)-(கா)-ருண்-யம்-(ரம)-(சூ)-சாந-தம்-ஸத-யம-(து)-(வஞ்)-(ச)-(னை)-(பா)-தர்-மம்-(வம்)-மோ-க்ஷம.—

பி. வி. வ்யாஸராவ்.

Departmental Notes.

பகுதிக் குறிப்புகள்.

FUN AND ANECDOTE.

வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

WHAT IS NEEDED.

பாக்கி வேண்டியது.

வைத்யநாதமங்கலம் காப்பஞ்சாஸ்த்ரி ஒரு நாள் பாதாள சிரஸிலிருந்து (பாதாள-குழி-சிரஸ் - தலை - குழிதலை) மில்க்பாரஸ்டிக்கு (மில்க்-பால், பாரஸ்டு-காடு, பாலக்காடு) ப்ராமணார்த்த விஷயமாய் ப்ரயாணம் செய்துகொண்டிருக்கும்பொழுது வழியில் ஓர் பழைய குதிரைலாடத்தை கண்டெடுத்தார். அதை பத்ரமாய் மடிஸஞ்சிகையில் மடி வேஷ்டிகளோடு வைத்துக் கொண்டு பின்வருமாறு எண்ணினார்:—

"நாம் இன்று நரிமுகத்தில் விழித்தோம், நமக்கு ஒரு பழையகுதிரை லாடம் கிடைத்தது. இன்னும் ஒரு குதிரையும் மூன்று லாடமும் வாங்கினால் இப்பொழுது நடக்கவேண்டிய தில்லை. நன்றாகக் குதிரையேறி ஸவாரி செய்யலாம்".

FISHING FOR THE HORSE.

குதிரை பிடிக்கத் தூண்டில் போட்டது.

ஒரு ஐயனார் கோயிலுக்கருகில் ஒரு குளம் இருந்தது. குருவோடு அங்கு வந்த நான்கு சிஷ்யரில் ஒருவர் பல் விளக்க வந்தபொழுது கரையிலிருந்த மண் குதிரையின் ப்ரதிபிம்பம் தண்ணீரில் அலையில் உயிரோடு இருக்கும் குதிரைபோல் இருந்தது. அதைப் பிடித்தால் குருவுக்குக் கொடுக்கலாம் என்று எண்ணி எல்லாருக்கும் இந்த அத்ருஷ்டத்தைத் தெரிவித்தான். பின்பு எல்லாரும் ஒருங்குகூடி யோசித்து பின்வருமாறு யுக்தி செய்தார்கள். ஸமீபத்தில் கிடந்த மூங்கிலைத் தூண்டில் கோலாகவும், எல்லாருடைய வேஷ்டிகளையும் ஒன்றாக முடிந்து தூண்டில் கயிறாகவும், ஒரு அரிவாளை கொக்கியாகவும், தாங்கள் கொண்டுவந்த கட்டு சோற்றை இரையாகவும் கட்டிப் போட்டு ஐந்து பேரும் குதிரையை யிழுக்க காத்திருந்தார்கள். குளத்திலிருந்த மீன்கள் சோற்றைத் தின்று விட்டன. அரிவாள் எங்கேயோ மாட்டிக் கொண்டு இழுக்கமுடியாமல் வேஷ்டிகள் அறுந்தன. பிறகு அவர்கள் இவ்வளவு முரட்டுக் குதிரை தங்களுக்கு வேண்டாம் என்று வந்துவிட்டார்கள்.

INTERRUPTED.

தடுத்துவிட்டது.

மாஜிஸ்ட்ரேட்:—இந்தக் கேஸைக் கோர்ட்டுக்கு வராமலே தீர்த்துக் கொள்ளக் கூடாதா?

குற்றவாளி:—ஒரு விதமாக தீர்த்துக் கொள்வதாகத்தான் இருந்தோம். போலீஸ் காரர்கள் தான் நடுவில் வந்து தடுத்துவிட்டார்கள்.

ACCIDENTS WHEN OFF DUTY.

வேலையில்லாதபோது நேர்ந்த விபத்துகள்.

வேலைக்காரன்:—ஐயா, தயவு செய்து எனக்கு ப்ரொமோஷன் (சம்பள உயர்வு) கொடுக்கும்படி வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகிறேன். ஸமீபத்தில் தான் எனக்குக் கல்யாணமாயிற்று.

மானேஜர்:— சம்பளம் அதிகம் கொடுப்பதற்கில்லாமலிருப்பதைப் பற்றி வருத்தப் படுகிறேன். வேலையிலில்லாமல் லீவில் போயிருந்தபோது ஏதாவது கெடுதிகள் நேரிட்டால் அதற்குக் கம்பெனி ஜவாப்தாரியாகாது.

WIVES, BE CAREFUL!

மனைவிமார்களே, ஜாக்ரதை!

ஆபீஸிலிருந்து வந்த புருஷனைப் பார்த்து மனைவி, வருத்தத்துடன், "எனது வைரமோதிரத்தைக் காணோம். நீங்கள் எங்கேயாவது பார்த்தீர்களோ. காலை முதல் இருக்குமிடம் தெரியவில்லை."

"பத்ரமாயிருக்கிறது. எனது பணப்பையில் கிடந்தது."

CURIOSITIES.
விநோதங்கள்.

RAIN OF STONES.
கல்மழை.

பாட்டிகள் சொல்லும் கதைகளில் கல்மாரி, மண்மாரி, நீர்மாரி, நெருப்புமாரி முதலிய மழைகள் முற்காலத்தில் பெய்தனவென்று அறிவிப்பார்கள். அவைகளைச் சிறுவர்கள் பொய்யென்று பரிஹஸிப்பது வழக்கம். தற்காலம் மலையாளத்தில் கல்மழைபெய்ததாக ஸமாசாரம் எட்டியிருக்கிறது. இந்தமாஸ ஆரம்பத்தில் மலையாளத்தில் கார்லைவேளையில் வானத்தில் ஓர்பயங்கரமான இரைச்சல் உண்டாயிற்று. ஜனங்கள் இடியென்றும், குமரலென்றும், வெடியென்றும் கூடிக்கூடி தங்கள் அபிப்ராயங்களை வெளியிட்டுக் கொண்டிருந்தார்கள். பொன்னணி, குட்டிபுரம், திருரூர், அங்காடி திட்டூர், தென்மலையாளம் முதலிய இடங்களில் கற்கள் வானத்திலிருந்து விழுந்தன. பூமியில் பட்டதும் ஸுமார் ஆறடி ஆழம் மண்குழி தெரிந்தது. படீர் படீரென்று விழுந்த கற்கள் நிலத்தை அணுகினவுடன் துண்டம்துண்டமாய்ச்சிதறின. விழுந்த கற்களில் சிலபாகம் சென்னை பொருள்காட்சி சாலைக்கு அனுப்பப்படுமென்று தெரிகிறது.—ஹிதகாரிணி.

A STRANGE MARRIAGE CUSTOM.
ஒரு நூதன கல்யாண வழக்கம்.

ஸைபீரியா தேசத்தின் சிலபாகங்களில் மாப்பிள்ளையும் பெண்ணும் கோவிலில் போய் கல்யாணம் செய்து கொண்டு வீட்டுக்கு வந்தவுடன் மாப்பிள்ளை பெண்ணைபார்த்து அவளுடைய ஜோட்டைக் கழற்றும்படி சொல்லுவானாம். ஒரு ஜோட்டிற்குள் ஒரு சிறிய சவுக்கும், இன்னொரு ஜோட்டிற்குள் பணப்பையும் வைக்கப்பட்டிருக்கும். பெண் முதலில் பணப்பையுள்ள ஜோட்டைக் கழற்றினால் ஸ்த்ரீபுருஷர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் அந்யோந்யமாய் இருப்பார்களென்றும், சவுக்குள்ள ஜோட்டைக் கழற்றினால் இருவரும் சண்டை சச்சரவுட னிருப்பார்க ளென்றும் சொல்லுவார்கள். பெண்ணின்மேல் அனபுள்ள புருஷன் இரண்டு ஜோடுகளிலும் பணப்பைகளை ஒருவர்க்குந் தெரியாமல் முன்னாலேயே போட்டுவைத்துவிடுவானாம்.

A BIG CANDLE.
ஒரு பெரிய மெழுகுவர்த்தி.

ரோமிலுள்ள ஸெண்ட் பீடர்ஸ் சர்ச் என்னும் பெரிய கோவிலில் பெரிய மெழுகுவர்த்தி யொன்று உபயோகிக்கப் போகிறார்கள். அது 16-அடி உயரமும் 400-ராத்தல் நிறையுமுள்ளது. அதைச் செய்வதற்கு 4500-ரூபாய்செலவாயிற்று. அதை அணைக்காமல் தொடர்ச்சியாய் எரியவிட்டால் 3000 - நாள் எரியுமாம் அதாவது 8-வர்ஷத்துக்குமேலும் எரியுமாம். ஆனால் அதை விசேஷநாட்களில் தான் ஏற்றிவைப்பார்களாம். சென்றவர்ஷம் இட்டலியிலுள்ள ஒரு ஸங்கீத வித்வான் தனக்கு தொண்டை வ்யாதியால் சாரீரம் கெட்டுப்போனதால் ஸெண்ட் ப்ளேய்ஸ் என்னும் தேவதைக்கு ஆராதனை செய்து வந்தார். அவருக்கு வ்யாதி ஸ்வஸ்தமாகி சாரீரம சரியான நிலைமைக்கு வந்துவிடவே அவர் பெரிய மெழுகுவர்த்தி யொன்று செய்து காதலிக் க்ரிஸ்தவர்களின் லோக குருவாகிய போப் வஸிக்கும் அரண்மனையில் ஏற்றிவைக்கக் கொடுத்திருக்கிறார். அது நான்கு வர்ஷகாலம் சேர்ந்தாற்போல் விடாமல் எரியக்கூடுமாம். அது இப்போது அரண்மனையில் எரிந்துகொண் டிருக்கிறது. அதை ஒருநாளும் அணைக்கமாட்டார்களாம்.

THE WEDDING RING.
கல்யாண மோதிரம்

இங்க்லண்டிலுள்ள ஒரு ஸ்த்ரீ தனக்குக் கையில்லாததால் தனது கல்யாண மோதிரத்தைத் தனது கால்விரலிலொன்றில் போட்டுக்கொண்டிருக்கிறாளாம். அவள் தனது கால் விரல்களால் நேர்த்தியாய் எழுதுகிறாளாம்.

HINTS AND RECIPES.

யுக்திகளும் முறைகளும்.

TO PRESERVE GRAPES.

பச்சை த்ராட்சையை காப்பாற்றும் விதம்.

பச்சை த்ராட்சைப் பழங்களை கோடையின் வெப்பம் தணிப்பதற்காக விசேஷமாக உபயோகப்படுத்தி வருகிறார்கள். இப்பழங்கள் சில நாட்களில் அழுக ஆரம்பித்து விடுகின்றன. இவைகளை அழுகாமல் கொஞ்ச காலம் காப்பாற்ற வேண்டுமானால், அவைகளை காற்றோட்டமான அலமாரிகளில் வைக்கவேண்டும். அப்படி வைப்பதற்குமுன் அலமாரிகளின் பலகையின்பேரில் ஒரு விரல் கனம் நீற்றுப்போன சுண்ணாம்பையாவது சீமைச்சுண்ணாம்பு தூளையாவது பரப்பி அதன்பேரில் ஒரு ஸல்லாத் துணியை விரித்து அதன்மேல் பழங்களைப் பரப்பவேண்டும். இந்த முறையைக் கையாளுவதால் அப்பழங்கள் சீக்ரம் கெடுவதில்லையாம்.

LONG ENVELOPES

நீளமான' என்வலப்'புகள்.

பெரிய கடிதங்கள், படங்கள் முதலியவைகளை யனுப்ப நீளமான 'என்வலப்' அதாவது தபால் 'கவர்கள்' அகப்படாவிட்டால், சிறிய 'என்வலப்புகளையெடுத்துக்கொண்டு ஒரு 'என்வலப்'பின் வலது ஓரத்தையும், இன்னொரு 'என்வலப்'பின் இடது ஓரத்தையும் கிழித்து ஒன்றுக்குள் ஒன்றைவைத்து ஒட்டிவிடவேண்டும். இப்படி எத்தனை 'என்வலப்'புகளை வேண்டுமென்றாலும் உபயோகித்து நீளமான 'என்வலப்பு' கள் செய்துகொள்ளலாம்.

KEEPING COOL.

தேகத்தைக் குளிரச்செய்ய.

கோடைகாலத்தில் தேகம் குளிர்ச்சியாக இருக்கவேண்டுமானால் குளிர்ந்த ஜலத்தை மணிக்கட்டுகளில் இரண்டு நிமிஷநேரம் விட்டுக்கொண்டே யிருந்தால் தேகம் ரொம்பு குளிர்ச்சியடையுமாம். குழாய் ஜலம் ஸப்ளையுள்ள இடங்களில் குழாயைத் திறந்து ஜலம் மணிக்கட்டுகளின்மேல் விழும்படி செய்யலாம்.

FIRST AID IN EPILEPSY

காக்கை வலியில் உடனே செய்யவேண்டிய காரியம்.

வலி உண்டாகும்போது அந்த ரோகியின் உடம்பில் உடை முதலியவற்றின் கட்டுகளை அவிழ்த்து விடவேண்டும்; அதிலும், கழுத்திலும் வயிற்றிலும் துணி முதலியவை சுற்றிக்கொள்ளாமலிருக்கும்படி கவனிப்பது அவச்யம். நவச்சாரம் சுண்ணாம்பு இவற்றைக் கலந்து இதன் காரமான வாஸனையை மூக்கில் காட்டலாம். முகத்தின்மேல்குளிர்ந்தஜலத்தை தெளிக்க வேண்டும். நெற்றியின்மேல் ஈதர் என்கிற த்ராவகத்தையாவது பன்னீரையாவது அடிக்கடித் தேய்க்கவும். ரோகிக்கு விழுங்குவதற்குச் சிறிது சக்திவந்ததும், ப்ராந்தியும் குளிர்ந்தஜலமும் கலந்து சிறிதளவு கொடுக்கவேண்டும். நன்றாக மூச்சுவிடுவதற்குத தகுந்த ஸௌகர்யங்களைச் செய்யவும்.

PRESERVING EGGS.

முட்டைகளை கெட்டுப்போகாமல் வைத்திருக்க.

முட்டைகளைக் கெட்டுப்போகாமல் அதிக நாள் இருக்கும்படி செய்ய ஒரு ஸுலபமான வழியிருக்கிறது. 4-பாகம் நன்றாய்த் தாளித்த சுண்ணாம்பை 20-பாகம் ஜலததில் கரைத்துக்கொள்ள வேண்டும். தினம் இரண்டு மூன்று தடவை விதம் ஒரு வாரம் கலக்கிக்கொண்டிருக்கவேண்டும். நாலாம் நாள் 1-பாகம் உப்பு சேர்க்கவேண்டும். வாரக் கடைசியில் ஜலத்தைத் தெளியவிட்டு, தெளிந்த ஜலத்தை எடுத்துக்கொண்டு, ஜாடிகளில் முட்டைகளை வைத்து, இந்தத் தெளிந்த ஜலத்தை முட்டைகள் ஜலத்தில் அமிழ்ந்திருக்கும்படி ஜாடியில் ஊற்றவேண்டும். இதனால் முட்டைகள் கெடுதலடையாமல் இருக்கின்றன. முட்டைகளை இட்டவுடன் இந்த மாதிரி செய்யவேண்டும்.

TAMIL LITERATURE.

தமிழ்க் கல்வி.

PHONETIC SPELLING.

சப்தத்திற் சேற்றபடி எழுதுதல்.

இவ்விஷயத்தைப் பற்றி 'சுதேச மித்திரன்' பத்திரிகையில ஒரு . நிருபர் சில அபிப்ராயங்கள் தெரிவித்திருக்கிறார். தற்காலம் இங்கிலீஷ் பாஷையிலிருந்து அநேகம் வார்த்தைகள் தமிழில் கலந்து உபயோகிக்கப் படுகின்றன. ஆனால் அவைகளின் உச்சரிப்பு சரியாயில்லை. அநேக வார்த்தைகள் சாஸ்த்ர ஸம்பந்தமாயும் தொழில் ஸம்பந்தமாயும் ஸாதாரண அநுஷ்டானத்துக்கு வரும் போது அவைகளின் சரியான உச்சரிப்பு விஷயமாகப் போதுமான ஜாக்ரதை யெடுத்துக்கொள்ளாவிட்டால் பலவிதங்களில் அசௌகர்ய முண்டாகக் கூடும். மேலும் அன்ய வார்த்தைகளை சரியானபடி உச்சரிக்காவிட்டால் நமக்குப் பெருமைக் குறைவும் ஏற்படக் கூடுமென்று அவர் சொல்கிறார்.

Benefit fund - பெனிபிட் பண்ட், Platform ப்ளாட்பாரம், Director - டிரெக்டா, Bill - பில், Office - ஆபீஸ், Coffee - காபி Traffic-ட்ராபிக், Faraday-பாரடே, Balfour-பால்பர், Phosphorus - பாஸ்பரஸ், Ozone-ஓஸோன்.

மேலேகண்ட வார்த்தைகளில் f, b, d, z, முதலிய இங்கலீஷ் எழுத்துக்களின் உச்சரிப்பை தமிழ்ப்பாஷையில் நாம் உபயோகப்படுத்திவரும் எழுததுகள் சரியாக அறிவிக்காததால் வார்த்தைகளுக்கே ஆபாஸம் உண்டாகிறது. இதைச் சீர்ப்படுத்துவதற்கு சில இங்கிலீஷ் அக்ஷரங்களை நமது தமிழ் எழுத்துக்களுடன் சேர்த்துக் கொள்வதே போதுமானதா யிருக்கிறது. இது நூதன வழக்கமு மாகாது. ஸம்ஸ்க்ருத பாஷையைச் சேர்ந்தவைகளாகிய ஜ, ஸ, ஷ, ஹ, க்ஷ ஆகிய எழுத்துக்கள் இப்போது தமிழில் வழக்கத்திலிருந்து வருகின்றன. அது போலவே இங்க்லீஷ் எழுத்துக்களிலும சில வற்றைச் சேர்த்துக் கொள்வது எவ்விதத்திலும் ஆபாஸமாகாது. இவைகளில் h, b, d, g, முதலிய எழுத்துக்களை வேண்டுமானால் ஸம்ஸ்க்ருதத்தி லிருந்து எடுத்துக்கொள்ளலாம், cat, bat, ஆகிய வார்த்தைகளில் உள்ள a-யின் சப்தத்துக்கு வேண்டிய எழுத்துத் தமிழில் இல்லாததால் a-என்னும் எழுத்தையும், f, z, என்னும் எழுத்துக்களையும் தமிழில் அவைகளுக் கேற்பட்டுள்ள வடிவத்துடன் சேர்த்துக் கொள்ள வேண்டும்.—என்றிப்படித் தமது அபிப்ராயத்தைத் தெரிவித்திருக்கிறார்.

கொஞ்ச காலத்துக்கு முன்னால் கலாசாலைகளில் எப்படிப்பட்ட தமிழ்வசன நடை உபயோகிக்க வேண்டு மென்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்து முடிவு பண்ண ஒருகமிட்டி நியமிக்கப்பட்டது. அந்தக் கமிட்டியில் அன்யபாஷைகளைத் தமிழில் எப்படி எழுதுவது என்பதைப் பற்றி ஒரு தீர்மானம் செய்திருக்கிறார்கள். அதாவது அன்யபாஷைகளைத் தமிழில் எழுதும்போது தமிழில் தக்க எழுத்துக்கள் இல்லாமல் போனால் க்ரந்த எழுத்துக்களை உபயோகிக்கலாம். f, z, என்னும் எழுத்துக்களுக்கு ப, ஸ, என்னும் எழுத்துக்களை உருவத்தில் சிறிது மாற்றி உபயோகிக்கலாம், என்றிப்படித் தீர்மானித்திருக்கிறார்கள். இந்தக் கமிட்டியில் பல தமிழ் வித்வன்னர்கள் மெம்பர்களாக இருந்தார்களாதலால் அதனுடைய தீர்மானத்தைப் பின்பற்றுவது நல்லது. f, z, முதலிய இங்க்லீஷ் எழுத்துக்களை அப்படியே உபயோகிப்பதென்பது சரியல்ல. ஸம்ஸ்க்ருத எழுத்துக்களை தமிழில் எழுதும்போது தேவநாகர எழுததுக்களில் எழுதாமல், தமிழுக்கு அதிக ஒற்றுமை யுள்ளதாக இருக்கும க்ரந்த எழுத்துக்களில் எழுதுவதுபோல, இங்க்லீஷ் எழுத்துக்களுக்கும் மேற்சொன்ன கமிட்டியார் தீர்மானித்தபடி வேறு எழுத்துக்கள் ஏற்படுத்திக் கொள்வதே சரி. cat, bat முதலிய வார்த்தைகளில் உள்ள a (அ) சப்தத்தைக் காட்ட a- என்னும் எழுத்தை அதே உருவத்தோடு உபயோகிக்கக் கூடாதென்பதற்கும் மேற்குறித்த காரணம் போதுமானது. மேலும் a- என்னும் எழுத்துக்கு Cat, far, fall, fate - என்னும் வார்த்தைகளிலுள்ளபடி பல உச்சாரணங்களிருப்பதாலும் அந்த எழுத்தை அப்படியே உபயோகிப்பதற்கில்லை.

எம், எஸ், கே,

DIARY OF THE MONTH.

மாஸ வர்த்தமானம்.

INDIAN NEWS.

இந்திய நாட்டு ஸமாசாரங்கள்.

ஏப்ரல்மீ 20-தேதி.

சிறகு ஏற்றுமதி :—அன்ய தேசங்களுக்கு திருட்டுத்தனமாய் ஏற்றுமதி செய்வதற்காக கல்கத்தாத் துறைமுகத்துக்குக் கொண்டுவரப் பட்ட 25 பெட்டி சிறகுகளை துறைமுக அதிகாரிகள் கண்டுபிடித்து ஏற்றுமதி செய்ய விடாமல் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். பெட்டிகளிலிருந்த சிறகுகள் ஏற்றுமதி செய்யக்கூடாதென்று விலக்கப்பட்டவை. அவைகளின் மதிப்பு 3 லக்ஷம் ரூபாயாம். அவைகளை ஏற்றுமதி செய்ய முயன்றவர்களை ப்ராஸிக்யூட் செய்யப் போகிறார்கள்.

பாரிட்பூர் ஸதியாலோசனைக் கேஸ்:—பாரிட்பூர் ஸதியாலோஸனைக் கேஸில் கொள்ளையடிப்பதற்காக ஸதியாலோசனை செய்தார்கள் என்று 32 பேர் குற்றஞ் சாட்டப்பட்டார்கள். அவர்களில் முதலில் 8-பேர் விடுதலை செய்யப் பட்டார்கள். ஒருவன் அப்ரூவராக மாறினான். பாக்கி 23-பேரின் மேலும் கேஸ் நடந்துவந்தது. அவர்களின்மேல் தக்க ஸாக்ஷ்யமில்லாததால் கவர்ன்மெண்டார் கேஸை வாபஸு வாங்கிக்கொண்டு குற்றவாளிகளை விடுதலை செய்துவிட்டார்கள்.

21-தேதி.

மத்ய மாகாணத்தில் ஒரு ஸபை:—சென்னை, வங்காளம், பேஹார், அயோத்யை முதலிய இடங்களில் நிலஸ்வான்கள் ஸங்கங்கள் இருப்பதுபோல மத்யமாகாணங்களிலும் ஒரு நிலஸ்வான்கள் ஸங்கம் ஏற்படுத்துவதாக உத்தேசித்திருக்கிறார்கள். தேசத்தின் க்ஷேமத்துக்காக கவர்ன்மெண்டாரோடு ஒத்து உழைப்பதும், பொதுஜனக் கார்யங்களைப் பற்றி கவனிப்பதும், பொதுவாய் நிலஸ்வான்களின் க்ஷேமத்தைப்பற்றி கவனிப்பதும் மேற்படி ஸங்கத்தின் முக்ய நோக்கங்களாகும்.

நிஜாமின் நன்கொடை:—பால்கன் யுத்தத்தில் நேர்ந்த விபத்துகளால் கஷ்டப்படும் மகமதியர்களின் உதவிக்காக நிஜாம் அரசர் 30,000 ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறார்.

23-தேதி.

கல்கத்தாவில் தற்கொலைகள்.—கல்கத்தாவில் சிலகாலமாய் வ்யாதியாயிருந்த ஒரு ஜமீன்தார் 22-தேதி யன்று இரவு 1-மணி ஸுமாருக்கு இறந்துபோனார். அவருடைய மனைவி அவருடைய மரணத்தை ஸகியாதவளாய், எல்லோரும் இறந்தவரைப் பற்றி கவனித்துக்கொண்டிருந்தபோது, வீட்டில் ஓர் தனியான இடத்துக்குப் போய் மேலே கெரஸின் எண்ணெயை ஊற்றிக்கொண்டு நெருப்பு வைத்துக் கொண்டாள். அவளுடைய பந்துக்களுக்கு இவ்விஷயம் தெரிந்து அவளைக் காப்பாற்ற வருவதற்குள் அவள் ப்ரக்ஞை தப்பி யிறந்து போய்விட்டாள்.

தனது புருஷனுடன் சண்டைப்பட்டுக் கொண்டிருந்த ஒரு வாலிப ஸ்திரீ தனது தேகத்துக்கு நெருப்பு வைத்துக்கொண்டு இறந்து போனாள்.

தனது மனைவி யிறந்ததை ஸகியாத ஒரு வாலிபன் ஒரு வர்ஷகாலமாய் துக்கப்பட்டுக் கொண்டிருந்து இன்றையதினம் கெரஸின் எண்ணெயை மேலே ஊற்றி நெருப்பு வைத்துக்கொண்டு இறந்துபோய்விட்டான்.

26-தேதி.

பம்பாய் ப்ரோவின்ஷல் கான்பரென்ஸ்.—ஆறு வர்ஷகாலமாய் நின்று போயிருந்த பம்பாய் ப்ரொவின்ஷல் கான்பரென்ஸ் இன்றைய

தினம் ஸ்டாராவில் கூடிற்று. ஆனரபிள் மிஸ்டர் பெல்வி ப்ரெஸிடெண்டாக இருந்தார். இந்தக் கான்பரென்ஸ் காங்க்ரெஸின் அமைப்பை ஏற்றுக்கொள்ளாமல் தனி ஸபையாக நடைபெற்றது.

27-தேதி.

மதராஸ் ஹைகோர்ட்.—சென்னை ஹைகோர்ட்டில் வேலை அதிகமாயிருப்பதால் கவர்ன்மெண்ட் ப்ளீடர் மிஸ்டர் வி. எப். நேபியரையும், தஞ்சை டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜாகிய திவான் பகதூர் குமாரஸாமி சாஸ்த்ரியையும் இந்தியா கவர்ன்மெண்டார் டெம்பரரி ஜட்ஜுகளாக நியமித்திருக்கிறார்கள்.

28-தேதி.

போலீஸ் அதிகாரிகளுக்கு இங்க்லண்டில் பயிற்சி.—பேஹார் போலீஸ் டிபார்ட்மெண்டைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் ஆர். கே. முகர்ஜியானவர் லண்டனிலுள்ள ஸ்காட்லண்ட் யார்ட் என்னும் போலீஸ் ஸ்டேஷனில் துப்பறியும் தொழிலில் பயிற்சியடைவதற்காக ஸர்க்கார் செலவில் இங்க்லண்டுக்குப் போகிறார். கல்கத்தா போலீஸிலிருந்தும் ஒரு உத்யோகஸ்தர் ஸ்காட்லண்ட் யார்ட் போலீஸ் ஸ்டேஷனில் பயிற்சி யடைவதற்காக அனுப்பப்படுவாரென்று தெரிகிறது.

30-தேதி.

இந்திய வேலையாட்களுக்கு க்ராக்கி.—மொரிஷஸ் (மோர்சு) தீவின் கவர்ன்மெண்டார் புதிதாக பாசன வேலைகள் ஆரம்பிக்கப்போகிறார்கள். அதற்கு இந்தியக் கூலியாட்களை வேண்டிய மட்டும தருவித்துக் கொள்ள வேண்டுமென்று ஆவலா யிருக்கிறார்கள்.

மேமாஸம் 2-தேதி.

விவஸாயத்தில் ஆராய்ச்சி.—பஞ்சாப் கவர்ன்மெண்டார் விவஸாயத்தில் ஆராய்ச்சிகள் செய்ய முன்வரும ஒரு மாணவருக்கு மாஸம் 60 ரூபாய்விதம் ஸ்காலர்ஷிப்புக் கொடுப்பதாக தீர்மானித்திருக்கிறார்கள். அந்த மாணவர் பஞ்சாப் விவஸாயக்காலேஜில் படித்துத் தேறியிருக்கவேண்டும்.

4-தேதி.

மாணவர்களும் அராஜகமும்.—லாகூரில் காலேஜுகளின் ப்ரின்ஸிபால்கள் ஒரு கான்பரென்ஸ்கூடி மாணவர்களுக்குள் ராஜத்ரோகமான பத்ரிகைகளும் புஸ்தகங்களும் பரவுவதைத் தடுப்பதற்கு வேண்டிய முயற்சிகள் செய்வதைப்பற்றி ஆலோசித்ததாக ஸமாசார மெட்டியிருக்கிறது.

ஒரு புது கப்பல் கம்பெனி.—ரங்கூனில் ஒரு புதிய ஸ்வதேசகப்பல் கம்பெனி ஸ்தாபிக்கப் போகிறார்கள். இதற்கு கப்பல் வ்யாபார விஷயங்களில் ரொம்பப்பழக்க முள்ள ஒரு ஜப்பானியர் தலைவராக இருப்பாராம். இதற்கு அநேக இந்தியர்கள் உதவியாக இருப்பார்கள். இது பி. ஐ. எஸ். என். கம்பெனிக்குப் போட்டியாக நடத்தப்படும்.

5-தேதி.

புரோகிதர்களுக்கு ஒரு சட்டம்.—புரோகிதர்கள் தங்கள் தொழிலில் ப்ரவர்த்திக்கு முன் ஒரு பரீக்ஷையில்தேறியிருக்கவேண்டுமென்று பரோடாவில் ஒரு சட்டம் செய்யப் போகிறார்களாம். பொது ஜன அபிப்ராயம் இதற்கு விரோதமாயிருக்கிறது.

7-தேதி.

பேஹாரின் ராஜதானி பட்டணம்.—பேஹார் ஒரிஸா மாகாணத்து கவர்ன்மெண்டுக்கு ராஜதானிப்பட்டணம கட்ட 105 லக்ஷம் ரூபாய் பிடிக்குமாம. இதற்காகத் தயாரித்திருந்த எஸ்டிமேட்டுகளுக்கு இந்தியாமந்திரி ஸம்மதம் கொடுத்து விட்டார்.

9-தேதி.

பம்பாயில் ஒரு கவர்ன்மெண்ட் பத்ரிகை.—பம்பாய் கவர்ன்மெண்டார் ப்ரசுரம் செய்யும் ரிபோர்ட்டுகள், தீர்மானங்கள், ப்ரெஸ் நோட்

டுகள் முதலியவைகளைப்பற்றி பொது ஜனங்கள் நன்றாயறிந்து கொள்வதற்காக, கவர்ன்மெண்டார் ஒரு புதுப்பத்ரிகை ப்ரசுரம் செய்திருக்கிறார்கள். கவர்ன்மெண்ட் ப்ரசுரங்களின் ஸாராம்சங்கள் அதில் ப்ரசுரமாகும். முக்யமான விஷயங்களைப்பற்றி விவரமான குறிப்புகள் எழுதப்படும். அது மூன்று மாஸத்துக்கு ஒரு தடவை ப்ரசுரமாகும்.

10-தேதி.

மதுரைக் கால்நடைக்காட்சி.—மதுரைக்கால்நடைக்காட்சி இன்றையதினம் நடைபெற்றது. ஆனரபிள் மிஸ்டர் வி. ராமபத்ர நாயுடு காட்சியைத் திறந்துவைத்து கால்நடை விஷயங்களைப்பற்றி விஸ்தாரமாய்ப் பேசினர்.

11-தேதி.

திருவாங்கூர்.—திருவாங்கூர் ஸமஸ்தானத்துக்கு திவானாயிருந்த திவான்பகதூர் பி. ராஜகோபாலாச்சாரியார் தமது உத்யோகத்தினின்று விலகிக்கொண்டதால் அவருக்கு பதிலாக திருவாங்கூர் சீப் ஜட்ஜாக இருந்தமிஸ்டர் க்ருஷ்ணன் நாயர் திவானாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

13-தேதி.

பம்பாய் தீ விபத்துகள்.—கொஞ்சகாலமாக பம்பாயில் பஞ்சாலைகளில் நெருப்புப் பிடித்தபோது முனிஸிபல் பையர் ப்ரிகேட் என்னும் நெருப்பணைக்கும் வ்யக்திகள் நெருப்புகளையவிப்பதில் ரொம்ப பாடுபட்டதற்காக பொதுஜனங்கள் அவர்களுக்கு ஒருமாஸத்துச் சம்பளம் இனாம் செய்வதாக உத்தேசித்திருக்கிறார்கள்.

14-தேதி.

விசாகப்பட்டணம் ஜில்லா கான்பரேன்ஸ்.—விசாகப்பட்டணம் ஜில்லா கான்பரென்ஸ் இன்றையதினம் கூடிற்று. மிஸ்டர் பி. வெங்கடபதி ராஜு அதன் ப்ரெஸிடெண்டாக இருந்து, இந்தியர்களின் வறுமை, ஆந்த்ரக் கிளர்ச்சி, கல்வி, விசாகப்பட்டணம் துறைமுகம், லோகல் போர்டுகள், அராஜகம் முதலியவைகளைப் பற்றிப்பேசினர்.

15-தேதி.

திருவாங்கூர் ஹைகோர்ட்.—திருவாங்கூர் ஹைகோர்ட்டில் இரண்டாவது ஜட்ஜாக இருந்த மிஸ்டர் ஹண்ட் சீப் ஜட்ஜாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கோவாபரேடிவ் கான்பரென்ஸ்.—கோயமபுத்தூர் ஸர்க்கிள் கோவாபரெடிவ் கான்பரென்ஸ் இன்றையதினம் கள்ளிக்கோட்டையில் கூடிற்று. ரெவினியூ போர்ட் மெம்பராகிய ஆனரபிள் மிஸ்டர் பக்ளி ப்ரெஸிடெண்டாக இருந்தார். அநேக வ்யாஸங்கள் வாசிக்கப்பட்டன.

16-தேதி.—

மதுரைத் தமிழ் ஸங்கம்.—இன்றையதினம் மதுரைத் தமிழ்ஸங்கத்தின் வருஷாந்திரக்கூட்டம் ராமநாதபுரத்தில் நடைபெற்றது. ஸிலோன் அட்வகேட் ஜெனரலாகிய ஆனரபிள் மிஸ்டர். பி. ராமநாதன் ப்ரெஸிடெண்டாக இருந்தார்.

விசாகப்பட்டணம் ஸோஷல் கான்பரென்ஸ்:—இன்று விசாகப்பட்டணம் ஸோஷல் கான்பரென்ஸில் கல்யாண வயதை உயர்த்தவேண்டுமென்றும், ருதுமதியானபின் விவாகம் செய்யவேண்டுமென்றும், வரசுல்கத்தையும் கன்யா சுல்கத்தையும் ஒழித்துவிடவேண்டுமென்றும், தாழ்ந்த ஜாதிகளின் நிலைமையை உயர்த்த முயற்சிகள் செய்யவேண்டுமென்றும், ஜாதிகளின் உட்பிரிவுகள் ஒன்று சேரவேண்டுமென்றும், ஸமபந்தி போஜனம் செய்வதில் த்ருஷ்டிதோஷம் கிடையாதென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன. வேறு சில தீர்மானங்களும் செய்யப்பட்டன.

20-தேதி.

கண்ணம்பாடித் தேக்கம்.—மைஸூர் கவர்ன்

மெண்டார் விவஸாயத்துக்கு உபயோகிப்பதற்காக காவேரியில் ஒரு அணைகட்டி ஒரு தேக்கம் கட்டுவது விஷயமாக சென்னை கவர்ன்மெண்டுக்கும் மைஸூர் கவர்ன்மெண்டுக்கும் இருந்த தகராரைப் பற்றி ஒரு மத்யஸ்த போர்டு சில காலமாக விசாரணை செய்துவந்தது. அந்த மத்யஸ்த போர்டார் மைஸூருக்கு ஸாதகமாக தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்க ளென்று தெரிகிறது.

23-தேதி.

ஸ்கூல் பைனல் பரீக்ஷை.—மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்கு பதிலாக ஸ்கூல் பைனல் பரீக்ஷை ஏற்படுத்துவதைப்பற்றி பரிசீலனை செய்யும்படி வடமேற்கு எல்லை மகாணகவர்ன்மெண்டார பஞ்சாப் யூனிவர்ஸிட்டியை கேட்டு விட்டிருந்தார்கள். பஞ்சாப் யூனிவர்ஸிட்டியார் ஸிண்டிகேட்டை பரிசீலனைசெய்யும்படிசொல்ல, ஸிண்டிகேட்டார் ஒரு ஸப்கமிட்டியை நியமித்தார்கள், ஸப்கமிட்டி அதைப்பற்றி பரிசீலனை செய்ததில், ஸ்கூல்பைனல் பரீக்ஷை நல்லதல்ல வென்று அபிப்ராயம் தெரிவித்திருக்கிறது.

25-தேதி.

ஆர்னி ஜாகீர்தார் கேஸ்.— ஆர்னி ஜாகிர்தார் பாகலூரில தமது மோட்டாரில் போய்க்கொண்டிருந்தபோது, மோட்டார் வண்டி ஒரு மாட்டு வண்டிமேல் மோதி, வண்டிக்காரனையும் மாட்டையும் கொன்றுவிட்டது அதற்காக அவர்மேல் கேஸ் தொடரப்பட்டதில் அவருக்கு 800 ரூபாய் அபராதம் போடப்பட்டது.

பம்பாயில் தீ விபத்து.—இன்றையதினம் பம்பாயில் ஒரு பருத்திக்கிடங்கு தீப் பிடித்து நாசமாயிற்று. இதில் ஏற்பட்ட நஷ்டம் 15 லக்ஷம் ரூபாயிருக்கு மென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த விபத்து இந்த வர்ஷத்துக்கு 36-வது தீ விபத்தாகும். இது வரையில் நேர்ந்த தீவிபத்துக்களால் நேர்ந்த நஷ்டம் 82 லக்ஷம் ரூபாயாம்.

FOREIGN NEWS.

அந்ய நாட்டு ஸமாசாரங்கள்.

ஏப்ரல்மீ 19-தேதி.

ப்ரிட்டிஷ் கப்பல்களில் ஆசியா வாஸிகள்.—லண்டனிலுள்ள கப்பல் வேலையாட்களின் ஸங்கம் ஒன்று, ப்ரிட்டிஷ் கப்பல்களில் ஆசியா வாஸிகளை வேலைக்கு எடுத்துக்கொள்வதை ஆக்ஷேபித்து ஒரு தீர்மானம் செய்திருக்கிறது. ப்ரிட்டிஷ் கப்பல்காரர்கள் இவர்களுடைய தீர்மானத்துக் கிணங்காவிட்டால் ஸங்கத்தைச்சேர்ந்தவர்கள் முன்னெச்சரிக்கை செய்யாமலே, வேலைக்குப் போகாமல் நின்றுவிடுவார்களாம்.

21-தேதி.

ஜார்ஜ் அரசரின் ப்ரான்ஸ் ப்ரயாணம். —ஜார்ஜ் அரசரும், மேரிராணியும் ப்ரான்ஸுக்குப் போவதற்காக லண்டனிலுள்ள விக்டோரியா ஸ்டேஷனைவிட்டுப் புறப்பட்டு டோவருக்குப்போய் அங்கே கப்பலேறி ப்ரான்ஸிலுள்ள கலேயுக்குப் போய்ச்சேர்ந்தார்கள். கப்பலில் ப்ரயாணமானபோது ஆகாயக் கப்பல்கள் அரசர் ஏறியிருந்த கப்பலோடு பறந்து சென்றன. அரசரும ராணியும் கலேயிலிருந்து பாரிஸுக்குப்போய் ப்ரெஞ்ச் ப்ரெஸிடெண்டாலும் மற்ற உத்யோகஸ்தர்களாலும் உபசரிக்கப்பட்டார்கள். ப்ரெஞ்ச் ப்ரெஸிடெண்டாகிய மான்ஷ்யர் பாயின்கரே ஜார்ஜ் அரசருக்கு ஒரு விருந்துக் கச்சேரிவைத்து உபசரித்தார். அந்த விருந்தில் ப்ரெஸிடெண்ட் பாயின்கரே இரண்டு தேசத்தின் ஸ்நேக பாவத்தைப்பற்றி ச்லாகித்துப் பேசினார்.

22-தேதி.

ஜார்ஜ் அரசரின் ப்ரான்ஸ் ப்ரயாணம்.—இன்றையதினம ஜார்ஜ் அரசரும், ப்ரெஸிடெண்ட்

பாயின்கரேயும் அவர்களைச் சேர்ந்தவர்களும் பாரிஸுக்குப் பக்கத்திலுள்ள வின்ஸின்ஸ் என்னுமிடத்துக்குப்போய் ஸைன்யங்களைப் பார்வையிட்டார்கள்.

23-தேதி.

பாங்காக்கில் தீவிபத்து.—ஸயாமின் ராஜதானி பட்டணமாகிய பாங்காக்கில் இன்று ஒரு பெரிய தீவிபத்து நேரிட்டது. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இருக்க நிழலின்றித் தவிக்கிறார்கள். பட்டணத்தில் அரை சதுரமைல் விஸ்தீரணம் நெருப்புக்கு இரையாயிற்று.

24-தேதி.

ஜார்ஜ் அரசரின் ப்ரான்ஸ் ப்ரயாணம்.—ஜார்ஜ் அரசரும் மேரி ராணியும் இன்றையதினம் பாரிஸைவிட்டுப் புறப்பட்டு கலே பட்டணத்தின் மார்க்கமாய் லண்டனுக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்கள்.

தென்னிந்திய ரெயில்வே.-தென்னிந்திய ரெயில்வே கம்பெனியார் 15-இஞ்ஜின்கள் செய்து கொடுக்கும்படி ஒரு ஜெர்மன் கம்பெனிக்கு ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள். இந்த ஆர்டரை அடையப் போட்டிபோட்ட இங்க்லீஷ் கம்பெனிகளும் அமெரிக்கக் கம்பெனிகளும் விலை விகிதத்தை அதிகமாகச் சொன்னதோடு, சீக்ரம் செய்து கொடுக்கவும் ஸம்மதப்படவில்லையாம். ஜெர்மன் கம்பெனியின் விலை ரேட்டுகள் குறைவா யிருந்ததோடு, எஞ்ஜின்களை சீக்ரம் செய்து கொடுக்க ஸம்மதப்பட்டதால் ஷை ஆர்டர் அந்த கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டது.

28-தேதி.

கடல் கொள்ளை.—கியௌ என்னும் இடத்துக்குப் பக்கத்தில் சீனக்கடலில் போய்க்கொண்டிருந்த ப்ரிட்டிஷ் கப்பலில் கடல் கொள்ளைக்காரர்கள் புகுந்து கொள்ளையிட்டுக் கப்பலுக்கு நெருப்பு வைத்துவிட்டார்கள். 180-ப்ரயாணிகள் போனவழி தெரியவில்லை. 158-ப்ரயாணிகள் அந்தப்பக்கம் போய்க்கொண்டிருந்த கப்பல்களால் காப்பாற்றப்பட்டார்கள்.

29-தேதி.

கனடாவில் ஆசியாவாஸிகள்.—கனடாவின் மேல்பாகமாகிய ப்ரிட்டிஷ் கொலம்பியாவில் தொழிலாளிகள் அதிகமாயிருப்பதால் சீனதேசத்து வேலையாட்களை மேமாஸம் 21-தேதி முதல் ஸெப்டம்பர் மாஸம் 30-தேதி முடிய கனடாவின் மேற்குக் கரையில் இறங்கவிடக் கூடாதென்று கனடா கவர்ன்மெண்ட் அதிகாரிகள் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

பெஸண்ட் கேஸ்.—ப்ரிவி கௌன்ஸிலின் ஜுடிஷியல் (நீதிவிசாரணைக்) கமிட்டியார் இன்றையதினம் பெஸண்ட் கேஸ் அப்பீலை விசாரிக்கத் தொடங்கினார்கள்.

6-தேதி.

அல்பானியா.—அல்பானியாவிலுள்ள கோட்ரா என்னும் ஊரில் க்ரேக்கர்கள் 200 அல்பானிய மகமதியர்களைக் கொன்று அந்த ஊரிலுள்ள கோவில்களுக்கு நெருப்பு வைத்துக் கொளுத்திவிட்டார்கள்.

7-தேதி.

தென்னாப்ரிக்கா இந்தியர்கள்.—ஜோகன்னஸ்பர்க்கிலுள்ள மகம்மதியர்களின் டெபுடேஷன் ஒன்று தென்னாப்ரிக்கா கவர்ன்மெண்ட் மந்த்ரிகளில் ஒருவராகிய ஜெனரல் ஸ்மட்ஸைப் போய்க்கண்டு கொண்டதில், ஜெனரல் ஸ்மட்ஸ், தென்னாப்ரிக்கா இந்திய கமிஷனின் ப்ரேரணைகளை பொதுவாய் அநுஸரித்து சட்டம் செய்யப்படுமென்றும், கல்யாண ஏற்பாட்டைப்பற்றிய தகரார் த்ருப்திகரமாய் முடிவு செய்யப்படு மென்றும், இந்தியர்களுக்கு விரோதங்கள் செய்ய வேண்டு மென்பது கவர்ன்மெண்டார் நோக்கமில்லை யென்றும் சொன்னார்.

9-தேதி.

டென்மார்க் அரசர்.—டென்மார்க் அரசரும், ராணியும், ஜார்ஜ் அரசரையும் மேரி ராணியையும் பார்த்துவிட்டுப் போவதற்காக இன்று லண்டனுக்கு வந்தார்கள். லண்டன் ஸ்டேஷனில் டென்மார்க் அரசரையும் ராணியையும் ஜார்ஜ் அரசரும், மற்றும் ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர்களும் வரவேற்று உபசரித்தார்கள். டென்மார்க்கு அரசருக்காக இன்று ஒரு விருந்துக் கச்சேரி நடை பெற்றது.

11-தேதி.

காங்க்ரேஸ் டெபுடேஷன்.—இந்தியர்களுடைய குறைகளைப்பற்றி இங்கலண்டில் தெரிவிப்பதன் பொருட்டு இந்தியன் நாஷனல் காங்க்ரெஸின டெலிகேட்டுகளாகப் போயிருக்கும் மெஸர்ஸ் பி. என். சர்மா, ஜே. ஏ. ஜின்னு, என். எம். ஸமார்த், மஸருல் ஹக், எஸ். ஸின்ஹா முதலியவர்களின் டெபுடேஷன் இந்தியா மந்த்ரியாகிய லார்ட் க்ரூவை கண்டு பேசினார்கள். அந்த ஸமயம் இங்கலண்டிலுள்ள இந்தியா கௌன்ஸிலின் அமைப்பைப் பற்றி முக்யமாய்ப் பேசப்பட்டது.

13-தேதி.

தென்னாப்ரிக்கா இந்தியர்கள்.—இப்போது நடந்துவரும் தென்னாப்ரிக்கா பார்லிமெண்டு மூடுவதற்கு முன்னாலேயே இந்தியர்களைப் பற்றிய சட்டத்தை பார்லிமெண்டில் கொண்டு வருவதாக ஜெனரல் ஸ்மட்ஸ் தெரிவித்திருக்கிறார்.

15-தேதி.

ஸ்த்ரீ ஸ்வதந்த்ர வாதிகள்.—ஸ்த்ரீ ஸ்வதந்த்ரவாதிகள் இப்போது புதுமுறைகள் கையாடி வருகிறார்கள். அவர்கள் கோர்ட்டுகளுக்குள் போய் கூச்சலிட்டு கோர்ட்டு நடவடிக்கைகளைத் தடை செய்கிறார்கள்.

18-தேதி.

எல்லா தேச போஸ்டேஜ் விகிதம்.—நாளது வரையில் ஒரு தேசத்திலிருந்து இன்னொரு தேசத்துக்குக் கடிதம் அனுப்புவதாயிருந்தால் ஒவ்வொரு கடிதத்துக்கும் 2½-ஸ்டாம்பு ஒட்ட வேண்டியிருக்கிறது. இந்தியாவிலிருந்து இங்கலண்டுக்கும், இங்கலண்டிலிருந்து இந்தியாவுக்ும் இன்னம் சில நாடுகளுக்கும் மாத்ரந்தான் கடிதங்களுக்கு ஒரு அணு ஸ்டாம்பு ஒட்டலாம். 2½-அணுவாக விருக்கும் விகிதத்தை 1½-அணுவாக மாற்ற அநேக தேசங்கள் ஸம்மதித்திருக்கின்றனவாம். இன்னம் சில தேசங்கள் ஒரு அணுவே போதுமென்கின்றனவாம். வரும ஸெப்டம்பர்மாஸத்தில் கூடப் போகிற ஸர்வதேச கான்பரென்ஸில் போஸ்டேஜ் விகிதத்தை 1½-அணுவாகக் குறைத்து விடுவது நிச்சயமென்று லண்டன ஸ்டாண்டர்டு பத்ரிகை தெரிவிக்கிறது.

ஜப்பானுக்கு புது விபத்து.—ஜப்பானில் பஞ்சமும், எரிமலையும் ஜனங்களைக் கஷ்டப்படுத்தினதுபோதாதென்று அக்னியுமதனது ஸாமர்த்யத்தைக்காட்ட ஆரம்பித்திருக்கிறது. ஹோக்காய்டோ தீவைச் சேர்ந்த கிடாமி மாகாணத்தில் 6 மைல் நீளம் 6 மைல் அகலமுள்ள ப்ரதேசத்தில் காடுகளில் தீப் பிடித்துக் கொண்டு ஏராளமான நஷ்டத்தை யுண்டு பண்ணிவருகிறது. ஜல கஷ்டத்தால் நெருப்பை யவிக்க முடியாமல் ஜனங்கள் கஷ்டப்படுகிறார்களாம். இதுவரையில் 13 பேர் நெருபபுக்கு இரையாகி யிருக்கிறார்களாம்.

22-தேதி.

ஒரு புது திபேத்திய உடன்படிக்கை.—ஸிம்லாவில் கூடியிருக்கும் ப்ரிட்டிஷ் டெலிகேட்டுகளும் சீன டெலிகேட்டுகளும திபேத்து விஷயமாய் ஒரு புதிய உடன்படிக்கை செய்யப்போகிறார்கள். அந்த உடனபடிக்கையின் படி திபேத்தின தலைமைப்பட்டணமாகிய லாஸ்ஸாவில் சீன ப்ரதிநிதிகளும் ப்ரிட்டிஷ் ப்ரதிநிதிகளும் நியமிக்கப்பட வேண்டுமெ

ன்றும், திபேத்தின் வெளிப்பாகம் சீனாவின் ஆதீனத்துக்கு உள்பட்டிருக்க வேண்டுமென்றும் ஏற்படும்.

25-தேதி.

அனி பெஸண்ட் கேஸ்.—மிஸ்டர் நாராயணய்யாவின் புத்ரர்களுடைய கார்டியன்ஷிப் பாத்யதை தமக்குக்கிடையாதென்று சென்னை ஹைகோர்ட்டார் செய்த தீர்ப்புக்கு விரோதமாக மிஸ்ஸஸ் அனிபெஸண்ட் ப்ரிவி கௌன்ஸிலுக்குச் செய்திருந்த அப்பீலில் இன்று தீர்ப்புச் சொல்லப்பட்டது.

இங்க்லண்டிலுள்ள சிறுவர்களைப்பற்றி விசாரிக்க சென்னை ஹைகோர்ட்டுக்கு அதிகாரமில்லையென்றும், மிஸ்டர் நாராயணய்யா தமது புத்ராகளின் கார்டியன்ஷிப்பு பாத்யதையைப் பற்றி இங்க்லண்டிலுள்ள ஹைகோர்ட்டுக்கு மனுசெய்து கொள்ளலாமென்றும் ப்ரிவி கௌன்ஸிலின் ஜுடிஷியல் கமிட்டியார் அபிப்ராயப் பட்டார்கள்.

26-தேதி.

டெர்பி பந்தய ஓட்டம்.-சென்றவர்ஷம் டெர்பி குதிரைப் பந்தய ஓட்டத்தில் ஸ்த்ரீஸ்வதந்தரவாதிகள் அக்ரமங்கள் செய்ததுபோல இந்த வர்ஷமும் அக்ரமங்கள் செய்வார்களோ என்று எண்ணி போலீஸார் பந்தய ஓட்டம் நடக்குமிடத்தில் வேண்டிய பந்தோபஸ்துகள் செய்திருக்கிறார்கள். 3000 போலீஸ்காரர்கள் பந்தய ஓட்டம் நடக்குமிடத்தைப் பாதுகாப்பார்கள். அரசரின் குதிரையைச் சுட்டுவிட வேண்டுமென்று ஸ்த்ரீ ஸ்வதந்தரவாதிகளுக்குள் ஒரு ஸ்தியாலோசனை நடந்து வருகிறதாம்.

SEASON.

காலஸ்திதி.

Rainfall.

மழை.—1914ஞு ஏப்ரல்மீ 1உயிலிருந்து 1914ஞு மேமீ 31உ வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்க வேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் கணக்காகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

மழை பெய்த ஊரின் பெயர்.	பெய்த மழை அங்குலம்.	பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம்.
கோபால்பூர்	7·55	2·73
வால்டேர்	4·46	3·17
காக்கிநாடா	5·57	1·78
மசூலிப்பட்டணம்	3·32	1·80
நெல்லூர்	2·34	1·10
மதராஸ்	2·06	1·69
கூடலூர்	1·91	1·43
நாகப்பட்டணம்	1·50	2·50
பாம்பன்	1·08	2·76
கொழும்பு	18·04	20·97
திருவநந்தபுரம்	13·80	13·39
கொச்சி	11·80	16·60
கள்ளிக்கோட்டை	4·34	11·65
மங்களூர்	3·25	7·74
மெர்க்காரா	4·14	8·39
ஐதராபாத்	2·41	1·84
பல்லாரி	1·66	2·89
கர்நூல்	1·88	1·66
கடப்பை	2·59	2·11
ஹராஸவரன்	3·08	7·58
பெங்களூர்	7·12	5·71
கொடைக்கானல்	14·73	10·14
உதகமண்டலம்	6·97	10·24
கோயம்புத்தூர்	0·70	4·14
வேலூர்	4·37	3·77
சேலம்	4·02	6·98
திருச்சிநாப்பள்ளி	2·08	5·01
புதுக்கோட்டை	4·16	3·68
மதுரை	3·05	5·12
திருநெல்வேலி	0·83	4·39

Calendar—பஞ்சாங்கம் *

அம்ருதாதி	லக்ன பாக்கி		அகர்மாந		துலு	இங்	தமி	வாரம்	48-ஆநந்த ஹுஆனிமீ— உத்தராயணம்-க்ரீஷ்மருது { ஜயேஷ்டம் ஆஷாடம் } கொலலம்-1089 பஸலி-1823-24 { இங்கிலீஷ் - 1914 ஜூன்-ஜூலை } ஹிஜுரி-1332 ரஜ்ஜப்-ஷாபான்
யோக	கா	வி	கா	வி	உ	உ	உ		
சி	5	32	31	34	19	14	1	ஞா	ஸப்-60-0,சத-39-24,விஷ்-7-53,பத்-30-2,ரா-25-28, மிதுனரவி23-51,மிதுனசூன்யதி, ஷடசீதிபுண்யகால, த்ரி தினஸ்பிருக்,(ரங்கூனில் இல்லை),மித்ரஸப்தமீ, கரிநாள், வமார்க்கம்
சி		22		35	20	15	2	தி	ஸப்-2-16,பூட்-45-55,பிரீ-8-56பால-34-51,சே-1-2,மிதுனசூன்யதி,காலாஷ்டமீ
அசி		11		35	21	16	3	செ	அஷ்-7-42, உட்53-19,ஆயு-10-56,தை-40-43,தி-12-48, மிதுனநவமீதி
உ		1		35	22	17	4	பு	நவ-13-49,ரே-60-0,ஸவு-13-27,வணி-46-57, தி-27-9,தசமீதி
சிஅ	4	5[illegible]		35	23	18	5	வி	தச-20-2,ரே-1-0சோ-16-3,பவ-52-59, ரா-25-35, அதிதி [கரிநாள்
அசி		40		35	24	19	6	வெ	ஏகா-25-46,அசு-8-21,அதி-18-18,கவு-58-19,சே-1-10,ரா-3-30,ஏகாதசீதி,ஸர்வஏகா,
சிஅ		30		36	25	20	7	ச	த்வா-30-35,டர-14-53,சுக-19-52,தை-30-35,ரா-16-14,சனிப்ரதோஷ,கிருத்திகை
சி		19		36	26	21	8	ஞா	த்ர-34-16,கிரு-20-26,திரு-20-36,சர-2-35,மாஸஸிவரா [போதாயன அமா
அ		9		36	27	22	9	தி	சசி-36-40,ரோ-24-42,சூல-20-20,பத்-5-37,தி-3-25,ரா-7-58,கடகாயன-15-55,
சிம	3	58		36	28	23	10	செ	● 37-49,மிரு-27-46,கண்-19-5,சது-7-23,ரா-18-0,அமாதி,பிண்டபிதிரு,புஷ்சனா
சி		48		36	29	24	11	பு	ப்ர-37-50,திரு-29-41,விரு-16-55,கிம்-7-58,ஆஷாடசுத்த,இஷ்டி,சந்திரதர்சனம்,(சந்திராஸ்தம்இரவு-2-12)இரா
அ		37		35	1	25	12	வி	த்வி-36-49,புன-30-36,துரு-13-54,பால-7-27, தி-0-16,ரா-19-7,திவாமா [மா
உம		27		35	2	26	13	வெ	த்ரி-34-55,பூச-30-36,வியா-10-8,தை-5-58,
மஅ		17		35	3	27	14	ச	சது-32-12,ஆயி-29-49,ஹர்-5-41,வணி-3-39,தி-2-16,ரா-27-34,சதுர்த்தீவிருதம்
மசி		6		35	4	28	15	ஞா	பஞ்-28-47,மக-28-19,வஜ்-0-38,உப-54-24,பவ-0-34,கவு-56-49,சே-3-9,ரா-16-5,மாணிக்கவாசகர் [ஸ்ரீ தினயஞா
சி	2	56		35	5	29	16	தி	ஷஷ்-24-42,பூர-26-9,விய-48-54,கர-52-26,ரா-11-48,ஷஷ்டீதி,அப-அந்தம் 25-16, வியசிரா,ஷஷ்டியுப, அமர
அசி		45		34	6	30	17	செ	ஸப்-19-59,உத்-23-21,வரீ-42-16,பத்-47-24,ரா-11-40,திதிதுவய,அப-அதி-18-56,ஆனித்திருமஞ்சனம்
மசி		35		34	7	1	18	பு	அஷ்-14-41,ஹஸ்-20-0,பரி-35-10,பால-41-50,ரா-7-12,நவமீதி,புதாஷ்டமீ
சிஅ		24		34	8	2	19	வி	நவ-8-52,சித்-16-7,சிவ-27-42,தை-35-49,தி-29-9,வைவஸ்வதமன்வாதி [ம்ப,கோபத்மவிருத அவம
சி		14		34	9	3	20	வெ	தச-2-40,உப-53-36,சுவா-11-52,சித்-19-56,வணி-29-29, தி-24-51,ஸ்மார்த்தசயனஏகா, சாதுர்மாஸ்யவிருதார
சி		4		33	10	4	21	ச	த்வா-49-54,விசா-7-28,சாத்-12-4,பவ-28-1,தி-16-14,வைஷ்ணவசயனஏகா,சாகவிருதம்
மமஅ	1	53		33	11	5	22	ஞா	த்ர-43-48,அனு-3-8,உப-56-2,சுப-4-17,உப-52-82,கவு-16-47,தி-16-10,பரதோஷம்
சிஉ		43		33	12	6	23	தி	சசி-38-20,மூல- 55-56,பிரா-50-1,கர-10-56,தி-17-59,ரா-20-35,
சிபி		32		32	13	7	24	செ	○-33-48,பூரா-53-45,மா-43-51,பத்-5-56,தி-18-55,மன்வாதி,வியாஸபூஜை,ஆகாமாவை,கோகிலாவிருதம்
அசி		22		32	14	8	25	பு	ப்ர-30-32,உரா-52-53,வை-38-51,பால-1-59,தை-59-27,தி-13-17,ஆஷாடபகுள,இஷ்டி,வைசிரா,இராமா
சி		11		31	15	9	26	வி	த்வி-28-48,திரு-53-38,விஷ்-35-6,வணி-58-34,தி-2-53,சிரவணஉப,திவாமா
சி		1		31	16	10	27	வெ	த்ரி-28-49,அவி-56-7,பிரீ-32-44,பவ-59-17,தி-3-55,சங்கடசதுர்த்தீ
அ	0	51		30	17	11	28	ச	சது-30-33,சத-60-0,ஆயு-31-47,பால-30-33,தி-15-12,
சி		40		29	18	12	29	ஞா	பஞ்-33-59,சத-0-17,ஸவு-32-7,கவு-2-4,தி-17-41,
சி		30		29	19	13	30	தி	ஷஷ்-38-47,பூட்-5-59,சோ-33-31,கர-6-14,ரா-1-9,
அசி		19		28	20	14	31	செ	ஸப்-44-30,உட்-12-48,அதி-35-39,பத்-11-33,ரா-15-2,மிதுனஸப்தமீதி,கலிக்காமர் [ஷ்டமி
உம	0	9	31	28	21	15	32	பு	அஷ்-50-35,ரே-20-14,சுக-38-8,பால-17-32,கடகரவி-50-50, மிதுனஷ்டமீதி,தக்ஷிணாயனபுண்யகால, காலா

		சனி	ர பு
ரா	1-கட சு 6-மிது-சனி 7-கட-பு 26-சிம்-சு		சு
குரு			செ கே

* இது திருக்காட்டுப்பள்ளி ஸப் ரெஜிஸ்ட்ரார் ம-ா-ா-ஸ்ரீ டி. எஸ். விசுவநாத சரொவர்கள் ப்ரசுரம் செய்யும் கும்பகோணம் மடத்துப் பஞ்சாங்கத்தை யநுஸரித்தது.